www.tamilarangam.net

# எழுதாத வரலாறு

## இலங்கை திராவிடர் இயக்கம் பற்றிய ஆய்வு

பெ. முத்துலிங்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

SEELAN BOOKS NORWAY SIGNATURE

# எழுதாத வரலாறு

## இலங்கை திராவிடர் இயக்கம் பற்றிய ஆய்வு

பெ. முத்துலிங்கம்

இலங்கை சமூக அபிவிருத்தி நிறுவகம்
08, முல்கம்பள தெரு,
கண்டி.

SEELAN BOOKS NORWAY SIGNATURE

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எழுதாத வரலாறு
இலங்கை திராவிடர் இயக்கம் பற்றிய ஆய்வு

முதற்பதிப்பு ஒக்டோபர் 15, 1996

பெ. முத்துலிங்கம்

விலை : ரூ 100.00

அச்சுப்பதிவு : கிரபிக்லேண்ட் - கண்டி

An Unwritten History

A study on Ceylon Dravidar Movement

Published in October 15, 1996

P. Muthulingam ©

Price : Rs. 100.00

ISBN 955 - 9391 - 00 - 3

Printed by : Graphic Land, Kandy.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சமர்ப்பணம்

இந்துக்கள் மத்தியில் நிலவும் சாதி ஒடுக்கு முறைக்கு எதிராக குரலெழுப்பிய டாக்டர். பாபா சாகேப் அம்பேத்கர் அவர்களுக்கும், தந்தை ஈ. வெ. ரா. பெரியார் அவர்களுக்கும், மற்றும் இலங்கையிலும் இந்தியாவிலும் சாதிக் கொடுமைக்கு எதிராக குரலெழுப்பியவர்களுக்கும். அதற்காக உயிர்நீத்த போராளிகளுக்கும் இந்நூலை சமர்ப்பணமாக்குகின்றோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பதிப்புரை

சமூக அபிவிருத்தி நிறுவகத்தின் வெளியீட்டுத் துறையின் முதலாவது வெளியீடாக வெளிவரும் பெ. முத்துலிங்கம் எழுதிய எழுதாத வரலாறு என்கிற அரசியல் வரலாற்று ஆய்வு நூல் மறக்கவும், மறைக்கவும்பட்ட இலங்கை திராவிடர் இயக்கம் பற்றிய ஓர் ஆதார பூர்வமான நூலாகும்.

இந்திய வம்சாவளியினர் மத்தியில் இலங்கை திராவிடர் முன்னேற்றக்கழகம் எத்தகைய சாதனைகளை செய்துள்ளது என்பது இன்றைய இளைய தலைமுறையினருக்கு தெரிந்திருக்கமுடியாது. அதனை தோழர் பெ. முத்துலிங்கம் வெளிச்சத்திற்கு கொண்டுவந்துள்ளார்.

இந்த இயக்கத்தின் வரலாற்றை விமர்சன பூர்வமான வரலாற்று ஆய்வு நூலாக, இந்நிறுவகத்தின் வெளியீட்டு துறையின் முதல் நூலாக கொண்டுவருவதில் நாம் அனைவரும் ஒரு வரலாற்று சிறப்புக்குறிய பணியினை செய்துள்ளோம் என்பதில் மகிழ்ச்சியைடகின்றோம். இந்த வெளியீட்டு பணிகளில் உதவிய அனைவருக்கும் நன்றிக்கூறுகின்றோம்.

அந்தனிஜீவா,
பதிப்பாசிரியர்

சமூக அபிவிருத்தி நிறுவகம்
இல. 8 முல்கம்பல பாதை
கண்டி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# என்னுரை

ஓர் இனம் அல்லது இனக்குழுமம் தமது தனித்துவத்தை நிலை நிறுத்த முனைகையிலேயே தம் கலாசாரம், மொழி, மற்றும் சமூக வாழ்வியல் தொடர்பான வரலாற்று ஆதாரங்களை நூல் வடிவில் வெளிக் கொணரும் முயற்சியில் ஈடுபடுகின்றது. அதிலும் குறிப்பாக குறிப்பிட்ட இனம் பிற இனத்தால் ஒடுக்கப்படுகின்ற அல்லது இரண்டாம் தரமாக கணிக்கப்படுகிற வேலையிலே தமது தனித்துவத்தை நிலைநாட்டுவதில் வேகமாக செயற்படுகின்றது. இலங்கையின் இரு பெரும் தேசிய இனங்களான சிங்கள இனமும், இலங்கை தமிழ் இனமும் பிரித்தானியரின் ஒடுக்குதலுக்குட்பட்டிருந்த காலத்திலேயே தமது தனித்துவத்தை நிலைநிறுத்தும் முயற்சியில் ஈடுபட்டன. நாட்டின் தேசிய சிறுபான்மை இனங்களான முஸ்லிம்களும், இந்திய வம்சாவளி மலையகத் தமிழரும் மிக அண்மையிலேயே தமது தனித்துவத்தை நிலைநிறுத்தும் முயற்சியில் ஈடுபடலாயினர். அதிலும் குறிப்பாக மலையகத் தமிழர் எண்பதுகளின் பிற்பகுதியிலேயே தமது தனித்துவத்தை நிலைநிறுத்தும் முயற்சியில் அதிக அக்கறை காட்டலாயினர்.

பிரித்தானியரால் தோட்டத்துறையில் வேலைக்கமர்த்துவதற்காக கொண்டு வரப்பட்ட தென்னிந்திய தமிழ் தொழிலாளர்கள் நூற்றியெழுபத்தைந்து வருட வரலாற்றை கொண்டிருந்த போதிலும், தாம் எந்த நாட்டிற்கு சொந்தமானோர் என்பதைக் கண்டறிவதில் வரலாற்றில் பெரும் பகுதியைக் கழித்து விட்டனர். இத்தேடலே இவர்களது தனித்துவத்தை, நிலைநிறுத்துவதில் தாமதத்தை ஏற்படுத்தியது. தமக்கென நாடொன்று இல்லாதோர் எவ்வாறு தனித்துவத்தை நிலைநிறுத்துவதில் அக்கறை காட்ட முடியும். எவ்வாறாயினும் எண்பதுகளில் முனைப்படைந்த வடகிழக்குத்தமிழ் மக்களின் தேசிய சுய நிர்ணய போராட்டம் மற்றும் குடியுரிமை தொடர்பாக ஏற்பட்ட பரிமாற்றங்கள், என்பன இம்மக்கள் தம் தனித்துவத்தை நிலைநிறுத்த உந்து சக்தியாக அமைந்தன. இது நாள்வரை வெளிவந்த பல நூல்கள் இம்மக்களது ஆரம்ப வருகை தொடர்பான வரலாற்றினையும், தொழிற்சங்கப் போராட்ட வரலாற்றினையும் உள்ளடக்கியதாக காணப்பட்டன. ஐம்பதுகளின் பிற்பகுதி முதல் இம்மக்களைப் பற்றிய வரலாற்று நூல்கள் ஒருசில வெளிவர ஆரம்பித்த போதிலும் எண்பதுகளிலேயே பல்வேறு நூல்கள் வெளிவர ஆரம்பித்தன. இவற்றுள் பெரும்பாலானவை தலைவர்களினது சொந்த வரலாற்றினை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கருப்பொருளாகக் கொண்டமைந்தனவாகவே காணப்படுகின்றன. ஆனால் இலங்கை நாடு சுதந்திரமடைந்தவுடன் சுதந்திரமற்றவர்களாக்கப்பட்டு நாடற்றவர்களாக்கப்பட்ட இம்மக்கள் தம் சுதந்திரத்திற்காக போராடிய வரலாற்றினைப் பற்றிய நூல்கள் வெளிவரவில்லை.

மலையக மக்களைப் பொறுத்தமட்டில் 1948ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட பிரஜாவுரிமை சட்டத்தின் மூலம் குடியுரிமை பறிக்கப்பட்டதுடன் நாட்டின் ஏனைய மக்கள் அனுபவிக்கும் உரிமைகள், சலுகைகள் என்பனவற்றிலிருந்து இம்மக்கள் ஒதுக்கி வைக்கப்பட்டனர். இவ்வாறு ஒதுக்கப் பட்டமைக்கெதிராக அவர்கள் மத்தியில் செயற்பட்ட தொழிற்சங்கங்களும், இடதுசாரிக்கட்சிகளும் சொல்லளவில் எதிர்ப்பை காட்டின. மாறாக இவ்வுரிமையை வென்றெடுப்பதற்காக எவ்வித போராட்ட நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை.

தாம் எந்த நாட்டைச் சார்ந்தோர் என்பதனை தீர்மானிக்க முடியாமல், நான்கு தசாப்தங்களைக் கழித்து விட்ட இம்மக்கள், தமது அடிப்படை மனித உரிமைக்காக குரலெழுப்பவில்லையா? போராடவில்லையா? அல்லது உரிமைக்காகப் போராட இவர்கள் மத்தியில் எந்தவொரு இயக்கமும் தோன்றவில்லையா? என்ற கேள்வி இயற்கையாகவே எழலாம். காலனித்துவ வாதிகளினால் தமது. காலனிகளில் அறிமுகப்படுத்தப்பட்ட தோட்டத்துறைகளுக்கு, பிறிதொரு காலனியைச் சார்ந்த தொழிலாளர்களே அடிமைகளாகக் கொண்டு செல்லப்பட்டனர். அவ்வாறு கொண்டு செல்லப்பட்ட மக்கள் குறிப்பிட்ட நாட்டின், தேசிய நீரோட்டத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டனர். ஒரு சில தசாப்தங்களுக்குள் இம்மக்கள் ஒதுக்கலுக்கும், ஒடுக்குதலுக்கும், எதிராக போராட ஆரம்பித்ததுடன், தேசிய நீரோட்டத்தில் இணைவதில் வெற்றி கண்டனர். குறிப்பாக அமெரிக்க லத்தீன் அமெரிக்க நாடுகளில் குடியமர்த்தப்பட்ட கறுப்பின மக்களே இவ்வாறு வெற்றிகண்ட பிரிவினராவர்.

அமெரிக்க கறுப்பின மக்களைப் போன்று இலங்கைவாழ் இந்திய தமிழ் தோட்டத்தொழிலாளர்கள் தொடர்ச்சியான பாரிய போராட்டங்களை முன்னெடுக்காவிட்டாலும், அடிப்படை மனித உரிமை மறுப்புக்கும் ஒடுக்குதலுக்கும் எதிராக போராட்டங்களை மேற்கொண்டனர். ஒடுக்குதலுக்கு எதிராக குறிப்பாக தொழிற்சங்க ஒடுக்கலுக்கு எதிராக காலத்திற்கு காலம் போராடி வந்துள்ளனர். அதேவேளை அடிப்படை உரிமையான குடியுரிமைக் கோரியும் போராட்டங்களை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மேற்கொண்டுள்ளனர். இப்போராட்டம் தொழிற்சங்கங்களினால் முன்னெடுக்கப்பட வில்லை.

மலையகத்தில் இன்று தொழிற்சங்கங்கள் பல்கிப் பெருகியுள்ளன. ஒவ்வொரு தொழிற்சங்கமும் , தொழிற்சங்க உரிமைகளுக்காக பல போராட்டங்களை மேற்கொண்டுள்ளது. ஆனால் அடிப்படை மனித உரிமையான குடியுரிமைக்காக மக்கள் போராட்டத்தினை முன்னெடுக்கவில்லை. இருந்தபோதிலும் மலையகத்தில் தொழிற்சங்கரீதியில் செயற்படாத பிறிதொரு இயக்கம் இப்போராட்டத்தை முன்னெடுத்தது. தொழிற்சங்கங்களில் அங்கம் வகித்துக் கொண்டே தமது அடிப்படை மனித உரிமைக்காக குரலெழுப்பும் இவ் இயக்கத்தின் கீழ் அணிதிரண்ட மலையகத் தோட்ட தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். மூன்று தசாப்தங்களுக்கதிகமாக மலையக மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றிருந்த இலங்கை திராவிடர் முன்னேற்றக் கழகமே இப்போராட்டத்தினை முன்னெடுத்தது. ஆனால் இவ்வரலாறு வெளிக்கொணரப்படவில்லை. மலையக வரலாற்றினைப்பற்றி எழுதிய நூல்களும் இதனை உள்ளடக்கவில்லை. இதனை வெளிக்கொணர்வது இன்றைய யுகத்தின் தேவையாகும் இத்தேவையின் வெளிப்பாடே எழுதாத வரலாற்றின் உருவாக்கம்.

மலையக மக்கள் மத்தியில் அறியாமையும் எழுத வாசிக்க தெரியாத நிலையும், கோலோச்சிய காலகட்டத்திலேயே இலங்கைத் திராவிடர் கழகம் மக்கள் மத்தியில் செயற்பட ஆரம்பித்தது. தமிழகத் திராவிட இயக்கப் பாரம்பரியத்தைக் கொண்ட இலங்கைத் திராவிடர் முன்னேற்றக்கழகம், தமிழகத் திராவிடர் இயக்கத்தினைப்போல் மலையக மக்கள் மத்தியில் நிலவிய சாதியத்தையும், அறியாமையையும் களையும் பணியில் ஈடுப்பட்டது. நாளடைவில் சாதிய கொடுமை நிலவிய வடகிழக்கு பகுதிக்கும் வியாபித்தது ஆரம்பத்தில் சாதியத்தையும், அறியாமையையும் களைவதில் ஈடுபட்ட இ. தி. மு. க மலையக மக்களின் அடிப்படை உரிமையான, குடியுரிமைப் பிரச்சினையையும், அதனைத் தொடர்ந்து அனைத்து தமிழ் பேசும் மக்களும் முகம் கொடுத்த மொழிப்பிரச்சினை தொடர்பாகவும், குரலெழுப்பியதுடன் மக்கள் போராட்டங்களை முன்னெடுத்து யுகத்தின் தேவைக்கேற்ப தம்மை நெகிழ்வுப்படுத்தி எழுபதுகளில் தம்மை அரசியற் கட்சியாகப் பிரகடனப்படுத்திக் கொண்டதுடன், இடதுசாரி அரசியலைப் பின்பற்றியது. நாட்டில் தமிழ் தேசிய வாதம். வலுப் பெறுவதற்கு துணை நின்ற இ. தி. மு. க தமிழ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தேசிய வாதம் உயர் கட்ட நிலையை அடையும் வேளையிலேயே இடதுசாரி அரசியலைக் கடைப்பிடித்தது. இந்நிலைப்பாடு அதன் வீழ்ச்சிக்கு வழிகோலியது.

இ. தி. மு. க தமது பரிணாம வளர்ச்சியின் உயர்கட்டமாக இடதுசாரி அரசியலைக் கடைப்பிடித்த போதும், தமிழ் பேசும் மக்கள் முகம் கொடுத்த இன ஒடுக்கல் காரணமாக குறிப்பாக இடதுசாரி அரசாங்கம் தமிழ் மக்களின் பிரச்சினையை அணுகிய முறையின் பிரதிபலனாக இடது சாரி அரசியலை கடைப்பிடித்த இ. தி. மு. க தமிழ் மக்கள் மத்தியில் செல்வாக்கிழந்தது.

எனினும் தமது மூன்று தசாப்த வரலாற்றில் மலையக மக்கள் மத்தியில் நிலவிய அறியாமை, சாதிக்கொடுமை, குடியுரிமைமறுப்பு, மற்றும் மொழியுரிமை மறுப்பு என்பவற்றிற்கு எதிராக பல போராட்டங்களை மேற்கொண்டுள்ளது. குறிப்பாக குடியுரிமை மறுப்புக் கெதிராக மேற்கொண்ட போராட்டம் வரலாற்று முக்கியத்துவம் பெற்றதாகும். இப்போராட்டத்தின் தாக்கமே ஸ்ரீமா சாஸ்திர ஒப்பந்தத்திற்கு வழிகோலியது.

இ. தி. மு. க வின் வளர்ச்சிப்படிகளுக்கமைய நூலின் அத்தியாயங்கள் பிரிக்கப்பட்டுள்ளதுடன் அவ்வமைப்பின் தலைவராக வீற்றிருந்த திரு. ஏ. இளஞ்செழியனின் பெயர் தொடர்ச்சியாக இடம் பெறுவதை தவிர்க்கமுடியாது போய்விட்டது.

சிலவேளைகளில் ஒரு சமூகத்தினதோ அல்லது இயக்கமொன்றினதோ வரலாற்றை ஆராய்கையில் சில தனிநபர்களின் முக்கியத்துவத்தை தவிர்க்கமுடியாதுள்ளது. இரண்டு தசாப்தங்களுக்கதிகமாக இ. தி. மு. க வின் தலைவனாக, அமைப்பாளனாக, ஊழியனாக திரு. இளஞ்செழியன் செயற்பட்டுள்ளமையினாலும் மற்றும் அனைத்து தீர்க்கமான முடிவுகளை மேற்கொள்வதில் அவரது பங்கு பெருமளவு ஆதிக்கம் செலுத்தியுள்ளமையினாலும் நூல் முழுவதும் அவரது பெயர் தவிர்க்க முடியாதுள்ளது.

எவ்வாறாயினும் இவ்வாய்வின் இறுதிநோக்கம் மலையகத்தின் மறைக்கப்பட்ட வரலாற்றினை இன்றைய தலைமுறையினர் அறியும் வகையில் வெளிக்கொணர்வதாகும். அதேவேளை மறைக்கப்பட்ட வரலாற்றினை அறிவதன் ஊடாக புதிய வரலாற்றிற்கு வித்திட வேண்டும்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்பது இன்னுமொரு எதிர்பார்ப்பாகும். இன்றைய மலையகத்தின் அரசியல், சமூக, பொருளாதார, மற்றும் கலாசார உரிமைகளை வென்றெடுக்க வேண்டுமாயின் இ. தி. மு. க வினைப் போன்ற ஓர் வெகு ஜன அமைப்பினை மலையகத்தில் உருவாக்குவது வரலாற்றுத் தேவையாக உள்ளது.

ஏனெனில் இ.தி.மு.க எவ்வுரிமைகளுக்காக மக்கள் போராட்டத்தை முன்னெடுத்ததோ, அவ்வுரிமைகள் இதுநாள்வரை மலையக மக்களுக்கு கிடைக்கவில்லை. மலையக மக்களில் ஒரு பிரிவினருக்கு பிரஜாவுரிமை கிடைத்தபோதிலும், அது நாட்டின் ஏனைய பிரஜைகள் கொண்டிருக்கும் உரிமைக்கு சமதையல்ல. இவர்கள் வெருமனே பதிவுப்பிரஜைகளே. எச்சந்தர்ப்பத்திலும் இவ்வுரிமை பறிபோகலாம். எனவே பதிவுப்பிரஜைக்கு பதிலாக ஏனைய பிரஜைகளைப்போல் எம்மையும் நாட்டின் குடிகளாக அங்கிகரிக்க கோருவதுடன், தொடர்ந்து நாடற்றவர்களாக இருக்கும் நான்கு இலட்சத்திற்கு அதிகமாகவுள்ள மலையக மக்களுக்கு குடியுரிமை கோரியும் போராட வேண்டிவுள்ளது. இவ்வரலாற்று தேவையினைப் பூர்த்தி செய்யும் நாயக, நாயகிகளுக்கு இந்நூல் ஓர் ஆதாரமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

இந்நூலினை வெளிக்கொணர்வதற்கான முயற்சிகள் எண்பதுகளின் பிற்பகுதியிலேயே மேற்கொள்ளப்பட்ட போதிலும் தொண்ணூறுகளின் பிற்பகுதியிலேயே வெளிக்கொணர முடிந்தது. இந்நூலுக்கான ஆதாரங்கள் தேசிய சுவடிகள் திணைக்களத்திலிருந்து குறிப்பாக பெரும் ஆதாரங்கள் திரு. ஏ .இளஞ்செழியனின் தூசிப்படிந்த புத்தக அலுமாரியிலிருந்து பெறப்பட்டது. அத்துடன் திரு. ஏ. இளஞ்செழியனுடனும் இ.தி.மு.க வின் மூத்த உறுப்பினர்களுடனும் அவ்வப்போது மேற்கொண்ட கலந்துரையாடலும் நூலின் தோற்றத்திற்கு பேருதவியாக அமைந்தது.

இறுதியாக இந்நூலை எழுத ஆரம்பித்த நாள் முதல் கையழுத்துப் பிரதியை சரிபார்ப்பதுடன் அவ்வப்போது ஆலோசனை வழங்கிய செல்வி. க. மேனகா, அந்தோனி ஜீவா மற்றும் நூலின் அச்சுப்பிரதியைச் சரிபார்த்த திரு. எல். சண்முகநாதன், திரு. ஜே. ஜேஸ்கொடி, திருமதி. யோகலட்சுமி முத்துலிங்கம், சமூக அபிவிருத்தி நிறுவனத்தைச் சார்ந்த செல்விகள் கி.யோகேஸ்வரி, வே. லக்ஷ்மி, வீ. ஜோதிலக்ஷ்மி, சிங்கள மொழியில் அச்சுப்பிரதியை சரிபார்த்த திரு. நிஹால் ஹெட்டியாராச்சி, செல்வி சின்தா கருணாரட்ன என்போருக்கும் இந்நூலின் வெற்றியில் பங்குண்டு என்பதனை மறுப்பதற்கில்லை.

பெ. முத்துலிங்கம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உள்ளடக்கம்


| இல | | பக்கம் |
|---|---|---|
| 1. | இலங்கை சுயமரியாதை இயக்கத்தின் தோற்றம்............ | 01 |
| 2. | இலங்கை திராவிட முன்னேற்றக் கழகமும். இளஞ்செழியனின் பிரவேசமும்............ | 16 |
| 3. | சிங்கள மொழிச்சட்ட அமுலாக்கலும் தமிழ் தேசியவாதமும்............ | 27 |
| 4. | தமிழரசுக் கட்சித்தலைவர்களின் மலையக பிரவேசமும் இ.தி.மு.க தடையும்............ | 43 |
| 5. | தடைநீக்கமும் நாடற்றோர் மறுப்பு மாநாடும்.... | 52 |
| 6. | ஸ்ரீமா சாஸ்திரி ஒப்பந்தம்............ | 69 |
| 7. | அரசியல் கட்சியாக பிரகடனப்படுத்தல்............ | 77 |
| 8. | இ.தி.மு.கவும் கலை இலக்கிய உலகும்............ | 113 |
| 9. | இளஞ்செழியனின் தனித்துவம்............ | 117 |

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலங்கை சுயமரியாதை இயக்கத்தின் தோற்றம்

இருபதாம் நூற்றாண்டு மானுடவரலாற்றில் ஓர் திருப்பு முனையாகும். சமூகத்தில் நிலவிய பல்வேறு அநீதிகளுக்கு எதிராக புரட்சிகளையும் எழுச்சிகளையும் பிரசவித்த நூற்றாண்டு இதுவாகும். அடிமைத்தனத்திற்கு எதிராக, முடியாட்சிக்கெதிராக, ஏகாதிபத்தியத்திற்கு எதிராக காலனித்துவத்திற்கெதிராக, பாசிசத்திற்கெதிராக இனவாதத்திற்கெதிராக, இராணுவ ஆட்சிக்கெதிராக, அதிகாரத்துவத்திற்கு எதிராக, சாதியத்தியத்திற்கு எதிராக, முதலாளித்துவததிற்கு எதிராக புரட்சிகளும், எழுச்சிகளும் இந்நூற்றாண்டிலேயே தோன்றின. இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தோன்றிய காலனித்துவத்திற்கெதிரான தேசிய விடுதலைப் போராட்டம் இவற்றுள் மிகமுக்கியத்துவம் வாய்ந்ததாகும். காலனித்துவத்திற்கு எதிரான போராட்டம் தனியே ஏகாதிபத்தியத் திற்கெதிராக மட்டுமல்லாது குறிப்பிட்ட நாடுகளில் காணப்பட்ட ஏனைய ஒடுக்குமுறைகளுக்கு எதிரான போராட்டத்தினையும் அதனுடன் இணைத்துக்கொண்டது.

ஆசியாவைப் பொறுத்தமட்டில் காலனித்துவத்திற்கெதிரான போராட்டத்தில் இந்தியத்துணைக்கண்டம் முக்கிய இடத்தினை வகிக்கின்றது. காலனித்துவத்திற்கு எதிரான இந்திய துணைக் கண்டத்தின் சுதந்திரப் போராட்டம் அதனைச் சுற்றியுள்ள நாடுகளிலும் தாக்கத்தினை ஏற்படுத்தியது. இந்திய துணைக்கண்டத்தின் சுதந்திரப் போராட்டத்தின் சின்னமாக மகாத்மா காந்தி கருதப்பட்ட போதிலும், அது ஓர் கூட்டு முயற்சியேயாகும். பல்வேறு மொழியினைப் பேசும் மக்களைக் கொண்ட துணைக்கண்டமாக இந்தியா இருந்தமையினால் காலனித்துவத்திற்கு எதிரான சுதந்திர வேட்கை குறிப்பிட்ட மொழியினைப் பேசும் மக்கள் மத்தியில் எழுந்ததுடன் அதன் தலைமைகளும் குறிப்பிட்ட மொழியினைப் பேசும் மக்கள் மத்தியில் சுயமாகவே தோன்றியது. இவ்வாறு தோன்றிய தலைமைகளில் கம்யூனிச கொள்கையினை அடிப்படையாகக் கொண்டு தோன்றிய தலைமைகள் ஓர் வர்க்க பேதமற்ற சோசலிச கட்டமைப்பினை உருவாக்குவதை தமது காலனித்துவத்திற்கு எதிரான போராட்டத்துடன் இணைந்துக் கொண்டன. இன்னுமொரு பிரிவினர் காலனித்துவத்திற்கு முன்பிருந்து நிலவி வரும் இந்தியாவிற்கே உரித்தான சாதிய ஒடுக்கு முறைக்கு எதிரான போராட்டத்தை, காலனித்துவத்திற்கு எதிரான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போராட்டத்துடன் இணைத்துக் கொண்டனர். இவ்வாறு சாதிய ஒடுக்கு முறைக்கு எதிரான போராட்டத்தை வடக்கில் மராத்தி மொழி பேசும் மக்கள் மத்தியில் தோன்றிய டாக்டர் பாபா சாகிப் அம்பேத்கார் அவர்களும், தெற்கில் தமிழ் மொழி பேசும் மக்கள் மத்தியில் தோன்றிய ஈ. வே. ராமசாமி பெரியார் அவர்களும் காலனித்துவத்திற்கு எதிரான போராட்டத்துடன் சாதியத்திற்கு எதிரான போராட்டத்தை இணைத்துக் கொண்டனர்.

தமிழ் நாடு ஈரோட்டில் பிரபல வர்த்தகராகவிருந்த வெங்கிடசாமி நாயக்கரின் மகனான ஈ. வெ. ராமசாமி பெரியார் இருபதுகளில் சாதியத்திற்கு எதிராக குரலெழுப்பலானார். எவ்வித உயர்கல்வியும் பெறாத ஈ. வெ. ராமசாமி பெரியார் தமிழ் நாட்டு மக்கள் பிரிவினரில் ஒரு பகுதியினர் சாதியின் பெயரால் ஒடுக்கப்பட்டு வருகின்றமைக்கு எதிராக சுயமாகவே கருத்துக்களை முன்வைத்ததுடன் அவ்வொடுக்குமுறைக்கு எதிராக ஒடுக்கப்பட்ட சாதியினைச் சார்ந்த மக்களை அணிதிரட்டலானார் சாதிய ஒடுக்கு முறைக்கு எதிராக மக்களை அணி திரட்டிய திரு ஈ. வெ.ரா. பெரியார் முழு நாட்டையும் ஒடுக்குதலுக்கு உட்படுத்தி வந்த பிரித்தானிய ஆட்சியாளர்களுக்கு எதிராகவும் குரலெழுப்பினார். 1920 களில் இந்தியாவிற்கு சுதந்திரம் கோரி அகிம்சை போராட்டத்தை முன்னெடுத்த மகாத்மாகாந்தி, பிரித்தானியருக்கெதிராக ஒத்துழையாமை போராட்டத்தை முன்னெடுத்தமையினால் சாதியத்திற்கெதிரான போராட்டத்துடன் காலனித்துவத்திற்கு எதிரான போராட்டத்தையும் முன்னெடுத்த பெரியார். மகாத்மாகாந்தியின் ஒத்துழையாமை போராட்டத்தின்பால் ஈர்க்கப்பட்டார்.

மகாத்மாகாந்தியின் ஒத்துழையாமைப் போராட்டத்தின்பால் ஈர்க்கப்பட்ட பெரியார் நாளடைவில் தமிழ் நாட்டில் உருவாக்கப்பட்டிருந்த தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக பொறுப்பேற்று பிரித்தானியருக்கு எதிரான ஒத்துழையாமை போராட்டத்தினை முன்னெடுக்கலானார். எனினும் தமது சுயபோராட்டமான சாதிக்கொடுமைக்கெதிரான போராட்டத்தினை கைவிடவில்லை. மாறாக இவ்விரு போராட்டத்தையும் முன்னெடுத்ததுடன் சாதிக்கொடுமைக்கு எதிரான போராட்டத்திற்கு முன்னுரிமை அளிக்கலானார். இந்திய. தேசிய காங்கிரஸ் தலைமை பல்வேறு உயர் சாதியினரைக் கொண்டமைந்திருந்ததுடன் சாதிக்கொடுமைக்கெதிரான போராட்டத்தை பிரதான போராட்டமாக கொண்டிருக்கவில்லை. மாறாக சாதிக் கொடுமைக் கெதிராக அதன் தலைவர்கள் அவ்வப்போது அனுதாபரீதியில் இப்பிரச்சினை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொடர்பாக உரையாற்றிய போதும் நடை முறையில் பாரிய செயற்பாட்டில் ஈடுபடவில்லை. இதே நிலைப்பாட்டினை தமிழ்நாடு காங்கிரஸ் கிளையும் கொண்டிருந்தது. தமிழ் நாட்டு காங்கிரஸில் இணைந்து செயற்பட்ட பெரியார் இந்நிலைப்பாட்டினை எதிர்க்கலானார். இதன் காரணமாக தமிழ் நாடு காங்கிரஸ் உறுப்பினர்களுக்கும் பெரியாருக்கும் இடையில் முரண்பாடு உருவாகியது. இவ்வாறான முரண்பாடு உருவாகிய காலகட்டத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் ஆங்கிலப் பள்ளிக்கூடங்களைப் பகிஷ்கரிக்கும் இந்திய தேசிய காங்கிரஸின் கொள்கைக்கு ஆதரவாக தமிழ் நாட்டில் தமிழ்ப் பள்ளிக்கூடத்தை நடாத்தி வந்ததுடன் அப்பள்ளிக்கூடத்தில் மாணவர்கள் சாதிரீதியாக பிரிக்கப்பட்டு உணவளிக்கப்பட்டனர்.

சாதிரீதியாக மாணவர்கள் பிரிக்கப்பட்டு உணவளிக்கப்பட்டு வருவதை கண்ணுற்ற பெரியார் அவ்வாறான செயற்பாட்டினை குறிப்பிட்ட காங்கிரஸ் உறுப்பினர் கைவிட வேண்டுமெனக் கோரினார். குறிப்பிட்ட காங்கிரஸ் உறுப்பினரும் ஏனைய காங்கிரஸ் உறுப்பினர்களும் இக்கோரிக்கையை மறுத்ததுடன் பெரியார் அவர்களும் இக்கோரிக்கையில் விடாப்பிடியான நிலைப்பாட்டினைக் கடைப்பிடிக்கலானார். இந்நெருக்கடியைத் தீர்க்க பல சமரச முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அவையனைத்தும் பயனளிக்காது விட்டதுடன் ஈற்றில் மகாத்மாகாந்தி சென்னை வந்து சமரச முயற்சியில் ஈடுபடலானார். மகாத்மா காந்தி அவர்களது சமரச முயற்சியும் தோல்வியுற்றதுடன் ஈற்றில் பெரியார் தமிழ்நாடு காங்கிரஸிலிருந்து விலகலானார்.

ஆங்கிலப் பள்ளிகளைப் பகிஷ்கரித்து தேசிய பள்ளிக்கூடங்களை நடத்த வேண்டும் என்ற காந்திஜியின் திட்டத்தை அனுசரித்து வ.வே.சு. அய்யர் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள சேரன் மாதேவியில் "பாரத் வாஜா ஆசிரமம்" என்ற பெயரில் ஒரு தேசியப் பள்ளிக்கூடத்தை நடத்திக்கொண்டிருந்தார். அந்த ஆசிரமம் தேசிய இயக்கத்தின் ஆதரவைப் பெற்றது. அன்று தமிழ் நாட்டிலிருந்த வர்ணாசிரம பிரிவினையின்படி அந்த பள்ளிக்கூடத்திலும் பிராமணப் பிள்ளைகளுக்குத் தனியான இடத்திலும் மற்ற பிள்ளைகளுக்கு வேறொரு இடத்திலும் உணவளிக்கப்பட்டு வந்தது. இதைப்பற்றிய தகவல் ஈ.வெ.ராவுக்கு எட்டியது. அவரும் சேலம் டாக்டர் பி.வரதராஜீலு நாயுடுவும் சேரன் மாதேவிக்குச் சென்று இந்தச் செய்தி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உண்மை என்பதைக் கண்டறிந்தனர். பெரியாருக்கு இதைக்கண்டு ஆத்திரமும் கோபமும் ஏற்பட்டது. காங்கிரஸ் கமிட்டிக்குள் இதை எதிர்த்து இந்தமுறை கைவிடப்பட வேண்டும் என்று கிளர்ச்சி நடாத்தினார். சமரசம் செய்வதற்கு காந்திஜி சென்னைக்கு வந்தார். எஸ். சீனிவாசஅய்யங்கார் வீட்டில் சமரசப் பேச்சு வார்த்தை மூன்று நாட்கள் நடைபெற்றன. காந்திஜி ஒரு சமரச யோசனையை சொன்னார். அதாவது இப்பொழுது அந்த தேசியப் பள்ளியில் இருக்கும் மாணவர்களுக்கு தனித்தனியே உணவு அளிப்பது நீடிக்கட்டும். இனி புதிதாகச் சேர்க்கப்படும் மாணவர்களுக்கு ஒரே பந்தியில் உணவு அளிக்கப்படட்டும். இதுவே காந்திஜி கூறிய சமரச யோசனை இந்த யோசனையை ஈ வெ ரா நிராகரித்தார் (1) தொடர்ந்து இக்கிளர்ச்சியை காங்கிரஸ் இயக்கத்திற்குள் நடத்தினார். சம பந்தி போஜனம் வேண்டும் என்ற கோஷத்தைக் கிளப்பினார். உடனே அதை காஞ்சிபுரம் மாநாட்டில் பெரிய பிரச்சினையாக கிளப்பினார். ராஜாஜி, சத்தியமூர்த்தி போன்ற தலைவர்கள் அந்த முறை ஒரு தனியார் நடத்தும் பள்ளிக்கூடத்தில் இருப்பதை காங்கிரஸ் தடுக்க முடியாது என்று வாதாடினர். பெரியார் விடவில்லை. அப்படியானால் இது ஒரு காங்கிரஸ் பிரமுகர், காங்கிரஸ் இயக்கத்தின் முப்பகிஷ்காரத்தின் ஒன்றாகிய ஆங்கிலக்கல்வி நிலையங்களை பகிஷ்கரிக்கும் திட்டத்தை அமுலாக்குவது என்ற பெயரில் நடத்தி வருகிறார்கள். இதை வெறும் ஒரு தனியார் நடத்தும் பள்ளி என்று எப்படிச் சொல்ல முடியும்? இந்த அநீதியான முறை அமுலில் இருக்கும் இந்தப்பள்ளிக்கு காங்கிரஸ் இயக்கத்தின் தார்மீக ஆதரவு கிடையாது என்று பகிரங்கமாக அறிவிக்கப்பட வேண்டும் என்று பல ஆட்சேபனைகளுக்கிடையே ( கூச்சல்காரர்களை, தலைமை வகித்த திரு. வி. கல்யாண சுந்தரமுதலியார் சமாதானப்படுத்தி அமைதியை நிலைநாட்டிய பிறகு), பலமாக வாதாடிவற்புறுத்தினார். அந்தயோசனையும் மாநாட்டில் நிராகரிக்கப்பட்ட பிறகுதான் பெரியார் அன்று மாலை (அல்லது மறுநாள் மாலை) ஒரு பொதுக்கூட்டம் போட்டு “சுயமரியாதை” இயக்கத்தை துவக்கினார். அந்த இயக்கத்திற்கு அவர் கொடுத்த பெயரிலிருந்தே இது தெளிவாகும். (2)

காங்கிரஸ்காரர்களுடன் முரண்பட்டு 1926ல் சுயமரியாதை இயக்கத்தை உருவாக்கிய ஈ. வெ.ரா. பெரியார் சாதி ஒழிப்பு போராட்டத்தை தமிழகத்தில் வேகமாக முன்னெடுக்கலானார். அரசதுறை உட்பட இந்தியாவின் சகல கட்டமைப்புக்களிலும் பிராமணர் (பார்ப்பனர்) எனக் கூறப்படும் சாதியினரின் ஆதிக்கம் மேலோங்கியிருந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிரித்தானியர்களினால் உருவாக்கப்பட்ட அனைத்துக் கட்டமைப்புக்களிலும், பிரித்தானியர்களின் பிரதிநிதிகளாகச் செயற்பட்டு வந்த பிராமணப் பிரிவினர் சாதிரீதியான பாகுபாட்டினை நிர்வாகத்துறையிலும் கடைப்பிடித்து வரலாயினர். பிரித்தானியரின் வருகைக்குப் பின் இந்தியாவில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக, குறிப்பாக கல்வித்துறையில் ஏற்பட்ட மறுமலர்ச்சியின் காரணமாக, பிற்படுத்தப்பட்டோர் எனக் கூறப்படும் சாதியினர் மத்தியிலும், தாழ்த்தப்பட்டோர் எனக்கூறப்படும் சாதியினர் மத்தியிலும் இக்காலகட்டத்தில் கற்றோர் தோன்றலாயினர். பிராமணர் எனக் கூறப்படுவோரின் ஆதிக்கம் காரணமாக இக்கற்ற பிரிவினருக்கு உரிய இடம் கிடைக்கவில்லை. இப்பிரிவினர் மத்தியில் எதிர்ப்புணர்வு தழைத்தோங்கியது. பிராமணர் அல்லாத பிற்படுத்தப்பட்ட பிரிவினர் எனக் கூறப்படும் பிரிவினர்கள் சமூகத்தின் உயர் கட்டமைப்புக்களில் சமஉரிமையை கோரக்கூடிய நிலைமையினை எய்தியிருந்தமையினால் பெரியாரின் சுயமரியாதை இயக்கம் இவர்கள் மத்தியில் வேரூன்றலாயிற்று. சமூகத்தில் பெரும்பான்மையினராகக் காணப்படும் பிற்படுத்தப்பட்ட பிரிவினரும், தாழ்த்தப்பட்ட பிரிவினரும் பார்க்கும் இடமெல்லாம் பார்ப்பனர்களின் ஆதிக்கம் இருந்தமையினால் பார்ப்பனர்களுக்கெதிரான பெரியாரின் போராட்டம் பலம்வாய்ந்ததாக அமைந்தது. பாம்பையும், பார்ப்பனனையும் ஒன்றாகக் கண்டால் முதலில் பார்ப்பனனை அடித்துக்கொல் எனும் சுலோகத்தை பெரியார் முன்வைத்தார் எனில், பிராமணர்களின் ஆதிக்கம் எவ்வாறானதாக இருந்திருக்கும் என்பதை அடையாளம் காணலாம். எவ்வாறாயினும் பெரியாரின் சுயமரியாதை இயக்கம் இக்காலகட்டத்தில் வளரும் அறிவுஜீவிகளை தம்பால் ஈர்த்துக்கொண்ட போதிலும் நாளடைவில் வளர்ச்சியுறும் நிலைமைகேற்ப நெகிழ்வுத்தன்மைகளை மேற்கொள்ளாமையினால் வளர்ச்சியுற்ற அறிவுஜீவிகளான ப.ஜீவானந்தம் போன்றோர் அவ்வியக்கத்தை விட்டு வெளியேறியமை குறிப்பிடத்தக்கது. எவ்வாறாயினும் தமிழகத்தில் சுதந்திரத்துக்குப் பின்னும் சாதி ஒடுக்கு முறை தொடர்ந்தமையினால் சமூகத்தில் சாதி ஒடுக்குமுறைக்குட்பட்ட பிரிவினர் இவ்வியக்கத்தின் கீழ் அணிதிரண்டதுடன் தமிழகத்தில் தோன்றிய ஏனைய கட்சிகளைப் போலல்லாது இவ்வியக்கத்தின் பால் தமிழகத்தை விட்டகன்று ஏனைய நாடுகளில் குடியேறிய தமிழர்களும் ஈர்க்கப்பட்டனர்.

இந்தியாவை ஆண்ட பிரித்தானியர் தமது ஏனைய காலனிகளில் மேற்கொண்ட விவசாயத் தொழிற்துறைக்குத் தேவையான தொழிலாளர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பட்டாளத்தை இந்தியாவிலிருந்தே கொண்டு சென்றனர். இவ்வாறு கொண்டு செல்லப்பட்டவர்களில் பெரும்பாலானோர் தமிழகத்தையும் மேற்குவங்காளத்தையும் சார்ந்தோர்களாக இருந்தனர். இவ்விரு பிரதேசங்களிலும் காணப்பட்ட வறுமை, சாதி ஒடுக்கு முறை மற்றும் தொழிலாளர் பட்டாளத்தை கொண்டு செல்வதற்கான கப்பல் போக்கு வரத்து வசதியை கொண்டிருந்தமை இதற்கான பிரதான காரணங்களாக அமைந்தன. தமிழகத்தைச் சார்ந்திருந்தோர் இலங்கை, மலேசியா, மொரீசியஸ், பிஜி, தென்னாப்பிரிக்கா போன்ற நாடுகளுக்கு கொண்டு செல்லப்பட்டனர். இவ்வாறு கொண்டு செல்லப்பட்டவர்களில் பெரும்பான்மையானோர் முறையே இலங்கையிலும் மலேசியாவிலும் மேற்கொள்ளப்பட்ட கோப்பி, தேயிலை, இறப்பர் பயிர்ச்செய்கையில் ஈடுபடுத்தப்பட்டனர். இவ்வாறு கொண்டு செல்லப்பட்டவர்களில் தொண்ணூறு சதவீதமானோர் சாதிரீதியாக தாழ்த்தப்பட்டோர் எனக் கூறப்படும் பிரிவினைச் சார்ந்தோராக இருந்தனர். சாதிரீதியாக பிற்படுத்தப்பட்டோர் எனக் கூறப்படும் பிரிவினர் ஏனைய பத்துவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்தியதுடன் மேற்கூறப்பட்ட தொண்ணூறு சதவீதத்தினரை அழைத்துவரும் பணியினை மேற்கொண்டவர்களாவர்.

இலங்கையைப் பொறுத்தமட்டில் 1815ம் ஆண்டு கண்டி இராச்சியம் பிரித்தானியரிடம் வீழ்ச்சியுற்றதுடன் முழு இலங்கையும் பிரித்தானியரின் ஆதிக்கத்தின் கீழ் இயங்கலாயிற்று. இதற்கு முன்னர் இலங்கையில் கரையோரப்பகுதியை ஆட்சிசெய்த பிரித்தானியர் கரையோரப் பகுதிகளைச் சார்ந்த தாழ்நிலப்பிரதேசத்தில் கறுவாப்பயிர்ச் செய்கையை மேற்கொண்டு ஏற்றுமதி வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்தனர். முழு இலங்கையையும் தம் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்திருந்த பிரித்தானியர் மலைநாட்டுப்பகுதி கோப்பிப்பயிர்செய்கையை மேற்கொள்ளக்கூடிய சுவாத்தியத்தைக் கொண்டிருந்தமையினால் 1820களில் கண்டிப் பகுதியில் கோப்பிப்பயிர் செய்கையை மேற்கொண்டனர். இக்கோப்பிப்பயிர்ச்செய்கையில் ஈடுபட சுதேச சிங்கள மக்கள் மறுத்தமையினால் இத்தோட்டத்துறையில் வேலை செய்வதற்கான கூலியாட்களைத் தேடுவதற்கான முயற்சியில் பிரித்தானியர் ஈடுபட்டனர்.

சீனாவிலிருந்தும் ஆபிரிக்காவிலிருந்தும் தொழிலாளர்களை கொண்டு வருவதற்கான முயற்சிகள் இச்சந்தர்ப்பத்தில் மேற்கொள்ளப்பட்டதுடன் இது பொருத்தமற்றதாகவும் செலவிற்குரியதாகவும் இருந்தமையினால்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கைவிடப்பட்டது. (3) இதனால் தோட்டத்துறை வறுமைக்குட்பட்ட மற்றும் பஞ்சம் கூர்மையடைந்த தென்னிந்தியாவை நோக்கியது. நிலமற்ற விவசாயிகள் தமது வாழ்வுக்காக (நிலைத்தல்) நிலச்சுவாந்தரின் தயவின்பால் தங்கியிருக்க நேர்ந்தது. இதனால் சுபீட்சத்தை எதிர்பார்த்த இப்பிரிவினர் தமது உடலையும் உயிரையும் பாதுகாத்துக்கொள் வதற்காக எந்தவொரு துன்பத்தையும் தாங்கிக் கொள்ளத்தயாராக இருந்தனர். (4) இவ்வாறு வறுமைக்கும் நிலவுடைமையின் ஏனைய ஒடுக்குமுறைகளுக்குட்பட்டிருந்த பிரிவினரே இலங்கையின் கோப்பித்தோட்டத்தில் வேலை செய்ய முன்வந்தனர். முதலாவது ஆட்சேர்ப்பு தமிழ் பகுதிகளான தின்னவேலி (திருநெல்வேலி), மதுரா (மதுரை), டெஞ்சூர் (தஞ்சாவூர்) போன்ற மாவட்டங்களிலிருந்து மேற்கொள்ளப்பட்டதுடன் பெரும்பான்மையானோர் தாழ்த்தப்பட்ட பிரிவினராவர்.(5) இவர்கள் இராமநாதபுரத்திலிருந்தும் இதேவேளை, புதுக்கோட்டையிலிருந்தும் கொண்டுவரப்பட்டனர். இக்கோப்பிப் பயிர்ச்செய்கை அறிமுகத்துடன் இலங்கையில் தோன்றிய துணை சேவைத்துறைகளான பாதைகள் உருவாக்கம், இரும்புப்பாதை உருவாக்கம், புகையிரத சேவை, துறைமுகம் போன்றவற்றிற்கும் இப்பகுதியினைச் சார்ந்த தமிழ், மலையாள மக்களே கொண்டுவரப்பட்டனர். இவ்வாறு கோப்பிப்பயிர்ச்செய்கையில் ஈடுபட வந்தவர்கள் கோப்பி அறுவடைக்காலம் முடிந்தவுடன் தாம் சம்பாதித்த செல்வத்துடன் தமது தாயகத்திற்கு திரும்புவதை வழமையாகக் கொண்டிருந்தனர். ( ஆயினும் கோப்பிப் பயிர்ச்செய்கையில் ஈடுபட வந்த தொழிலாளர்களில் ஒரு சிறு பிரிவினர் இங்கு நிரந்தரமாகத் தங்கியுள்ளனர்.)

1861ல் கோப்பிப்பயிர்ச் செய்கை வீழ்ச்சியுடன் உருவாக்கப்பட்ட தேயிலைப் பயிர்ச்செய்கைக்கு நிரந்தரத் தொழிலாளர்கள் தேவைப்பட்டனர். தேயிலை அறிமுகத்துடன் கொண்டு வரப்பட்ட தொழிலாளர்களின் தொகை அதிகரித்ததுடன் நிரந்தரமாகத் தங்குவோரின் தொகையும் அதிகரித்தது. இவ்வாறு கொண்டுவரப்பட்டு குடியமர்த்தப்பட்டவர்கள் தமிழ் நாட்டில் சாதிரீதியாக குடியிருந்தது போல் தோட்டங்களிலும் குடியமர்த்தப்பட்டனர். 1871ல் தோட்டங்களில் நிலவிய சுகாதார சீர்கேடுகள் காரணமாக தொழிலாளர் மத்தியில் தொற்று நோய்கள் பரவியதுடன் உயிரிழப்புகளும் ஏற்பட்டன. இதைக் கண்டித்து இந்திய அரசியல்வாதிகள் குரலெழுப்பினர். இதனால் பிரித்தானிய அரசு இத்தொழிலாளர்களின் சுகாதாரத்தைப் பேணுவதற்காக மெடிக்கல் வோன்ட் ஓர்டினன்ஸ்(Medical Wants Ordinance)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எனும் சட்டத்தை கொண்டுவந்தது. இச் சட்டத்தினை கொண்டு வருவதற்காக தோட்டத்துறை தகவல் திரட்டல் ஒன்றை மேற்கொண்டது. இத்தகவல் திரட்டலை சமர்ப்பித்த திரு. வில்லியம் கிளார்க் கீழ்க்காணும் சாதி விகிதாசாரத்தில் இந்தியப் தோட்டத் தொழிலாளர்கள் இருப்பதாக சமர்ப்பித்தார்.

இவ்வறிக்கையில் முறையே பறையர் -(தா) -30% பள்ளர் - (தா) 26%, சக்கிலியர்-(தா) 16%, அகம்படியர்- (பி) 05%, கள்ளர் - (பி) 05%, மொட்டை வேளாளர் (உ) 3%, ரெட்டியார் (ம) 03%, இடையர் (பி) 02%, மறவர்(பி) 02%, புளுக்கர் (ம) 1 1/2%, ஆசாரி (ம) 1%, பித்தளை (பி), கம்மளாளர் (ம), சிற்பி (ம), சாணர் 1% (பி), வெள்ளாளர், (உ) 1/2%, செட்டி (உ) 1/2%, குரும்பர் (உ) 1/2%, வண்ணார் (ம) 1/2%, அம்பட்டையர் (ம) 1/2%, ஈழுவர்(ம) 1/4%, தாட்டியார் (ம)1/2%, நாயக்கர் (உ) 1/4%, கன்னாரஸ் (ம) 1/4%, வள்ளுவர் (ம) 1/2% பன்னார்(ம) 1/4% குரவர்-(தா) 1/4% பறவர் (ம) 1/4%, - 16 (பி-பிற்படுத்தப்பட்டோர், ம- மத்திமம், உ - உயர்ந்தோர், தா- தாழ்த்தப்பட்டோர். (6) (இதில் மத்திமம் எனக்கூறப்பட்டுள்ளவர்களில் பெரும்பான்மையானோர் பிற்படுத்தல் பிரிவினைச் சார்ந்தோராவர் என்பது குறிப்பிடத்தக்கது) இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை தோட்டத்துறையுடன் உருவாகிய தொழிற்துறைகள் மற்றும் நகர உருவாக்கத்துடன் தோன்றிய தொழிற துறைகளிலும் தாழ்த்தப்பட்டோர் என்ற பிரிவினரே பெரும்பான்மையாக வேலைக்கமர்த்தப்பட்டனர்.

இவ்வாறு தமிழ்நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட தொழிலாளர் பட்டாளத்தில் தாழ்த்தப்பட்டோர் பெரும்பான்மையாக இருந்த அதேவேளை இந்தியாவில் நடக்கும் அரசியல் மாற்றங்களை அறியும் வாய்ப்பினைப் பெற்றிருந்தனர். இவ்வகையில் தமிழகத்தில் நடக்கும் மாற்றங்களை இலங்கை வாழ் இந்திய தமிழ் மக்கள் அடிக்கடி அறிந்தவாறு இருந்தனர். கொழும்பில் வசித்த இந்தியத் தமிழ் மக்களே இம் மாற்றங்களை முதலில் அறிந்தனர். 1930 களில் இந்திய சுதந்திர போராட்டம் முனைப்படைந்ததுடன் அதன் தாக்கம் இலங்கையையும் பாதித்தது. இலங்கையர் மத்தியில் சுதந்திரத்திற்கான இயக்கம் தோன்றியது. ஆனால் இவ்வியக்கம் இலங்கை வாழ் இந்திய மக்களின் பிரச்சினைகளைப் பற்றி குரலெழுப்பவில்லை. மாறாக ஒருசில அரசியல் வாதிகள் இந்திய வம்சாவளி மக்களுக்கெதிரான கருத்தினை முன்வைத்தனர். இவ்வாறான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பின்னணியில் இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மக்கள் சார்பாக இந்திய தலைவர்களே குரலெழுப்பினர்.

முப்பதுகள், இலங்கை அரசியல் வரலாற்றினைப் பொறுத்தமட்டில் முக்கிய காலகட்டமாகும். இலங்கை தொழிற்சங்க வரலாற்றின் தந்தையென வர்ணிக்கப்படும் திரு. ஏ . ஈ. குணசிங்ஹ தமது தலைமையின் கீழ் அணிதிரண்ட கொழும்பு வாழ் இந்திய தொழிலாளர்களுக்கெதிராக இனவாத நிலைபாட்டை இக்காலகட்டத்திலேயே கடைபிடிக்கலானார். இவருடன் இணைந்து செயலாற்றிய இந்தியரான கோ. நடேசஐயர் திருஏ.ஈ.குணசிங்ஹவின் இனவாத நிலைப்பாட்டினைக் கண்டித்து திரு. ஏ. ஈ. குணசிங்ஹவின் தொழிற்சங்கத்திலிருந்து வெளியேறி தோட்டத் தொழிலாளர் மத்தியில் தொழிற்சங்கத்தை உருவாக்கும் பணியில் ஈடுபடலானார். மறுபுறம் உயர் கல்விக்கென இங்கிலாந்து சென்று இலங்கை திரும்பிய இலங்கையின் மத்தியதர வர்க்கத்தைச் சார்ந்த இளைஞர்கள் மார்க்ஸிய கருத்துக்களை இலங்கையில் அறிமுகப்படுத்தியதும் இக்காலகட்டத்திலேயாகும். இவையணைத்து நடவடிக்கைகளும் கொழும்பிலேயே நடந்தேறின. அதேவேளை இம்முயற்சிகள் அனைத்தும் ஸ்தாபனமயப்பட்ட தொழிற்துறைகளில் ஈடுபட்ட தொழிலாளர்களை அணிதிரட்டும் நடவடிக்கையாகவே அமைந்தன. ஸ்தாபனமயமற்ற தொழிற்றுறைகளான கடைகள், வீட்டு வேலையாளர் மற்றும், சிகையலங்காரம் உள்ளிட்ட ஏனைய பிற தொழில்களில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களை இம்முயற்சிகள் சென்றடையவில்லை.

சாதிரீதியாக ஒதுக்கப்பட்டிருந்த இந்திய தமிழ் தொழிலாளர்களே இவ்வாறான தொழில்களில் ஈடுபட்டிருந்தனர். சாதிரீதியாக ஒதுக்கப்பட்டிருந்த அதேவேளை தொழில் ரீதியாகவும் புறக்கணிக்கப்பட்டிருந்த இச்சிற்றூழிய தொழிலாளர் மத்தியில் ஸ்தாபனரீதியான அணிதிரளல் இக்காலகட்டத்திலேயே உருவாகியது. ஏனைய தொழிற்துறைகளில் ஈடுபட்ட தொழிலாளர்கள் போலன்றி இத்துறைகளில் ஈடுபட்ட தொழிலாளர்கள் தமிழ் நாட்டிலிருந்து கொழும்பிற்கு வரும் தமிழ் சஞ்சிகைகளையும் நாளிதழ்களையும் பார்க்கக்கூடிய வாய்ப்பினை பெற்றிருந்தனர். ஒதுக்கப்பட்டிருந்த இத்தொழிலாளர் பிரிவினர் சமூகத்தில் அந்தஸ்து பெறுவதில் அக்கறை காட்டிய வேளையிலே .பெரியாரின் சுயமரியாதை இயக்கம் தமிழ் நாட்டில் வேகமாக பரவியதுடன் அவ்வியக்கத்தினால் வெளியிடப்பட்ட சஞ்சிகைகளும், நாளிதழ்களும் இலங்கையில் விற்பனையாகின.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இச் சஞ்சிகைகளின் மூலம் சுயமரியாதை இயக்கக் கருத்துக்களை அறிந்து கொண்ட இப்பிரிவினர் சமூகத்தில் தமக்கு அந்தஸ்து தேவையெனில் சுயமரியாதை இயக்கம் போன்ற ஓர் இயக்கத்தின் தேவையினை உணரலாயினர். இவ்வுணர்வுகளின் வெளிப்பாடே இவர்கள் மத்தியில் இலங்கை சுயமரியாதை இயக்கம் உருவாக வழி சமைத்தது. சிற்றூழியத் தொழிலில் ஈடுபட்ட திருவாளர்கள் நா. அ. பழனிநாதன், எஸ்.கே.மாயக்கிருஷ்ணன், எம்.ஏ.அமீது போன்றோரால் இலங்கை சுயமரியாதை இயக்கம் 1932ம் ஆண்டு கொழும்பில் (கொள்ளுபிட்டியில்) ஆரம்பிக்கப்பட்டது.

இலங்கையில் சுயமரியாதை இயக்கம் ஆரம்பிக்கப்பட்ட வருடத்திலேயே ஈ.வே.ரா பெரியார் தமது மாஸ்கோ பயணத்தை மேற்கொண்டார். மாஸ்கோ பயணத்தை முடித்து தமிழ் நாடு திரும்பிய போது இலங்கையில் தரித்துச் செல்லும் வாய்ப்பினைப் பெற்றிருந்தார். பெரியாரின் வருகையை அறிந்த சுயமரியாதை அமைப்பாளர்கள் பெரியாருடனான கலந்துரையாடல் ஒன்றினை ஒழுங்கு செய்திருந்தனர். 1932ம் ஆண்டு அக்டோபர் 17ம் திகதி இரவு 9.00 மணிக்கு கொள்ளுபிட்டி கீரின் பாத். பாதையிலுள்ள மகளிர் நட்புறவு மண்டபத்தில் இக்கலந்துரையாடல் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இக்கலந்துரையாடலில் கலந்து கொண்ட திரு. பெரியார் சாதியத்திற்கும் மூடநம்பிக்கைகளுக்கும் எதிரான நீண்ட சொற்பொழிவொன்றினை நிகழ்த்தினார்.

" தோழர்களே எனது அபிப்பிராயத்திற்கும் முயற்சிக்கும் குறிப்பிடத்தகுந்த அளவு எதிர்ப்பு இருக்கின்றதை நான் அறியாமலோ அல்லது அறிந்தும் அவைகளை மறைக்க முயலவோ இல்லை. யார் எவ்வளவு எதிர்த்தபோதிலும், யார் எவ்வளவு தூஷித்து விஷமப் பிரச்சாரம் செய்த போதிலும், யார் எவ்வளவு எனது அபிப்பிராயம் வெளியில் பரவாமல் இருக்கும்படி சூழ்ச்சிகள் செய்து மக்களின் கவனத்தை வேறுபக்கம் திருப்பிய போதிலும் உலகத்தில் எல்லா பாகங்களிலும் வேதபுராண சரித்திர காலம் முதல் இன்றைய வரையிலும் மனித சமூகமானது கடவுள், ஜாதி, மதம் தேசம், என்னும் பேர்களால் பிளவுபட்டு உயர்ந்தவன், தாழ்ந்தவன், ஏழை, பணக்காரன், முதலாளி, தொழிலாளி, அரசன், பிரஜைகள், அதிகாரி, குடிஜனங்கள், குரு, சிஷ்யன் முதலியனவாகிய பலதன்மையில் விருப்பு வித்தியாசங்களுக்குள்ளாகி மேல் கீழ் தரத்தோடு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கட்டுப்பாடான சமுதாயக் கொடுமைகளாலும், அரசாங்கச் சட்டங்களாலும் கொடுமைக்குள்ளாகி வந்திருக்கின்றது, வருகின்றது, என்பதை மாத்திரம் யாராலும் மறுக்கவும் மறைக்கவும் முடியாது என உறுதியாய் சொல்லுவேன். இவ்வகுப்பு பேதங்களால் மக்கள் படும் துன்பத்தையும் அனுபவிக்கும் இழிவையும் அல்லும் பகலும் காடுகளிலும் மேடுகளிலும் தொழிற்சாலைகளில் கஷ்டமான வேலைகளைச் செய்தும் வயிறார கஞ்சியில்லாமலும் குடியிருக்க வீடும் மறைக்கும் வெய்யிலுக்கும் நிழலும் இல்லாமல் எத்தனைப்பேர் அவதிப்படுகிறார்கள் என்பதை சிந்தித்துப் பாருங்கள். அவர்களது நிலமையை உங்கள் மனதில் உருவகப் படுத்திப்பாருங்கள் ". (07)

"தோழர்களே இனி இதற்கு அடிப்படையாகவும் அரணாகவும் இருந்து வரும் காரணங்கள் எவை என்பதைச் சற்று நடுநிலைமையில் இருந்து சிந்தித்து பார்த்தீர்களானால் இக்கொடுமைகளுக்கு முக்கிய காரணம் முற்கூறிய கடவுள், மதம், ஜாதீயம், தேசியம் என்பனவாகிய மயக்க உணர்வை மக்களுக்கு ஏற்றி அதன் பயனாக பெரும்பான்மையான மனித சமூகத்தை மடைமையாக்கி ஏய்த்து சோம்பேரிகளாய் இருந்து கொண்டு சுகம் அனுபவித்து வரும் ஒரு சிறு கூட்ட மக்களின் சூழ்ச்சியே ஒழிய வேறில்லை என்பதைத் தெள்ளத்தெளிய உணர்வீர்கள்" (08) பெரியாரின் இவ்வுரை சாதியத்தினால் பாதிக்கப்பட்டிருந்த பிரிவினரை உற்சாகப்படுத்தியது.

பெரியாரின் வருகைக்குப் பின் சீர்திருத்தக் கருத்துக்களை பிரச்சாரம் செய்த சுயமரியாதை இயக்கத்தினர் தமது நடவடிக்கைகளை கொழும்பு வாழ் சிற்றூழியர்கள் மத்தியிலேயே மேற்கொண்டனர். பெரியாரின் கருத்துக்களைத் தாங்கிவந்த சுயமரியாதை இயக்க பத்திரிகைகளான "குடியரசு ' "விடுதலை" என்பன இவர்களது ஆசானாக அமைந்தன. தமிழக ' சுயமரியாதை' இயக்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை இலங்கை சுயமரியாதை இயக்கம் மேற்கொண்டது. 1937ல் சென்னை மாநில ஆட்சியை கைப்பற்றிய இந்திய காங்கிரஸ் கட்சியின் தமிழக கிளையினர் ஹிந்தி மொழியை பள்ளிக்கூடங்களில் கட்டாயப் பாடமாக்கும் தீர்மானத்தை மேற்கொண்டனர். முதலமைச்சராக இருந்த சி.ராஜாஜியின் இம்முயற்சியினை பெரியார் கடுமையாக எதிர்க்கலானார். ஹிந்தி மறியல் போராட்டங்களையும் எதிர்ப்புக் கூட்டங்களையும் சுய மரியாதை இயக்கம் நடாத்தியது. இதேவேளை இலங்கை சுயமரியாதை இயக்கத்தினர் ஹிந்தி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எதிர்ப்புக் கூட்டங்களை சிறிய அளவில் நடாத்தியதுடன் இவர்களது செய்திகள் தமிழக பத்திரிகைகளான " விடுதலை " " குடியரசு " என்பவற்றில் வெளிவரலாயின.

தமிழக சுயமரியாதை கழகத்தின் நடவடிக்கைகளை எவ்வித மாற்றமுமின்றி அவ்வாறே இலங்கை சுயமரியாதை இயக்கத்தினர் பின்பற்றிய வேளை இந்திய வம்சாவளியினர் பெரும்பான்மையாக வாழும் மலையகத்தில் (தோட்டங்களில்) பாரிய மாற்றங்கள் நிகழ்ந்தன. 1931ல் ஏ.ஈ குணசிங்ஹவிடமிருந்து பிரிந்த திரு. கோ . நடேசய்யர் தோட்டத் தொழிலாளர் மத்தியில் தொழிற்சங்கத்தை நிறுவும் முயற்சியில் ஈடுபட்டார். இவரது முயற்சி 1935ல் ஸ்தம்பித நிலையை அடைந்தது. இச்சந்தர்ப்பத்திலேயே இலங்கையின் முதலாவது இடதுசாரிக் கட்சியான இலங்கை சமசமாஜக்கட்சி தோற்றுவிக்கப்பட்டதுடன் இக்கட்சியினர் மலையகத் தொழிலாளர்களை அணிதிரட்டும் பணியில் ஈடுபட்டனர். அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கம் எனும் பெயரில் தொழிற்சங்கத்தை உருவாக்கி செயற்பட்ட இப்பிரிவினர் 1938 முதல் 1939 வரையிலான ஒருவருட காலத்திற்குள் பல தொழிற்சங்கப் போராட்டங்களை மேற்கொண்டனர். 1939 டிசெம்பரில் நடந்த முல்லோயாப் போராட்டம் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் வரலாற்றில் நடந்த முதலாவது தொழிற்சங்கப் போராட்டமான முல்லோயாப் போராட்டத்தினை வழிநடத்திய சமசமாஜ கட்சியினர் மலையக மக்களை அணி திரட்டுவதற்காக இந்திய இடதுசாரி தலைவர்களை இலங்கைக்கு வரவழைத்தனர். இவ்வகையில் இந்திய சோசலிசக் கட்சியைச் சார்ந்த திருமதி. கமலாதேவி சட்டோபாத்யாவை மலையகமெங்கும் கொண்டு சென்றனர்.

இதேவேளை 1939ல் இரண்டாவது தடவையாக இலங்கைக்கு வந்த திரு. ஜவஹர்லால் நேரு இலங்கை வாழ் இந்திய சமூகத்தினரின் நிலமையைக் கருத்திற்கொண்டு தம்மை சந்தித்தவர்களிடம் இந்திய சமுதாயத்தினரை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் அமைப்பொன்றின் தேவையை வலியுறுத்தினார். இதன் பிரதிபலனாக இலங்கை இந்திய காங்கிரஸ் உருவாகியதுடன் நாளடைவில் இலங்கை இந்திய தொழிலாளர் காங்கிரஸ் என்ற பெயரின் கீழ் இவ்வியக்கம் மலையகத் தோட்டப் பகுதிகளிலும் காலடி எடுத்து வைத்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவ்வாறான வளர்ச்சிகளுக்கு மத்தியில் இவ்வனைத்து அமைப்புகளுக்கும் முன்பதாக தோன்றிய ' சுயமரியாதை ' இயக்கம் தம்மை கொழும்புக்குள்ளேயே மையப்படுத்திக் கொண்டதுடன் தமிழக சுயமரியாதை இயக்கத்தின் மாற்றங்களை அப்படியே ஏற்றுச் செயற்பட்டது. 1944ல் தமிழக ஜஸ்டிஸ் கட்சியுடன் கூட்டிணைந்து சுயமரியாதை இயக்கத்தினர் பெரியாரின் ஆலோசனையின் பேரில் சுயமரியாதை இயக்கத்திற்கு திராவிடக் கழகம் என பெயரிட்டு செயற்பட்டனர். இதனைப் பின்பற்றிய இலங்கை சுயமரியாதைக் கழகத்தினர் தமது அமைப்பின் பெயரையும் இலங்கை திராவிடக்கழகம் என பெயர் மாற்றினர்.

திராவிடக்கழகமாகப் பிரகடனப்படுத்திய தமிழக ' சுயமரியாதை' இயக்கத்தினர் 1948 ஜுலை முதலாம் திகதியை திராவிடப் பிரிவினை நாளாக அனுஷ்டிக்கும்படி தமிழக மக்களைக் கோரினர். இக்காலக்கட்டத்தில் இலங்கை சுயமரியாதை இயக்கத்தினர் தமது அமைப்பின் பெயரை திராவிட கழகமாக மாற்றியதாக பிரகடனப்படுத்தாத போதிலும் அதன் தலைவராக இருந்த காத்தமுத்து இளஞ்செழியன் இலங்கை திராவிடக் கழகம் என்ற பெயரில் தமிழக திராவிடக் கழகத்தின் கோரிக்கைக்கு ஆதரவளிக்கும்படி இலங்கை இந்திய மக்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.

01. 07. 1948ல் திராவிட நாடு பிரிவினை நாள் தமிழகம் எங்கும் கொண்டாடும்படி மத்திய திராவிடக்கழகத் தலைவர் த.பெ, வேதாசலம் அவர்கள் அறிக்கை வெளியிட்டிருப்பதால் இலங்கை வாழ் மக்களாகிய நாமும் திராவிட நாடு பிரிவினையை ஆதரிக்கிறோம் என்பதை அரசியலாளருக்கு எடுத்துக்காட்டுமுகமாகதான் அன்றைய தினத்தில் கருப்புடை அணிந்து தங்களில்லங்களில் கருப்புக் கொடி உயர்த்தி தங்களாளியன்றளவு கழகத்திற்கு அங்கத்தினர்களை சேர்த்து கூட்டங்களை ஆடம்பரமில்லாத முறையில் கூடி கொள்கைகளையும் இலட்சியத்தையும் விளக்கப்பேசி தீர்மானங்களை நிறைவேற்றி எல்லா பத்திரிகைகளுக்கும் அரசியலாளர்களுக்கும் நமது தலைவர் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கட்கும் அனுப்பி வைக்குமாறு இ. தி. க. தலைவர் காத்தமுத்து இளஞ்செழியன் அறிவித்தார். (09)

திராவிடக் கழகமென உத்தியோகபூர்வமாக பிரகடனப்படுத்த முதலே அப்பெயரில் அறிக்கை விடுத்த சுயமரியாதை இயக்கத்தினர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

11. 07. 1948 அன்று தமிழக தி.க.உறுப்பினர் கோபி செட்டிபாளயம் ஜீ.என். இராசு, அவர்களை வரவழைத்து கொழும்பில் நடத்திய கூட்டத்தின் போது இப்பெயர் மாற்றத்தினை உத்தியோகபூர்வமாக பிரகடனப்படுத்தினர். இக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய திரு . ஜீ. என். இராசு அவர்கள் இலங்கை திராவிட கழகத்தை திறந்துவைக்கும் சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தமைக்கு நான் பெருமையடைகிறேன். உலகத்திலே உள்ள ஒவ்வொரு இனமும் தம் இன முன்னேற்றத்திற்கு தனி ஆட்சி கோரி கிளர்ச்சி செய்கின்றனர். உலகில் எங்கு நோக்கினும் இன எழுச்சியும் கிளர்ச்சியுமே காணப்படுகின்றது. அவ்வவ்வினத்திற்கு அவ்வினத்தின் ஆட்சியின் மூலமே நன்மையும் பாதுகாப்பும் செய்ய முடியும். திராவிட நாடு தனி அரசு கோருவதை எந்த அறிஞர்களாலும் ஆராய்ச்சியாளர்களாலும் மறுக்க முடியாது. பூகோளரீதியாகப் பார்த்தாலும் சரித்திரபூர்வமாகப் பார்த்தாலும் சட்ட நுணுக்கங்களை கொண்டு பார்த்தாலும் திராவிட நாடு தனிநாடாக கோருவதை மறுக்க முடியுமா? பொருளாதார வளத்திலே திராவிட நாட்டை விடமிகச்சிறிய நாடுகள் தனி ஆட்சி செய்யவில்லையா?. நமது இலங்கைத் தீவு 65இலட்சம் மக்களைக் கொண்டது. நிலப்பரப்பிலே கோயம்புத்தூர் ஜில்லாவுக்கு சமதையானது. இந்த நாடு தனி ஆட்சி செய்வதில் என்ன தீங்குகள் நேரிட்டு விட்டது. (!0) எனக் கூறியதுடன் விழாவில் கலந்து கொண்டோரைக் கொண்டு புதிய நிர்வாகச்சபையொன்றும் உருவாக்கப்பட்டது. முறையே திரு. காத்தமுத்து இளஞ்செழியன் அவர்கள் தலைவராகவும் திருவாளர்கள் எம். ஜி. பிரகாசம் எஸ். கே . சுந்தரராஜன் என்போர் உப தலைவர்களாகவும் திரு. ஏ. எம் அந்தோனிமுத்து பொதுச் செயலாளராகவும் திருவாளர்கள் ஏ.கே. ஜமால்தீன், எஸ். வி.ஜெகநாதன் என்போர் இணைச் செயலாளர்களாகவும் , திரு. கே கந்தசாமி அவர்கள் பொருளாலராகவும் மற்றும் திருவாளர்கள் கு.யா .திராவிடக்கழல் , எஸ் . வி. பாலக்கணபதி, ஏ. இளஞ்செழியன், எஸ் . கே. மாயக்கிருஸ்ணன் ஜே. எம், அருமைநாயகம், ரி. எம். ஏ அமீது, வி. பேதுரு, எம். . எஸ் பெருமாள், ஜே.பி. எம். ஜமால், மொகைதீன், இ. பா. க மாணிக்கம், எஸ். முனியசாமி, எஸ். சூசை, எஸ் கே. ராஜரத்தினம், ஜோக்கின், பி. எம் மாணிக்கம், என்போர் செயற்குழு உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

கோபி செட்டிபாளையம் திரு. ஜீ.என். இராசுவின் உரை இலங்கை வாழ் இந்திய வம்சாவளியினர் மத்தியில் மட்டுமல்லாது இலங்கையைத் தாயகமாகக் கொண்ட, தமிழர்கள் மத்தியிலும் · தமிழ் தேசிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உணர்வினைத் தோற்றுவித்தது. சென்னை முதலமைச்சர் திரு. சி. ராஜாஜி 1948ல் ஹிந்தியை அறிமுகப்படுத்த முனைந்தமைக்கு எதிராக இலங்கையில் பல எதிர்ப்புக்கூட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் இக்கூட்டங்களில் பங்கு கொண்டோரின் தரத்திலும் குணவியல்ரீதியான மாற்றம் தோன்றியது. ஹிந்தி திணிப்பினை எதிர்ப்பதற்கான நிர்வாகக்குழுவொன்றினை உருவாக்கும் நோக்கில் இலங்கை திராவிடக்கழகம் 31. 07. 1948 அன்று கொழும்பு மெயின் வீதி இல. 200க் கொண்ட இல்லத்தில் கூட்டமொன்றினை ஏற்பாடு செய்திருந்தது. இக் கூட்டத்தில் இலங்கைத் தமிழர் வரலாற்றில் முக்கிய பங்கு வகித்த மறைந்த திரு. அ அமிர்தலிங்கம் கலந்து கொண்டதுடன் ஹிந்தி எதிர்ப்பு கூட்டமொன்றினை ஒழுங்கு செய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் செயலாளராகவும் நியமிக்கப்பட்டார். (ஆயினும் இவர் இ. தி. க. வின் உறுப்பினராக இருக்கவில்லை. )திரு. அ. அமிர்தலிங்கம் தலைமையிலான குழுவினர் 1948. 08. 22 திகதியன்று ஹிந்தி எதிர்ப்பு மாநாட்டை கொழும்பில் நடாத்தினர். அவ்வேளையில கொழும்பு பல்கலைக்கழக விரிவுரையாளராகவிருந்த மறைந்த பேராசிரியர் சு.வித்தியானந்தன் உட்பட பல அறிவு ஜீவிகள் உரையாற்றியுள்ளமையிலிருந்து தமிழக திராவிடக்கழகம் விதைத்த தமிழ் தேசிய வாதம் இலங்கையில் வேருன்றியமையினைக் காணலாம்..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலங்கை திராவிடர் முன்னேற்றக் கழகமும் இளஞ்செழியனின் பிரவேசமும்

இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்ட இலங்கை திராவிடக் கழகம் 1949 இல் தமிழகத் திராவிடக் கழகத்தினுள் ஏற்பட்ட பிளவின் போது தமிழகத்தையே பின்பற்றியது. சுயமரியாதை இயக்கத்தின் ஸ்தாபகரான ஈ. வெ. ரா. பெரியார் தமது அறுபத்தெட்டாவது வயதில், கழக உறுப்பினர்களில் ஒருவரான இருபத்தாறு வயதுடைய செல்வி. மணியம்மையை திருமணம் முடிக்கத் தீர்மானித்தார். பெரியாரின் கொள்கையினை முன்னெடுத்த கழகத்தின் இளம் தலைமுறையினருக்கு இது பாரிய சமூகப் பிரச்சனையாகத் தோன்றியது. தாம் இறந்த பின்பு தமது சொத்துக்களுக்கும், கழக சொத்துக்களுக்கும் ஓர் உறவு முறை உரித்துடையார் சட்ட ரீதியாகத் தேவைப்படுவதை கருத்திற் கொண்டு கழகப் பணிகளுடன் தமது பணிகளையும் செய்து வந்த மணியம்மையை பெரியார் மணமுடிக்கத் தீர்மானித்த போதும், கழகத்தின் ஒரு பிரிவினர் அதனை ஏற்க மறுத்தனர். பெரியாருக்குப் பின் அவரது பணியினை முன்னெடுத்துச் செல்வார் எனக் கருதப்பட்ட திரு. சி. என். அண்ணாத்துரை அவர்கள் பெரியாரின் இவ் நடவடிக்கையை கடுமையாக எதிர்த்ததுடன், கழகத்தை விட்டு வெளியேரத் தீர்மானித்தார். திரு சி. என். அண்ணாதுரையுடன் ஒரு சில பிரிவினர் வெளியேறி திராவிட முன்னேற்றக் கழகம் எனும் அமைப்பினை 1949 ஆம் ஆண்டு செப்டம்பர் 17ம் திகதி உருவாக்கினர்.

திராவிட முன்னேற்றக்கழக அங்குரார்ப்பணக் கூட்டத்தில் உரையபற்றிய திரு சி. என். அண்ணாத்துரை கழகத்தை கைப்பற்றுவதும், புதிய தலைமையின் கீழ் நடத்துவதும் சாத்தியமான காரியமேயாகும். இதை நான் ஒப்புக் கொள்கிறேன். போதிய வலிவும் தேவையான வசதியும், மறுக்கமுடியாத நியாயமும் நம்மிடமிருக்கின்றன. எனினும் நாம் இவ்வழிசெல்வது நாட்டிலே நாசம் நர்த்தனம் செய்வதும், பாசத்திற்கும், பழமைக்கும், நம்மையறியாமல் இடம் தேடி கொடுத்திடவும் நாம் ஆளாகி விடுவோமா என்று அஞ்சுகிறேன். கனிபறிக்க மரம் ஏறும் போது கருநாகம் காலைச்சுற்றிக்கொள்வது போல் பெரியாரிடமிருந்து கழகத்தை மீட்கும் காரியத்தில் நாம் ஈடுபடும் சமயமாகப் பார்த்து அதைச் சாதகமாக ஆக்கிக்கொண்டு பாசிசமும், பழமையும் மக்களை பிடித்தாட்ட முற்படக் கூடும். கழகத்தைக் கைப்பற்றுவது என்பதற்கு யாரும் கட்டுப்படவேண்டிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முறைகள் உண்டு. நாம் அறிந்துள்ள பெரியார் இந்த முறைகளுக்குக் கட்டுப்படவோ இதனை ஏற்கவோ தயாரில்லை. நாம் ஒருபுறம் திராவிடக் கழகமென்ற லேபிளுடனும் அவர் மற்றொரு புறம் அதே லேபிளுடனும் உலாவுவதும் இரு சாராருக்கும் இடையில் மோதவிட விரும்பும் சந்தர்ப்பவாதிகள் ஆட்டம் ஆடுவதற்கும் இந்த சூழ்நிலையை சாதகமாக ஆக்கிக் கொண்டு நாட்டை நாசம் ஆக்குவதற்குமான காரியம்தான் நடைபெறும். கழகத்தின் 'லேபிள்' அல்ல முக்கியம். கொள்கைகள் வேலைத்திட்டம் இவைகளே முக்கியம். ஒரு தனிநபர் கூட லேபிள் தன்னிடம் இருப்பதாக எப்போதும் கூறிக்கொண்டிருக்க முடியாது. ஆனால் கூட்டு முயற்சி இல்லாமல் கொள்கை பரவாது. இலட்சியமும் உருப்பெறாது. அந்த கூட்டு முயற்சிக்கான வசதியும் வாய்ப்பும் வலிவும் நம்மிடம் இருக்கின்றன. ஏராளமான அளவில் வளரக்கூடிய விதத்தில் கொள்கைகளைப் பரப்பி இலட்சியத்தை வெற்றிகரமாக ஆக்க நாம் தனித்திருந்து அவருடைய தலைமையை மட்டுமல்ல லேபிளையே நீக்கி விட்டு திராவிட முன்னேற்றக் கழகமென்ற பெயருடன் பணியாற்றி வருவதுதான் நல்ல வழி என்பது என் கருத்து. (11) மேற்கூறிய கருத்துக்களை முன்வைத்து திரு. சி. என். அண்ணாதுரை திராவிட கழகத்தை விட்டகன்று திராவிட முன்னேற்றக் கழகத்தை உருவாக்கியதுடன், இலங்கை திராவிட கழகத்திலும் இப்பிரச்சினை எதிரொலித்தது. தமிழக திராவிடக் கழகத்தில் ஏற்பட்ட பிரச்சினையைப் பற்றி கலந்துரையாடுவதற்காக இலங்கை திராவிடக் கழக செயற்குழு 1949 செப்டம்பர் 17ம் திகதி ஒன்று கூடியது. பெரியாரின் திருமணம் தொடர்பாகவும் திரு.சி.என்.அண்ணாதுரையின் நடவடிக்கை பற்றியும் கலந்துயைடப்பட்டது. சற்றில் திருவாளர்கள் ஞான. செபஸ்டியான், புலவர் தமிழ்மறை,சீதாக்காதி, கு. யா. திராவிடக்கழல் முதலியோரின் எதிர்ப்புக்கு மத்தியில் திராவிட முன்னேற்றக் கழகம் என்ற பெயரில் அமைப்பு செயற்படுவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

இதற்கமைய 1949 முதல் இலங்கை திராவிடக் கழகம் திராவிட முன்னேற்றக் கழகம் எனும் பெயரினை ஏற்று அதனைப் பிரகடனப் படுத்துவதென முடிவு செய்தது. இக் கூட்டத்தில் கலந்து கொண்ட கழகத்தின் இளம் பேச்சாளராக வளர்ந்து வந்தவரும், கழகத்தின் பொதுச்செயலாளராக அவ்வருட இறுதியில் தேர்ந்தெடுக்கப்பட்டவருமான திரு. ஏ. இளஞ்செழியன் பிரேரித்த திருத்த பிரேரணையுடன் கழகத்தின் புதிய பெயர் பிரகடனப்படுத்தப்பட்டது. தமிழகத்தை சார்ந்த திராவிட கழக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உறுப்பினர்கள் திராவிட நாட்டினைக் குறிக்கோளாக கொண்டே திராவிட முன்னேற்றக் கழகம் எனும் பெயரினை முன்வைத்துள்ளனர். இலங்கையைத் தாயகமாகக் கொண்ட எம்மால் அவ்வாறு செய்ய முடியாது. எனவே நாம் இனத்தினை அடிப்படையாகக் கொண்டு திராவிடர் முன்னேற்றக் கழகம் எனும் பெயரினையே பிரகடனப்படுத்த வேண்டும் எனக்கூறியதுடன் அப்பெயர் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

திராவிடர் முன்னேற்றக் கழகம் என்ற பெயரில் அன்று முதல் செயற்பட ஆரம்பித்த இலங்கை திராவிடக் கழகம் அவ்வருட இறுதியில் கழகப் பொதுத்தேர்தலை நடத்தியது. இப்பொதுத்தேர்தலில் கழகப் பொதுச்செயலாளராக இளம் பேச்சாளரான ஏ. இளஞ்செழியன் தேர்ந்தெடுக்கப்பட்டார். திரு. ஏ. இளஞ்செழியன் பொதுச்செயலாளராகப் பதவியேற்றப்பின் திராவிடர் முன்னேற்ற கழகம், நாடு தழுவிய இயக்கமாகப் பரிணமித்தது. தனியே தமிழகத்தில் தோன்றும் போராட்டங்களுக்கு ஆதரவளிக்கும் இயக்கமாக இல்லாது உள்நாட்டு பிரச்சினைகள் தொடர்பாகவும், கழகம் குரலெழுப்பியது. சிறப்பாக இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மக்களின் பிரச்சினைகள் தொடர்பாகவும் பொதுவாக தமிழ் மக்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் குரல் எழுப்பியது.

1946ல் இலங்கை திராவிடர் கழகத்தில் இணைந்து செயற்பட்ட திரு. இளஞ்செழியன் இயற்கையாகவே நாவன்மையைக் கொண்டிருந்தார். தமிழகத்திலிருந்து வெளிவரும் திராவிட வெளியீடுகளான "விடுதலை", "குடியரசு" முதலிய பத்திரிகைகளை தொடர்ச்சியாக வாசிப்பதன் மூலம் சாதியத்தைப் பற்றியும், சமயரீதியான மூடநம்பிக்கைகளைப்பற்றியும், ஆழமான அறிவினைப் பெற்றிருந்தமையினால் மிக இலகுவில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் உயர்பீடத்தை திரு. ஏ. இளஞ்செழியனால் அடையமுடிந்தது. திரு. ஏ. இளஞ்செழியன் முதன்முதலாக 1946ல் கண்டிக்கு அண்மையிலுள்ள (கடுகண்ணாவ) கிரிமெட்டிய தோட்டத்திற்கு விஜயம் செய்ததுடன் கொழும்புக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்த திராவிட முன்னேற்றக் கழகம் மலையகத் தோட்டங்களுக்கும் வியாபித்தது.

தமிழக திராவிடக்கழகத்தினர், மக்களின் கலாசாரத்துடன் ஒன்றிணைந்து காணப்பட்ட குடும்ப விழாக்களை தமது பிரச்சார ஊடகமாகப் பயன்படுத்தினர். தமிழ் மக்களின் கலாசாரத்தின்படி திருமணம், பூப்பெய்தல் என்பன பிரிக்க முடியாத குடும்ப நிகழ்வுகளாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காணப்பட்டன. இவ்விழாக்களில் உறவினர்களும், சுற்றம் சூழவுள்ள மக்களும் கலந்து கொள்வது வழமையாக இருந்தது. கழக அங்கத்தினர் ஒருவரின் வீட்டில் இவ்வாறான நிகழ்வுகள் நடந்தால் திராவிடக்கழகத் தலைவர்களை அழைப்பதனை கழக உறுப்பினர்கள் ஓர் கடமையாகக் கொண்டிருந்தனர். இவ்வாறு கலந்து கொள்ளும் தலைவர்கள் பாரம்பரியத்துக்கு பதிலாக சீர்த்திருத்த முறையினை அறிமுகப்படுத்தினர். திருமணம் ஒன்று நடந்தால் அங்கு ஐயர் புறக்கணிக்கப்பட்டு, கழகத்தலைவர் முன்நிலையில் திருமணம் நடாத்தப்பட்டது. திருமணத்தை வாழ்க்கை ஒப்பந்தம் என பெரியார் கூறினார். திருமணத்தில் கலந்து கொண்ட தலைவர்கள் திராவிடக் கொள்கைகளை விளக்குவதையும், மதத்தையும் சாஸ்திரத்தையும் சாடுவதை ஓர் குறிக்கோளாகக் கொண்டனர். அதே ஊடகத்தை இலங்கை திராவிடக்கழகமும் பின்பற்றியது. திரு. ஏ. இளஞ்செழியன் செயலூக்க உறுப்பினரானதுடன் இவ்வூடகத்தை பயன்படுத்துவது அதிகரிக்கலாயிற்று.

இரண்டாம் உலக யுத்தத்தின்போது பிரித்தானிய காலனித்துவ இராணுவத்தில் இணைந்து சேவைபாற்றி வீடு திரும்பிய கிரிமெட்டிய தோட்டத்தைச் சார்ந்த கே. பீ. குணசீலன் திராவிடர் முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளின் பால் கவரப்பட்டதுடன் இ.தி.க உடன் இணைந்து செயற்பட்டார். திரு. கே. பீ. குணசீலன் 1946ம் ஆண்டு தமது தங்கை சௌந்தரம்பாள் திருமணத்தை சீர்திருத்த முறையில் நடாத்த விளைந்து திரு. ஏ. இளஞ்செழியனை தமது தோட்டத்திற்கு வரவழைத்தார். இளஞ்செழியனின் தலைமையில் இரவில் நடக்கவிருந்த இச் சீர்திருத்த திருமணத்தை இத்தோட்டத்தில் உருவாக்கப்பட்டிருந்த இலங்கை, இந்திய தொழிச்சங்கக் காங்கிரசைச் சார்ந்த தலைவர்கள் எதிர்த்தனர். இவ்வெதிர்ப்புகளுக்கு மத்தியில் திருமணத்திற்கான ஆயத்தங்கள் நடைபெறுதுடன் திரு. இளஞ்செழியன் பேச ஆரம்பித்த போது இவ்வுறுப்பினர்கள் அதனை தடை செய்ய முனைந்தனர். இருதரப்பினர்களுக்கிடையில் பின்னர் சமரசம் ஏற்பட்டதுடன் திரு. இளஞ்செழியன் பேச அனுமதிக்கப்பட்டார். நாவன்மை கொண்ட இளஞ்செழியன் பாரதிதாசனின் கவிதையான தென்திசையைப் பார்க்கின்றேன் என் செய்வேன் எந்தன் தோள்களெல்லாம் பூரிக்குதடடா, எனும் கவிதையைக்கூறி, மலையகத்தை பார்க்கின்றேன். எந்தன் தோள்களெல்லாம் பூரிக்குதடடா, என ஆரம்பித்து மலையக மக்கள் மத்தியில் நிலவும், சாஸ்திரங்களையும், சம்பிரதாயங்களையும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சாதியத்தையும் மதத்தையும் சாடலானார். இவ்வுரையின் பின்னர் அவரை எதிர்த்த பிரிவினர் அவரை தம் வீட்டுக்கு விருந்திற்கு அழைக்கலாயினர். இச் சம்பவத்தின் பின் இ. தி. மு. க. விற்கான களம் மலையகத்தோட்டத் தொழிலாளர் மத்தியிலேயே இருக்கின்றது, என்ற உண்மையை திரு. இளஞ்செழியன் அறியலானார். 1950 ஆண்டு பொதுச்செயலாளராகப் பணியாற்றும் பொறுப்பினையேற்ற திரு. ஏ. இளஞ்செழியன் தம்மை ஒரு முழுநேர கழக ஊழியனாக்கிக் கொள்ளாவிடில் கழகத்தினை கட்டியெழுப்ப முடியாது என உணர்ந்தார். அதுநாள் வரை விக்ரோரியா டீ ஸ்ரோஸ் எனும் கடையில் காசாளராக பணியாற்றிய தம் தொழிலை இராஜினாமா செய்து கழகத்தின் முழு நேர ஊழியரானார். தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆரம்பித்த சி. என். அண்ணாதுரை இரண்டு மாதங்களுக்குள் 700 கிளைகளை உருவாக்கி 50, 000 உறுப்பினர்களைச் சேர்த்தார். இதே பாணியிலான நடவடிக்கையை இளஞ்செழியனும் மேற்கொண்டார்.

மலையகத் தோட்டங்கள் தோறும் கிளை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டார். இதேவேளை இக்காலக்கட்டத்தில் வட இந்தியாவில் டாக்டர் அம்பேத்காரும் தென்னிந்தியாவில் பெரியாரும் சாதியத்தையும் இந்து மதத்தையும் சாடியமையினால் பெரும்பான்மையான தாழ்த்தப்பட்ட இந்துக்கள் மதம் மாறும் முயற்சியில் ஈடுபட்டனர். மக்களுக்கு ஏதேனும் அறவழி தேவையென்பதனை உணர்ந்த அம்பேத்காரும் பெரியாரும் பௌத்த அறநெறி நிலையை பின்பற்றும்படி மக்களிடம் கூறினர். இலங்கையில் திரு. இளஞ்செழியன் தமிழ் பௌத்த சங்கத்தை 1950 இல் உருவாக்கி அதன் இணை செயலாளராகவும் செயற்பட்டார். இத் தமிழ் பௌத்த சங்கத்தின் உருவாக்கம் அகில இலங்கை பௌத்த (சிங்கள) சங்கத்தினருடன் உறவை ஏற்படுத்த உதவியது.

அகில இலங்கை பௌத்த சங்கத்தின் ஆதரவாளரான பொலிஸ் மாஅதிபர் ஒஸ்மன் டி சில்வா தமது செல்வாக்கினைப் பயன்படுத்தி தமிழ் பௌத்த சங்கத்திற்கு காரியாலயம் ஒன்றினை பெற்றுக்கொடுத்தார். கொழும்பு காலி வீதியில் இல. 161ல் அமைந்திருந்த இரண்டு மாடிக் கட்டிடத்தில் தமிழ் பௌத்த சங்க நடவடிக்கைகளை முன்னெடுத்த திரு. இளஞ்செழியன் திராவிடர் முன்னேற்றக் கழக நடவடிக்கைகளையும் முன்னெடுத்தார். மலையகத் தோட்டங்கள் அனைத்திலும் கிளைகள் அமைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செழியனுக்கு இக்காலகட்டத்தில் வெளிவந்த தமிழக சினிமா படங்கள் பெரிதும் உதவின. தமிழகத் திராவிட முன்னேற்றக் கழக தலைவரானத் திரு. சி. என். அண்ணாதுரை முதலாக கலைஞர் மு. கருணாநிதி வரையிலான தி. மு. க உறுப்பினர்களே இக் காலகட்டத்தில் சினிமா படத்திற்கான கதை வசனங்களை பெரும்பாலும் எழுதினர். இவ் வகையில் கலைஞர் மு. கருணாநிதியினால் திரை, கதை, வசனம் எழுதப்பட்டு சிவாஜிகணேசனால் நடிக்கப்பட்ட " பராசக்தி " எனும் திரைப்படம் இக் காலகட்டத்திலேயே மலையக சினிமாக் கொட்டகைகளில் திரையிடப்பட்டது. தென்னிந்தியாவிலிருந்து இலங்கை, பீஜி, மலேசியா, தென்னாப்பிரிக்கா போன்ற நாடுகளுக்கு சென்ற தமிழர்களின் அவல நிலைப்பற்றி இப்படத்தில் குரலெழுப்பப்படுவதுடன் சீர்திருத்த கருத்துக்களையும் கடவுளின் பெயரால் மேற்கொள்ளப்படும் அட்டூழியங்களுக்கு எதிரான காட்சிகளையும் இப்படம் கொண்டிருந்தது..

சீர்திருத்தக் கொள்கைகளை முன்னெடுத்த இ. தி. மு. க. விற்கு இது பேருதவியாக அமைந்தது. இத்துடன் தமிழகத்தில் இருந்து வெளிவந்த "மாலைமணி ", " விடுதலை ", " திராவிடர் ", போன்ற பத்திரிகைகள் இலங்கையில் பரவலாக கிடைத்தது மட்டுமல்லாது இ. தி. மு. க. வினர் எவ்வெவ் தோட்டங்களில் பிரச்சார கூட்டங்களை நடாத்தின மற்றும் நடாத்தவுள்ளன போன்ற செய்திகளையும் இவை தாங்கி வரலாயின.

இ..தி.மு. க. வினர் மலையகத் தோட்டங்களில் கிளைகளை அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த வேளை சென்னையை ஆட்சிசெய்த தமிழக காங்கிரஸ் அரசு 1950களில் இறுதியில் மீண்டும் ஹிந்தி மொழியை முதலாம் வகுப்பு முதல் ஆறாம் வகுப்பு வரை கட்டாயப்பாடமாக்கியது, இதனை எதிர்த்து பெரியாரின் தி. க வும் திராவிட முன்னேற்றக் கழகமும் எதிர்ப்பார்ப்பாட்டங்களை மேற்கொண்டன, .இதற்கு ஆதரவாக எதிர்ப்புக்கூட்டங்களை இ. தி. மு.க. வும் நடாத்தியது, அத்துடன் 1951ல் நடந்த முதலாவது தி . மு .க. மாநாட்டிற்கு இ . தி. மு . க . சார்பாக பிரதிநிதிகளையும் அனுப்பி வைத்து இம்மாநாட்டிற்கு நிதிதிரட்டும் முகமாக மலையகத்தோட்டத் தொழிலாளர் முகம் கொடுத்துள்ள துயர வாழ்க்கையை சித்தரிக்கும் வகையில் கண்ணீர் எனும் நாடகத்தை இ . தி. மு, க. கொழும்பில் மேடையேற்றியதுடன் இதன்மூலம் பெற்ற நிதியை தமது பிரதிநிதிகளூடாக தமிழக தி .மு. க. விற்கு அனுப்பி வைத்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்நாடகத்திற்கான கதையை திரு. இளஞ்செழியன் கூற செம்பனூர் .கே. இராமசாமி அதற்கான வசனத்தை எழுதியமை குறிப்பிடத்தக்கது. எவ்வாறு தமிழக தி . மு . க. வின் சிற்பியான திரு.சி . என் . அண்ணாத்துரை தாம் எழுதிய நாடகங்களில் பிரதான பாத்திரம் ஏற்று நடித்தாரோ அதே போல் இளஞ்செழியனும் இந்நாடகத்தில் பிரதான பாத்திரமேற்று நடிக்கலானார். திரு. இளஞ்செழியனுக்கும் கொழும்பை மையமாகக் கொண்ட கழக உறுப்பினர்களுக்கும் இடையில் கருத்து முரண்பாடு உருவாகியதுடன் கொழும்பு உறுப்பினர்கள் தமது கிளை சார்பாக தனியான பிரதிநிதிகளை தமிழகத்திற்கு அனுப்பி வைத்தனர் இதன்படி திரு. எஸ்.கே. மாயக்கிருஷ்ணன், திருப்பூர் கே. கந்தசாமி, அ. நாச்சியப்பன் முதலியோர் இ. தி. மு . க . சார்பாக கலந்து கொண்டதுடன் இரா . அதிமணி, ஏ. எஸ் .மணவைத்தம்பி என்போர் கொழும்பு மாவட்டம் சார்பாக கலந்து கொண்டுள்ளனர்.

இவ்வாறான நடவடிக்கைகளுடன் தமிழக பேச்சாளர்களை இங்கு வரவழைத்து அவர்களை தமிழ் மக்கள் வாழும் பகுதிகளுக்கு கொண்டு சென்று கொள்கை பிரச்சார நடவடிக்கைகளையும் இ. தி . மு . க . மேற்கொண்டது. இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக சிறப்புக் குழுவொன்றினையும் உருவாக்கியது. முறையே அமைப்புக் குழு செயலாளராக கே .இரத்தினம் (பீ. ஏ), அரசியற்குழு செயலாளர் பி . எஸ் . வேலு (பீ. ஏ), ஆய்வுக்குழு செயலாளர் எம் . ஏ ,வேலழகன் பத்திரிகைக்குழு செயலாளர் இரா. திருமறவன், நிதிக்குழு செயலாளர் ஆர் . சந்திரன் மற்றும் குறட் செல்வன் குமாரசாமி, க , தமிழ்மாறன் முதலியோர் செயற்குழு உறுப்பினராக நியமிக்கப்பட்டனர்.

1952ல் கொழும்பு சாஹிராக் கல்லூரி திருக்குறள் மன்றம் தம் கல்லூரி திருக்குறள் விழாவிற்கு தமிழக தி. மு. க உறுப்பினர் பேராசிரியர் க. அன்பழகனை அழைத்திருந்தது. இவ்விழாவிற்கு சமுகமளித்த பேராசிரியர் அன்பழகனை இ. தி . மு . க. அழைத்து கொழும்பில் பிரச்சாரக்கூட்டத்தை நடாத்தியது, அத்துடன் 1953ல் தமிழக தி . மு . க . உறுப்பினர்களான திருவாளர்கள் சி. பி. சிற்றரசு, ரா. சு. தங்கப்பழம் போன்றோரை வரவழைத்து, பல பிரச்சாரக் கூட்டங்களை நடாத்தியது. இவ்வாறான நடவடிக்கைகளுடன், இலங்கைப் பிரச்சினைகளிலும் இளஞ்செழியன் தலைமையிலான இ . தி . மு. க. அக்கறை செலுத்த தவறவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இரண்டாம் உலக யுத்தத்தின் பின் சர்வதேச ரீதியாக ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி இலங்கையையும் பாதித்தது. 1953ல் ஆட்சியிலிருந்த ஐக்கிய தேசிய கட்சி அதுநாள் வரை மக்களுக்கு அளித்து வந்த அரிசி மானியத்தை அகற்ற தீர்மானித்ததுடன் பல்வேறு துறைகளைச் சார்ந்த தொழிலாளர்களை சேவையிலிருந்து நீக்கியது. அதேவேளை ஜனநாயக விரோத நடவடிக்கைகளையும் மேற்கொண்டது. இவ் ஜனநாயக விரோத நடவடிக்கைகளை கண்டிப்பதற்காகவும் ஜனநாயக உரிமைகளை பாதுகாத்துக் கொள்வதற்காகவும் ஓரணித்திரளுமாறு தொழிற்சங்கங்கள் அறைகூவல் விடுத்தன. இலங்கை தொழிற்சங்க சம்மேளனம் இதற்கான கலந்துரையாடலை 20. 07. 53 அன்று ஒழுங்கு செய்தது. அதற்கான அழைப்புக் கடிதத்தை முதல் நாளே அனைத்து தொழிற்சங்கங்களுக்கும் அனுப்பி வைத்தது.

20. 07. 53 அன்று நடந்த கலந்துரையாடலில் இலங்கை தொழிற்சங்க சம்மேளனம் (கம்யூனிஸ்ட் கட்சி சார்பு தொழிற் சங்கம்) சார்பாக அதன் பொதுச்செயலாளர் திரு. எம். ஜி. மென்டிஸ் அவர்களும். இலங்கைத் தொழிலாளர் சம்மேளனம் (சமசமாஜக் கட்சி சார்பு) சார்பாக அதன் பொதுச்செயலாளர் திரு. யு. ஈ. பெரேரா அவர்களும். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சார்பாக திரு. எம். சுப்பையா அவர்களும் இலங்கை வர்த்தக ஊழியர் சங்கம் சார்பாக அதன் பொதுச்செயலாளரான திரு. பி. பாலதம்பு அவர்களும் கலந்து கொண்டனர். இக்கலந்துரையாடலின் முடிவில் மனிதாபிமானமற்ற ரீதியில் அரிசி மானியத்தை நீக்கும் அரசின் முயற்சியையும். ஏனைய ஜனநாயக விரோத நடவடிக்கைகளையும் கண்டிக்கும் வகையில் நாட்டின் அனைத்து சக்திகளையும் ஒன்றிணைத்து அரசிற்கு எதிர்ப்பினைக் காட்ட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

இதன்படி 1953 ஆகஸ்ட் 12ம் திகதி பூரண ஹர்த்தால் நடாத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இத்தீர்மானத்தை மேற்கொண்ட அமைப்புகளில் ஒன்றான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இவ்ஹர்த்தாலில் பங்கு கொள்ளவில்லை. இக்காட்டிக் கொடுப்புக்கு மத்தியில் ஹர்த்தால் பூரண வெற்றி பெற்றது. இவ்வரலாற்று முக்கியத்துவம் பெற்ற போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு இலங்கைத் தி. மு. க. விற்கு அழைப்பு கிடைக்கா விட்டாலும். இ. தி. மு. க. இவ் ஹர்த்தாலுக்கு சார்பாக துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டதுடன். சிற்றூழியத் தொழில்களில் ஈடுபட்டுள்ள தமது அங்கத்தினர்களை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அன்றையதினம் தொழிலில் ஈடுபட வேண்டாமென அறைகூவல் விடுத்தது. இதற்கிணங்க இ. தி. மு. க உறுப்பினர்கள் சிலர் அன்றையதினம் தொழிலில் ஈடுபடவில்லை. மேற்கூறிய நடவடிக்கையின் காரணமாக இல 161 காலி வீதி, கொள்ளுப்பிட்டியில் இயங்கிய அதன் செயலகம் பொலீசாரால் முற்றுகையிடப்பட்டதுடன் ஆவணங்கள் அனைத்தும் கொண்டு செல்லப்பட்டன.

இவ்வரலாற்று முக்கியத்துவமிக்க சம்பவம் தொடர்பாக பல நூல்கள் வெளிவந்துள்ள போதிலும் இ. தி. மு. கவின் பங்கினை பற்றி குறிப்பிடப்படவில்லை. இச்சம்பவம் தொடர்பாக இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைவராகவும், தற்போது இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராகவும் இருக்கும் திரு. பீட்டர்கெனமன் இலங்கையை "உலுக்கிய ஒரு நாள்" என்ற நூலில்

The right wing leaders of the Ceylon Indian Congress and the CeylonWorkers Congress who yielded to the pressure of the Government and of the high commissioner for India and refused to sanction the strike of their members in the estates have missed a golden opportuniy of demonstrating in prectice the unity of interest between the Ceylonese people and the Indian residents in Ceylon. It is to the mass of the Ceylonese people and not to the UNP government that workers of Indian origin in Ceylon must look for a just solution of their claims to citizenship and franchise (12)

திரு. பீட்டர்கெனமன் தமது நூலில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸும், இலங்கை இந்திய காங்கிரஸும் ஹர்த்தால் போராட்டத்தினை கைவிட்டமையைப் பற்றி சுட்டிக்காட்டிய போதிலும் சிறிதளவிலேனும் ஒத்தாசை நல்கி பொலிஸ் கெடுபிடிகளுக்கு ஆளான இ. தி. மு. கவைப் பற்றி குறிப்பிடவில்லை. ஹர்த்தால் சம்பவத்துடன் இலங்கைப் பிரச்சினைகள் தொடர்பாகவும் குரலெழுப்பிய இ. தி. மு. க உட்கட்சி முரண்பாட்டிற்கு முகம் கொடுத்தது. திரு. ஏ. இளஞ்செழியன் தலைமையிலான பிரிவினர் இ. தி. மு. க இலங்கை வாழ் தமிழ் மக்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகளுக்காக குரலெலுப்ப வேண்டுமென்பதுடன் தமிழக தி. மு .க தலைமைகளை இ. தி. மு. க ஏற்கக்கூடாது எனும் கருத்தினை முன்வைத்தனர். இக்கருத்தினை ஏற்காதவர்கள் வேறொரு அமைப்பாக பிரிந்தனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1954ல் இலங்கை வந்த தி. மு. க. வின் மூத்த உறுப்பினர் நாவலர் நெடுஞ்செழியன் இவ்விருபிரிவினரையும் இணைக்கும் முயற்சியில் ஈடுபட்டார். ஆயினும் அம்முயற்சி பயனளிக்கவில்லை,

திரு. ஏ. இளஞ்செழியன் பதவியேற்ற முதல் இ. தி. மு. க. வை இலங்கை மயமாக்க முனைந்ததுடன் அதன் தலைமை இலங்கையரைக் கொண்டதாக இருக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டினைக் கொண்டிருந்தார். ஆனால் இக்கருத்தினை எதிர்த்த பிரிவினர் தமிழக தி. மு. க. தலைமையே இலங்கை தி. மு. க.வின் தலைமையாக இருக்கவேண்டும் எனும் நிலைப்பாட்டினை மேற்கொண்டனர்.

இப்பிரச்சினை தொடர்பாக பொதுச்செயலாளர் என்ற ரீதியில் திரு. ஏ. இளஞ்செழியன் வெளியிட்ட துண்டுப் பிரசுரத்தில், இலங்கை திராவிடர் முன்னேற்றக்கழகம் இலங்கை மக்களுடையது. அதன் லட்சியமும் வாழ்வும் ஆகும் என்பதை புரிந்துக்கொண்டு ஒரே இன மக்கள் என்ற திராவிட இனத்தவர்களுக்கான தன்னால் ஆன மட்டும் ஒத்துழைப்பு கொடுப்பவர்களாக இருக்கவேண்டும் தவிர பாரத நாட்டு காந்தியார், நேருஜி போன்ற தலைவர்களின் பெயர்களை கூறி நாம் இந்தியர்கள் நமது தலைவர்கள் காந்தி நேரு என காங்கிரஸ்ப்பக்கம் மலைநாட்டு மக்களை இழுத்து மக்கள் மீது இந்நாட்டுப் பற்றும், இந்நாட்டு நம்பிக்கையை கொள்ளாத வண்ணம் பல லட்சம் மக்களது வாழ்விலே மண்ணைத்தூவி அவர்களை நாடற்றவர் நாதியற்றவர் என்ற நிலைக்கு ஆளாக்கியுள்ளனர். மலைநாட்டு மக்களே அஞ்சாதீர்,அஞ்சாதீர் உங்களது பிரஜா உரிமை இதோ பாரோர் புகழும் பாரதப் பிரதமர் நேருவிடமிருந்து வருகிறது தபாலில் என்ற நம்பிக்கையை ஊட்டி .......... இன்னுமொருபிரிவினர் சென்னையை காட்டி அங்கிருந்துதான் உங்கள் விடுதலை நிச்சயமாக வரும் என்ற ஆகாத நம்பிக்கையை ஊட்டி (13) என நீண்டுச் செல்லும் தமது செய்தியில் இலங்கை இந்திய வம்சாவளி மக்கள் இந்நாட்டுத் தலைவர்களையே தமது தலைவர்களாக கொள்ள வேண்டுமெனவும் இந்நாட்டை அவர்களது தாய்நாடாக கருதேவண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை வம்சாவளி மக்கள் இலங்கையில் நிரந்தரக்குடிகளாக ஆகிய நாள் முதல் இந்தியத் தலைவர்களையே தமது தலைவர்களாகக் கருதியதுடன் இந்தியாவைத் தமது தாய் நாடாகக் கருதினர். இலங்கையின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இடதுசாரி தலைவர்களை தவிர்த்து ஏனைய இலங்கைத் தலைவர்கள் இவர்களை வேற்று நாட்டினராக கருதியமையே இதற்கான பிரதான காரணம். ஆயினும் சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மக்கள் மத்தியில் ஒரு சில மாற்றங்கள் ஏற்பட்டபோதிலும் அவர்கள் மத்தியில் இந்தியத் தலைவர்களை தமது தலைவர்களாகக் காட்டி வேருன்றிய ஸ்தாபனங்கள் தொடர்ந்தும் இந்தியத் தலைவர்களே இலங்கைத் தோட்டத்தொழிலாளர்களின் தலைவர்கள் எனக் கூறி வந்தனர் தோட்டத் தொழிலாளர்கள் இந்தியத் தலைவர்களை வந்தனம் செய்தனர். இதனால் சுதேச சிங்கள மக்களும் மலையக தோட்டத்தொழிலாளர்கள் இந்நாட்டிற்கு விசுவாசமானவர் அல்ல என்றனர். இந்நாட்டில் ஆயுத கிளர்ச்சி மேற்கொண்ட மறைந்த ஜே. வி. பி. (மக்கள் விடுதலை முன்னணி) தலைவர் விஜேவீரவும் இதே நிலைப்பாட்டினையே கொண்டிருந்தார். இவ்வகையில் திரு. இளஞ்செழியன் தொலைநோக்குடன் இலங்கை வாழ் இந்தியத் தமிழர் மத்தியில் நாம் இந்நாட்டைச் சார்ந்தோர் இந்நாட்டுத் தலைவர்களே நமது தலைவர்கள் என்பதனை ஐம்பதுகளிலேயே வலியுறுத்தியமை ஓர் தீர்க்க தரிசனமிக்க செயலாகும்.

ஐம்பதுகளில் இறுதியில் இலங்கை அரசியலில் ஏற்பட்ட மாற்றங்கள் இ. தி. மு. க. மேலும் தேசியமயமாவதற்கும் தேசிய ரீதியில் வியாபிக்கவும் வாய்ப்பளித்தது. 1956ல் ஆட்சி பீடமேறிய எஸ். டபிள்யு ஆர். டி. பண்டாரநாயக்க சிங்கள மொழியினை மட்டும் அரசகருமமொழியாக ஆக்குவதற்கான சட்டத்தைக் கொண்டுவரலானார். பதவியேற்க முன் நாட்டு மக்கள் பேசும் இருமொழிகளான சிங்களத்தையும், தமிழையும் அரசு மொழியாக்குவேன் எனக்கூறிவந்த திரு. எஸ். டபிள்யு ஆர். டி. பண்டாரநாயக்க 1956 ஜுன் 5ம் திகதி கொண்டுவரப்பட்ட அரசமொழிச்சட்டத்தின் மூலம் சிங்களத்தை அரச மொழியாக்கினார். தமிழகத்தில் தி. க. வும், தி. மு. க. வும் செல்வாக்குப் பெறுவதற்கு ஹிந்தி மொழித்திணிப்பு ஓர் பிரதான காரணமாக அமைந்தது. இதேபோல் இலங்கையில் சிங்களமொழி சட்ட அமுலாக்கல் இ. தி. மு. க. தமிழ்மக்கள் மத்தியில் வியாபிக்க அடித்தளமாக அமைந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிங்கள மொழிச்சட்ட அமுலாக்கலும் தமிழ் தேசியவாதமும்

1956ல் சிங்கள மொழியை அரச கரும மொழியாக காலஞ்சென்ற எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி அரசு அமுலாக்கிய போது அதுநாள் வரை தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் சமஷ்டி ஆட்சியைக் கோரி வந்த தமிழரசுக்கட்சி மற்றும் தமிழ் காங்கிரஸ் உட்பட வடகிழக்கு வாழ் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக குரலெழுப்பி வந்த தமிழ் அமைப்புகள் அனைத்தும் இவ் அநீதியான சட்டத்திற்கெதிராக போர்க்கொடி உயர்த்தலாயின. தமிழகத்தில் ஹிந்தி மொழியை அமுலாக்குவதற்கு எதிராக இலங்கையில் ஆர்ப்பாட்டம் செய்த இ. தி. மு. க. இலங்கைத் தேசியப் பிரச்சினைகளுடன் தம்மை இணைத்துக் கொள்ள ஆரம்பித்த வேளையிலேயே சிங்கள மொழியை மட்டும் அரச கரும மொழியாக இலங்கை அரசு அமுலாக்கியது. இலங்கை அரசின் இவ் ஜனநாயக விரோத நடவடிக்கைக்கு எதிராக மொழியுரிமைப் போராட்டத்தையும் இ. தி. மு. க. தமது ஏனைய நடவடிக்கைகளுடன் ஒன்றிணைத்துக் கொண்டது.

தமிழ் மொழிக்கு சம அந்தஸ்து கொடுக்க வேண்டுமெனும் பிரச்சாரத்தை முன்னெடுத்த இ .தி. மு. க. மலையகத்தில் மட்டுமல்லாது, வடகிழக்கு மற்றும் சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழும் நகரங்களிலும் மொழியுரிமைக்கான பிரச்சாரக்கூட்டங்களை நடாத்தியது. தமிழரசுக் கட்சியினரும் ஏனைய தமிழ் அமைப்புகளும் மொழி உரிமைக்கான போராட்டங்களை முன்னெடுத்தமையால் தமிழ் மக்களுக்கெதிரான இனவாதமும் தென்னிலங்கையில் தழைத்தோங்கலாயின. இவ்வாறான பின்னணியின் கீழ் இ. தி. மு. க. துணிந்து தென்னிலங்கையில் மொழி உரிமைக்கோரிக் கூட்டங்களை நடாத்தியது.

தமிழ் மொழிக்கு சம அந்தஸ்து கோரும் பிரச்சாரக் கூட்டத்தை தமது முதலாவது மாநாட்டுடன் 1956 மே 15ம் திகதி பண்டாரவளை சீவலி வித்தியாலயத்தில் நடாத்தியது. இம்மாநாட்டிற்கு முன்னோடியாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நடாத்தப்பட்ட ஊர்வலத்தில் இ. தி. மு. க. உறுப்பினர்கள் **தமிழ் மொழிக்கு சம அந்தஸ்து கொடு! இந்திய வம்சாவளியினருக்கு பிரஜாவுரிமை வழங்கு! நாட்டை சோசலிச பாதைக்கு கொண்டு செல்வோம்** போன்ற பதாகைளை தூக்கிச் சென்றனர். இவ் ஊர்வலத்தை சிங்கள இனவாதிகள் சீர்குலைத்து கலகம் ஏற்படுத்தமுனைந்த வேளை இலங்கை சமசமாஜக் கட்சியின் சிங்களத் தோழர்கள் இவ்வூர்வலத்தில் கலந்து கொண்டு ஊர்வலத்திற்கு பாதுகாப்பு அளித்தமை குறிப்பிடத்தக்கதாகும். இலங்கை சமசமாஜக் கட்சி தமிழும் சிங்களமும் ஆட்சி மொழி எனும் கொள்கையை இக்காலகட்டத்தில் கடைப்பிடித்ததுடன் இக்கொள்கை தொடர்பாக தமது அங்கத்தினர் மத்தியில் அரசியல் கல்வியூட்டியமை இதற்கான காரணமாகும். பண்டாரவளையில் நடாத்தப்பட்ட இம்மாநாட்டில் நடிகர் எம். ஆர். ராதாவின் **"சீமாயணம்"** என்ற நாடகம் மேடையேற்றப்பட்டதுடன் இந்நாடகத்தில் பிரதான வேடமேற்று நடித்த திரு. லடிஸ் வீரமணிக்கு நடிகவேள் என்ற பட்டம் திரு. ஏ. இளஞ்செழியனால் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இம்மாநாட்டைத் தொடர்ந்து நாட்டின் தமிழ் பேசும் மக்கள் வாழும் பிரேதசங்களான வட கிழக்கிலும் பிரச்சாரக் கூட்டங்களை மேற்கொண்ட இ. தி. மு. க. மூன்று பிரதான குறிக்கோள்களை இலக்காகக் கொண்டது அவையாவன சாதி ஒழிப்பு, இந்திய வம்சாவளியினருக்கு பிரஜாவுரிமை, மற்றும் தமிழ் மொழிக்கு சம அந்தஸ்து எனவாக அமைந்ததுடன் ஏலவே தமிழ் மக்களின் உரிமைகளுக்காக குரலெழுப்பி வந்த அமைப்புகளுக்கு இது சவாலாக அமைந்தது. 1956ஆகஸ்ட் 15ம் திகதி யாழ், அரியாலை தமிழ் மகா வித்தியாலயத்தில் நடந்த கூட்டத்துடன் தமது காலை வடக்கில் பதித்த திரு. ஏ. இளஞ்செழியன் வடக்கில் இ. தி. மு. க. கிளைகளை அமைப்பதிலும் செயற்படலானார். அது நாள் வரை பெரியாரின் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டு தாம் வாழும் பகுதிகளில் பகுத்தறிவு மன்றம், திருக்குறள் மன்றம், போன்ற மன்றங்களை அமைத்து செயற்பட்ட யாழ்ப்பாண அறிவுஜீவிகள் பிரிவினர் இ. தி. மு. க. வுடன் இணைந்து செயற்படலாயினர். குறிப்பாக யாழ்ப்பாணத்தில் தாழ்த்தப்பட்ட பிரிவினர் எனக்கூறப்படும் மக்கள் வாழும் பிரதேசங்களில் இ. தி. மு. க. மிக விரைவில் வேரூன்றலாயிற்று.

பருத்தித்துறை, வட்டுக்கோட்டை, பலாலி, நெல்லியடி, வேலணை, தொண்டமானாறு, உடுப்பிட்டி, கரவெட்டி, கரணவாய், இமயாணன்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கரணவாய் தெற்கு, கொடிகாமம், சாவகச்சேரி, வல்வெட்டித்துறை, புலோலி போன்ற பகுதிகளில் ஒரு வருடத்திற்குள் இ. தி. மு. க. கிளைகள் அமைக்கப்பட்டன. மேலும் மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி மற்றும் திருகோணமலை, மட்டக்களப்பு, கல்முனை போன்ற நகரங்களிலும் சிற்றூரார்களிலும் தமது கால்களைப்பதித்த இ. தி. மு. க. தமிழ் மொழிப்பிரச்சினையுடன் நாடு தழுவிய ஸ்தாபனமாகப் பரிணமித்தது.

இ. தி. மு. க. இவ்வாறாக இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக எழுந்த பிரச்சினைகளுக்காக குரலெழுப்பியவேளை தமிழக திராவிடமுன்னேற்றக்கழகம் பாராளுமன்ற அரசியலில் ஈடுபடுவதற்கான தீர்மானத்தை மேற்கொண்டது. பெரியாரினால் ஆரம்பிக்கப்பட்ட திராவிடக்கழகம் (சுயமரியாதை) தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய திராவிட மொழிகளைப் பேசுகின்ற மாநிலங்களை உள்ளடக்கிய திராவிட நாட்டினை பெறுவதை குறிக்கோளாகக் கொண்டிருந்தபோதிலும் பிரித்தானியரால் அறிமுகப்படுத்திய சட்டசபை தேர்தல்களில் பங்குபெறுவதைக் குறிக்கோளாகக் கொண்டிருக்கவில்லை. மாறாக தமது கொள்கைக்கு சார்பானவர்கள் எனும் கட்சிக்கு, தனிநபர்களுக்கு தேர்தல் காலங்களின் போது ஆதரவு வழங்கியது. கழக அங்கத்தவர்கள் இவ்வாறான அரசியலில் ஈடுபட்டால் லஞ்ச ஊழல்களுக்கு பலியாகி விடுவர் என்னும் கருத்தினை பெரியார் கொண்டிருந்தார். இதே கொள்கையினையே திரு. சி. என். அண்ணாத்துரை தலைமையிலான திராவிட முன்னேற்றக்கழகமும் பின்பற்றியது. ஆயினும் இக்கொள்கையிலிருந்து அந்நியமாகி 1957ல் நடந்த பொதுத்தேர்தலில் பங்கு கொண்டது.

தேர்தலில் பங்கு கொள்வதை நியாயப்படுத்துவதற்காக தமிழக தி. மு. க. 1957-ல் சிறப்பு மாநாட்டை கூட்டியது. 10-02-1957ல் கூடிய இச் சிறப்பு மாநாட்டில் தேர்தலில் ஈடுபட்டுத்தான் அந்தஸ்து தேடிக்கொள்ள வேண்டும் என்ற நிலையில் அறிமுகம் இல்லாதவர்களல்ல தி. மு. கழகத்தில் இருப்பவர்கள். நாட்டிற்குப் புதியதோர் அந்தஸ்து தேடித் தருவதற்காகவே தி. மு. கழகம் தேர்தலில் ஈடுபடுகிறது (14) எனும் கருத்தினை முன்வைத்து தமிழக தி. மு. க. சட்டசபைத் தேர்தலில் பங்குபற்றியது.

இச்சந்தர்ப்பத்தில் திரு. ஏ. இளஞ்செழியனின் தலைமையில் இலங்கைத் தி. மு. க. சிறப்புக் கூட்டமொன்றினை நடாத்தி தமிழக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தி. மு. க. வின் நிலையினைப்பற்றி ஆராய்ந்ததுடன் ஈற்றில் அம்முடிவினைப் பற்றி நடுநிலைப்பாட்டை மேற்கொண்டது. பின்னர் தமிழக தி. மு. க வுடனான தொடர்பினை கைவிட்டு தனித்து சுயமரியாதை இயக்கக் கொள்கையினை முன்னெடுப்பது என்னும் தீர்மானத்தை மேற்கொண்டது. இத்தீர்மானத்துடன் இ. தி. மு. க இலங்கைப் பிரச்சனைகளுடன் மட்டும் தம்மை வரையறுத்துக்கொண்டது.

1957-ன் இறுதிகளில் யாழ் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வடக்கின் ஏனைய பிரதேசங்களிலும் கிளைகளை அமைத்த இ. தி. மு. க. சாதி அமைப்பு முறைக்கெதிராக கடும் பிரச்சாரத்தை மேற்கொண்டது. 1957 டிசெம்பர் 28, 29 ஆகிய தினங்களில் இ. தி. மு. க. சமூக சீர்திருத்த மாநாடொன்றினை யாழ்ப்பாணத்தில் நடாத்த திட்டமிட்டபோதிலும் திடீரென ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் காரணமாக இம்மாநாடு பிற்போடப்பட்டதுடன் இதன் பிரதி விளைவாக பருத்தித்துறை கடற் கரையில் பொதுக்கூட்டம் ஒன்று நடாத்தப்பட்டது. தமிழகத்தைச் சார்ந்த தி. மு. க பிரமுகர்களான நாவலர் நெடுஞ்செழியன், ஈ. வி. கே சம்பத், பேராசிரியர் க. அன்பழகன் போன்றோர் வருகைதரவுள்ளனர் என அறிவிக்கப்பட்டிருந்தமையினால் பெருந்திரளான மக்கள் பருத்தித்துறை கடற்கரை மைதானத்தை வந்தடைந்திருந்தனர். இவ்வாறு கூடிய மக்கள் மத்தியிலே ஓர் கயிறு கட்டப்பட்டிருந்ததுடன் இக்கயிற்றின் இருமருங்கிலும் மக்கள் கூடியிருந்தனர்.

தமிழகத்தைச் சார்ந்த பேச்சாளர்களுக்கு இந்திய அரசு இலங்கை வர அனுமதி அளிக்கவில்லை. எனினும் இ. தி. மு. க பொதுச் செயலாளரை பிரதானப் பேச்சாளராகக் கொண்டு கூட்டம் நடாத்தப்பட்டது. பெருந்திரளான மக்கள் இளஞ்செழியனின் உரையை கேட்க கூடியிருந்ததுடன் கூட்டத்தின் நடுவே கயிறு கட்டப்பட்டு மக்கள் இரு பிரிவாகப் பிரிக்கப்பட்டிருந்தனர். பிரதான உரையை ஆற்றவிருந்த திரு.ஏ. இளஞ்செழியன் கூட்டத்தின் நடுவே கயிறு கட்டப்பட்டிருப்பதற்கான காரணத்தை அமைப்பாளரிடம் கேட்டறிந்தார். சாதிரீதியாக மேல் சாதியினர் கீழ் சாதியினருடன் இரண்டறக்கலக்க விரும்பாததன் காரணமாகவே கயிறு கட்டப்பட்டிருந்தது. இதனை அறிந்து கொண்ட திரு. இளஞ்செழியன் தமது உரையின் போது சாதிப் பிரிவிற்கு காரணமாயுள்ள வர்ணாசிரமத்தையும் இந்து மதக் கடவுள்களையும் கடுமையாக விமர்சித்தார். இதனால் வெகுண்டெழுந்த சாதியவாதிகளும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மதவாதிகளும் கடவுளை திட்டாதே இந்து மதத்தை சாடாதே என கோசங்களை எழுப்பி மேடையை நோக்கி கற்களை வீசினர். இதனால் மேடையிலிருந்த யாழ் மாவட்ட தி. மு. க .செயலாளரும் கூட்ட அமைப்பாளருமான இரா. திருமறவன் (மாணிக்கம்) காயத்திற்குள்ளானார். இதனால் வெகுண்டெழுந்த கீழ்சாதியினர் எனக்கூறப்படுவோர் மேல்சாதியினர் நின்ற பகுதியை நோக்கி கற்களை எறிந்ததுடன் இருபிரிவினருக்கும் இடையில் கலகம் மூண்டது. இக்கைகலப்பு சம்பவம் வடக்கு வாழ் தாழ்த்தப்பட்டோர் எனக் கூறப்படும் மக்கள் மத்தியில் ஓர் உத்வேகத்தை அளித்ததுடன் வடகிழக்கு வாழ் மக்கள் மத்தியில் இ. தி. மு. க. பற்றிய நம்பிக்கையையும் ஓங்கச் செய்தது. இதேவேளை அதுநாள்வரை வடகிழக்கு வாழ் மக்கள் மத்தியில் செயற்பட்டு வந்த இயக்கங்களும் அமைப்புக்களும் இ.தி.மு.க. விற்கு எதிரான துஷ்பிரச்சாரத்தை மேற்கொள்ளவும் ஊக்குவித்தது.

பிற்போடப்பட்ட சமூக சீர்த்திருத்த மாநாடு 1958 மே 24, 25 ஆகிய தினங்களில் யாழ்நகர மண்டபத்தில் நடைபெறும் எனும் பிரச்சாரத்தை இ. தி. மு. க. மேற்கொண்டது. இக்காலக் கட்டத்தில் யாழ்வாழ் மக்கள் மத்தியில் பெருமதிப்பைப் பெற்றிருந்த தென்புலோலி புலவர் கந்தமுருகேசனார் இம்மாநாட்டை நடாத்துவதற்கான பொறுப்பினை ஏற்றிருந்தார். இதனால் இ. தி. மு. க.வின் செல்வாக்கு மேலும் உயர்ந்தது! இச்செல்வாக்கு அதிகரிப்புடன் இ. தி. மு. க.விற்கெதிரான பிரச்சாரம் முடுக்கிவிடப்பட்டது. தமிழரசுக்கட்சி சார்பான "சுதந்திரன்" பத்திரிகை இ. தி. மு. க. ஒழுங்கு செய்திருக்கும் மாநாட்டிற்கு எதிரான கருத்துக்களை முன் வைத்தது. இதனை மறுத்து இ. தி. மு. க. வெளியிட்ட துண்டு பிரசுரமொன்றில் இம்மாநாட்டினைப்பற்றிய செய்தியினையும் மறுபுறத்தில் பின்வரும் செய்தியினையும் வெளியிட்டிருந்தது.

இலங்கை திராவிடர் முன்னேற்றக்கழகத்தின் வேகமான வளர்ச்சியைக்கண்டு பொறாமைகொண்டு அதை தடுத்து நிறுத்தி விடலாம் என்ற நோக்கோடு சுதந்திரன் பத்திரிகை அடிக்கடி பொய்யும் புனையும் கலந்து மயானக்குரல் எழுப்பி வருகின்றது. அதன் பிரதிபலிப்பாக 22. 12. 1957ல் வெளியான சுதந்திரனில் யாழ்நகரில் கூடும் மாநாட்டை குழப்பும் வகையில் சூதுச் செய்தியை வாரி வீசி இருக்கிறது. அப்போலிச் செய்திகளை நம்பி இயக்கத் தோழர்களும் ஆதரவாளர்களும் தங்கள் பணியினின்றும் கொஞ்சமும் நழுவாமல் முன்னிலும் வேகமாக பணியாற்றி யாழ் நகர மாநாட்டை சிறப்பிக்க வேண்டுகிறோம் வெற்றி நமதே! இ. தி. மு. க. (15)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவ்வாறான எதிர்ப்புகளுக்கு மத்தியில், மக்கள் மத்தியில் செல்வாக்கு பெற்ற இ. தி. மு. க. இக்காலக் கட்டத்தில் நாட்டின் அனைத்து தமிழ் மக்களையும் தம் வசம் இழுக்கும் வகையிலான தமது கொள்கைத் திட்டத்தை முன்வைத்தது. பொதுச் செயலாளர் மு. அ. வேலழகன் பெயரில் வெளியிடப்பட்ட இக்கொள்கை விளக்கம் பின்வரும் விடயங்களை உள்ளடக்கியிருந்தன.

## இலங்கை திராவிடர் முன்னேற்றக் கழகக் கொள்கை விளக்கம்

இலங்கையைத் தாயகமாகக் கொண்ட திராவிட மக்கள் (தமிழ் பேசும் மக்களின்) நலன் பேணிக் காப்பதே இ. தி. மு. க. கவின் குறிக்கோள்.

### 1. அடிப்படை நோக்கங்கள்

பன்னெடுங் காலமாக அனுபவித்து வந்த உரிமைகளையிழந்து சொந்தநாட்டிலேயே இரண்டாம் தரக் குடிமக்களாக ஆக்கப்பட்டுள்ள இலங்கை திராவிட மக்களது (தமிழ் பேசும் மக்கள்) இழிவை மாற்றவும் இழந்த உரிமைகளை மீண்டும் பெற்று சகல துறைகளிலும் சமவாய்ப்பும் சமசந்தர்ப்பமும் கிடைக்கச்செய்யவும் மதவேறுபாடற்ற முறையில் தமிழ்ப் பேசும் மக்களை ஒரணியிற் திரட்டுதலும்.

### 2. நாடற்றவர்

பன்னூறு ஆண்டுகளுக்கு முன்பதாக இந்நாட்டின் நிலத்தைப் பண்படுத்தவும் பொருள்வளத்தைப் பெருக்கவும் கொண்டு வரப்பட்டு அந்தநாள் முதல் இந்த நாள்வரை வாழையடி வாழையாக இந்நாட்டின் உயிர்நாடியான பொருள் வளத்தைப் பெருக்கும் பெருந்தொழிலில் ஈடுபட்டு பிறப்பாலும் வாழ்நாள் அளவாலும் இலங்கைக் குடிமக்களாக அங்கீகரிக்கப்பட வேண்டிய மலையகத் திராவிடத்தொழிலாளர்களை நாடற்றவர்களாக்கி இந்நாட்டு மக்களோடு கூடி வாழும் நிலையை சீரழித்து இலங்கை தமிழ் பேசும் இனத்தின் எண்ணிக்கையைக் குறைக்கும் வகையில் அமைந்துள்ள போக்கை மாற்றி குடியுரிமை வாக்குரிமை பெற்ற இலங்கைக் குடிமக்களாக வாழ வகை செய்வது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## 3. மொழி

தமிழ் மொழியை இரண்டாவது தேசிய இனமான திராவிட (தமிழ்த்தேசிய) இனத்தின் தேசிய அரசியல் மொழியாக அங்கீகரிக்கப்போராடுதல்.

## 4. சமுதாயம்

மொழி, கலை, பண்பாடு, மனோநிலை ஒரு குடிமக்கள் என்ற உணர்ச்சி வரலாற்று பாந்தத்துவம் போன்ற இயல்புகளால் ஓரின மக்களென்ற தேசிய உணர்வோடு வாழ்ந்த திராவிட மக்களின் வாழ்வின் ஒருமைப்பாட்டைச் சிதைக்கவும், சீரழிக்கவும் இடையிற் புகுத்தப்பட்ட சாதிப்பிரிவினைகள் அவற்றை நம்ப உண்டு பண்ணிய புராணங்கள், இதிகாசங்கள், சம்பிரதாயங்கள் சடங்குகள் திராவிட மக்களின் சிந்தனையைக் குழப்பவும் நிதானத்தையிழக்கவும் அறியாமையில் ஆழ்த்தவும் கற்பிக்கப்பட்ட கற்பனைக்கதைகள், முறைகள், ஏற்பாடுகள் போன்றவைகளை இயலால், இசையால், கூத்தால், எழுத்தால் களைந்தெறிதல். பிறப்பால் தாழ்ந்தவன், உயர்ந்தவன் என்ற மனப் பான்மையை அகற்றி ஒரே இனமக்களென்ற பழங்கால திராவிட மக்களது தேசிய வாழ்க்கை முறையை நிலைநாட்டுவதும் திராவிட மக்களுடைய சிந்தனையை பகுத்தறிவு அடிப்படையில் முறைப்படுத்தி விரிவு படுத்துவதும்.

## 5. அரசியல் பொருளாதாரம்

பொருளாதார ஏற்றத் தாழ்வற்ற இன. சாதி, சமயப் பேதமற்ற ஒரு சமதர்மக் குடியரசு அமைவு பெறுவதற்கு துணை செய்தல். இவை இலங்கை தி. மு. க. பொதுக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படை கொள்கைகளாகும். (16)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியினால் சிங்கள அரசகருமம் மொழிச்சட்டம் அமுலாக்கப்பட்டபின் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் எழுந்த எதிர்ப்பலைக்கு மத்தியில் இ. தி. மு. க வின் இப் புதிய கொள்கைத் திட்டம் பெரும் வரவேற்பை பெறலாயிற்று. இதன்காரணமாக இ. தி. மு. க வை தூசித்த அமைப்புகளும் அதனை அங்கீகரிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டன. எனினும் மொழிப்பிரச்சினை மற்றும் அதிகாரப் பரவல் தொடர்பாக தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. செல்வநாயகம் அவர்களுக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தலைவர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திரு. எஸ். டபிள்யு. ஆர். டி பண்டாரநாயக்க அவர்களுக்கும் இடையில் நடந்த பேச்சுவார்த்தையின் போது வடக்குகிழக்கு பகுதிகளில் தமிழ் மொழி அமுலாக்கல் மற்றும் அதிகாரப்பரவல் தொடர்பாக ஓர் இணக்கம் காணப்பட்டது. இதன் விளைவாக இவ் விடயத்தை உள்ளடக்கிய மசோதாவொன்றினை திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கவின் அரசு 1957-மே-17ந் திகதி அன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தது. தமிழர்களுக்கு நாடு காட்டிக்கொடுக்கப்படுகிறது என பேரினவாத சக்திகள் இம்மசோதாவிற்கு எதிராகக் கிளம்பியதுடன் இம்மசோதாவிற்கு எதிராக கண்டிக்கு பாதயாத்திரை மேற்கொள்வதற்கானநடவடிக்கையில் ஐக்கிய தேசியக் கட்சியைச் சார்ந்த திரு. ஜே. ஆர். ஜயவர்தன அவர்கள் ஈடுபட்டிருந்தார். இவ்வேளையில் தமிழரசுக் கட்சியினரும் இ. தி. மு.க வினரும் தமிழ் மக்கள் மத்தியில் கடும் பிரச்சாரத்தை மேற்கொண்டு வந்தனர்.

இதேவேளை பிற்போடப்பட்ட யாழ்நகர மாநாட்டினை இ. தி. மு. க. 1958மே 24, 25 களில் நடாத்த தீர்மானித்ததுடன் தமிழரசுக்கட்சியினர் 1958 மே 25ம் திகதி வவுனியாவில் சிறப்பு மாநாடு ஒன்றினை நடாத்த தீர்மானித்திருந்தனர். மொழிப்பிரச்சினையில் தீவிரமாக இயங்கிய இரு அமைப்புகளும் முறையே யாழ்பாணத்திலும் வவுனியாவிலும் கூட்டங்களை நடாத்த முனைந்தமையை கண்ணுற்ற பேரினவாத சக்திகள் தமிழரசுக் கட்சியினர் வவுனியாவில் அணிதிரண்டு தென்னிலங்கையை ஆக்கிரமிக்கப் போகின்றனர் எனும் வதந்தியை பரப்பின. குறிப்பாக கே. எம். பி. ராஜரட்ன தலைமையில் இயங்கிய ஜாதிக விமுக்தி பெரமுன (தேசிய விடுதலை முன்னணி) இப்பிரச்சாரத்தை மேற்கொண்டனர். இதன் விளைவாக இனக்கலவரம் தென்னிலங்கையில் தோற்றுவிக்கப்பட்டதுடன் பல நூறுதமிழ் மக்கள் கொல்லப்பட்டதுடன் உடமைகளும் தீக்கிரையாக்கப்பட்டன.

இச்சந்தர்ப்பத்தில் யாழ்பாணத்தில் மாநாட்டை நடாத்தி திரு. இளஞ்செழியனின் தலைமையின் கீழ் தென்னிலங்கை திரும்பிய இ. தி. மு. க. உறுப்பினர்கள் சிங்கள மொழிச் சட்டத்தின் படி பேரூந்துகளில் சிங்கள எழுத்தான ஸ்ரீ யை பொறுத்த வேண்டும் எனும் கட்டளையை மீறி தமது தமிழ் ஸ்ரீ எழுத்தினையையும் சிங்கள ஸ்ரீ எழுத்தினையும் பொறுத்தி தென்னிலங்கை திரும்பிய வேளை கண்டி முல்கம்பளை என்னுமிடத்தில் சிங்கள இனவெறியர்களால் வழிமறிக்கப்பட்டு தாக்கப்பட்டனர். அவ்விடத்தில் வாழ்ந்த சமசமாஜக் கட்சியினர் இதனைக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கேள்வியுற்று தாக்கப்பட்டவர்களை வைத்தியசாலையில் அனுமதித்து சிங்கள இனவெறியர்களை பிடித்து பொலீசிடம் ஒப்படைக்கலாயினர். இவ்வினவெறியர்களுக்கு மூன்று வருட சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. இதேவேளை தென்னிலங்கையின் கொழும்பு நகரம் உட்பட பல நகரங்களில் சமசமாஜக் கட்சி உறுப்பினர்கள் இனவெறியர்களை அடித்து துரத்தி தமிழ் மக்களை காப்பாற்றியமை குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழ் மக்களுக்கெதிராக தென்னிலங்கை பகுதிகளில் சிங்கள இனவெறியர்களால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளும், தாக்குதல்களும் தமிழ் மக்கள் மத்தியில் தமிழ் தேசிய வாதம் மேலும் ஆழமாக வேரூன்ற வழிசமைத்தது. இவ்வினக்கலவரத்துடன் தமது நடவடிக்கைகளை நிறுத்திக்கொள்ளாத தமிழரசுக்கட்சியினரும் இ. தி. மு. க னரும் தமிழ் மொழிக்கு சம அந்தஸ்து மற்றும் அதிகாரப்பரவல் முதலிய கோரிக்கைகள் தொடர்பான பிரச்சாரக்கூட்டங்களை தொடர்ந்து முன்னெடுத்தனர். தமிழரசுக் கட்சியினரும் ஏனைய வடகிழக்கு அமைப்புகளும் வடகிழக்கு பகுதிக்குள் தமது பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன் இவ்வினக்கலவரத்தின் பின்னரும் மலையகம் மற்றும் சிங்கள பகுதிகளில் மேற்கூறிய கோரிக்கைகளுடன் மலையக மக்களின் பிரஜாவுரிமைக் கோரிக்கையையும் முன்வைத்து தமது பிரச்சாரக் கூட்டங்களை இ. தி. மு. க.வினர் அச்சமின்றி நடாத்தலாயினர். இ. தி. மு. க. தென்னிலங்கை நகரங்களில் துணிந்து மேற்கொண்ட பிரச்சாரக்கூட்டங்கள் சிங்கள இனவாதிகள் மத்தியில் பீதியை ஏற்படுத்தியது. தமிழக தி. மு. க. வுடன் இணைத்து வடகிழக்கையும் மலையகத்தையும் தமிழ் நாட்டுடன் இணைத்து தனியான தமிழ் நாட்டினை உருவாக்கப் போகின்றனர் எனும் கருத்து வளர்ந்தோங்கியது. இ. தி. மு. க வை தமிழக தி. மு. க வின் கிளை மற்றும் நாம் தமிழர் இயக்கம் என பெயர்சூட்டி இ தி. மு. க விற்கு எதிரான இனவாத பிரச்சாரத்தை இனவாதிகள் மேற்கொள்ளலாயினர். தமிழக நாம் தமிழர் இயக்கத் தலைவர் ஆதித்தனார் தமிழகம், இலங்கை, பர்மா, மலேசியா, சிங்கப்பூர் என்ற நாடுகளை உள்ளடக்கி அகண்ட தமிழ் இராச்சியம் கொள்கையை முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆயினும் கொழுந்து விட்டெரியும் இனவாத சூழலுக்கு மத்தியில் இ. தி. மு. க மிக சாதுரியமாகவும் யதார்த்தமாகவும் சிங்கள மக்களை அரவணைத்துச் செல்லும் வகையில் போராட்டத்தை முன்னெடுத்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இடதுசாரி அரசியல் கருத்துக்களை தம் சீர்திருத்த கருத்துக்களுடனும் தமிழ் தேசியவாதக் கருத்துக்களுடன் இணைத்துக் கொண்டமையே இதற்கான பிரதான காரணமாகும். குறிப்பாக இ. தி. மு. கவின் தலைவர் ஏ. இளஞ்செழியனும் முன்னணி உறுப்பினர்களும் இலங்கை சமசமாஜக் கட்சியினருடன் கொண்டிருந்த தொடர்பு மற்றும் இக்காலகட்டத்தில் இலங்கை சமசமாஜக் கட்சி தமிழ் மொழி அமுலாக்கல் தொடர்பாகவும் அதிகாரபரவல் தொடர்பாகவும் சரியான நிலைப்பாட்டினைக் கொண்டிருந்தமை என்பன இதற்கான காரணங்களாகும்.

1959ம் ஆண்டு அக்டோபர் 25ம் திகதி கொழும்பு நாராயண குருமண்டபத்தில் இ. தி. மு.க ஓர் பிரச்சாரக்கூட்டத்தினை ஒழுங்கு செய்திருந்தது. இக்கூட்டத்திற்காக வெளியிட்ட துண்டு பிரசுரத்தில்

***வகுப்பு வாதம் ஒழிக! வெல்க தமிழ்!!***
***தேசிய ஐக்கியம் மலர்க!!***

**ஐக்கிய இலங்கைக்காக! சிங்களவர் தமிழர் ஒற்றுமைக்காக!! சமதர்ம குடியரசு அமைப்புக்காக!!!.** (17) என குறிப்பிட்டுள்ளதுடன் பிரதான பேச்சாளர்கள் இக்குறிக்கோள்களை தமது சொற்பொழிவுகளின் போது வலியுறுத்தி வந்தமையினால் கூட்டம் நடாத்தப்படும் சிங்களப்பகுதிகளின் கீழ்மட்ட சிங்களப் பொதுமக்களின் ஆதரவை இ. தி. மு. க. வினர் பெறக்கூடியதாக இருந்தது. இதே ஆண்டு இ. தி. மு. க வின் நீர்கொழும்பு மாவட்டச் செயலாளர் திரு. கே. பி குணசீலர் பொதுக்கூட்டமொன்றையும், ஊர்வலம் ஒன்றினையும் நீர்கொழும்பில் ஒழுங்கு செய்திருந்தார். இவ்வூர்வலத்தையும் கூட்டத்தையும் நடாத்தவிடாது சுற்றி வளைத்துக்கொண்ட சிங்களக் காடையர்களுக்கு மேற்படி இ. தி. மு. க வின் கொள்கையை திரு. ஏ. இளஞ்செழியன் விளக்கியதுடன் அவர்களும் கூட்டத்தில் பங்கு கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும், இவ்வாறு தென்னிலங்கை மக்களின் பிரச்சினைகளுடன் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைக்கான போராட்டத்தை இ. தி. மு. க வினர் முன்னெடுத்த போதிலும் இவ்வியக்கத்தினை ஓர் தமிழ் இனவாத இயக்கமாகப் பிரச்சாரம் செய்வதினை சிங்கள இனவாத சக்திகள் நிறுத்திக் கொள்ளவில்லை.

இனக்கலவரத்தின் பின்னரும் தமிழ் மக்களது உரிமைப் போராட்டம் வலுவடைந்து வந்தமையினாலும் தமிழ் மக்களின் நியாயமான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உரிமைகளை அங்கீகரித்த திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி பண்டாரநாயக்க தமிழரசுக் கட்சித்தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை மீண்டும் அமுல்படுத்த முனைந்தார். இம்முயற்சியின் ஓர் விளைவாக திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி பண்டாரநாயக்க அவர்கள் தம் கட்சி அங்கத்தினர்கள் மத்தியில் தமிழ் மக்களின் நியாயமான உரிமையை ஏற்கச்செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டார்.

இனக்கலவரத்திற்குப் பின்னர் 1959 மே 17ம் திகதி அன்று குருநாகல் நகர மண்டபத்தில் நடந்த ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் 7வது அமர்வில், கடந்த வருடம் நாடு கடுமையான பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்திருந்தது. சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையில் வளரும் இனவாத பதற்றநிலை பரந்த கட்டுப்பாடற்ற தன்மையுடன் வெடிப்புற்றதுடன் மே மாத இறுதிவரை பரவியது. இது அவசரகாலத்தைப் பிரகடனப்படுத்தப்பட வேண்டியதேவையை ஏற்படுத்தியது. நிலைமை மிகவிரைவில் நியாயமான ரீதியில் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டதுடன் இக்காலகட்டத்தின் துன்பகரமான சம்பவங்கள் ஆகக் குறைந்தது சில நன்மைகளைத் தரும். இனவாத வித்தியாசங்களை பெருமளவு கொண்டு சென்றதன் மூலம் கடும் பிரதிபலனை உருவாக்கிய தீவிரவாதிகள் உட்பட அனைவருக்கும் இது ஞாபகத்திலிருக்கச்செய்யும். இவ்வாறான சம்பவங்கள் எதிர்காலத்தில் மீண்டும் உருவாகும் என நான் நினைக்கவில்லை. (18) என உரையாற்றி தாம் முன்வைத்த இரு மசோதாக்களை நிறைவேற்றுவதற்கான ஆணையை தமது கட்சி அங்கத்தவர்களிடம் பெறுவதற்கான முயற்சியில் ஈடுபட்டார். ஆயினும் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி பண்டாரநாயக்க இனவாத சக்தியினால் ஒரு சில மாதங்களின் பின்னர் படுகொலை செய்யப்பட்டார். 1959 செப்டம்பர் 25ம் திகதி திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி பண்டாரநாயக்க படுகொலை செய்யப்பட்டதுடன் பண்டா-செல்வா ஒப்பந்தமும் கைவிடப்பட்டது.

திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி பண்டாரநாயக்கவின் மறைவுடன் அவரால் முன்வைக்கப்பட்ட மசோதாக்களை ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி கைவிட்டதுடன் நாடு ஓர் பொதுத்தேர்தலை சந்தித்தது. இச் சந்தர்ப்பத்தில் பொதுத்தேர்தலின் போது எப்பிரிவினரை ஆதரிப்பது என்ற பிரச்சினை இ. தி. மு. க வினர் மத்தியில் எழுந்தது. இதுதொடர்பாக 1959 டிசெம்பர் 17ம் திகதி திரு. ஏ. இளஞ்செழியனின் தலைமையில் கூடிய இ. தி. மு. க பொதுச்சபை தமிழ் மொழிக்கு சம அந்தஸ்தினை வழங்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வேண்டும் எனும் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட மற்றும் சமதர்ம ஆட்சியினை உருவாக்குவதற்கான கொள்கையை முன் வைத்துள்ள இலங்கை சமசமாஜக் கட்சியினை ஆதரிப்பதெனத் தீர்மானித்தது. இதன்படி 1960 மார்ச்சில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் சமசமாஜ கட்சி வேட்பாளர்களை ஆதரித்து பிரச்சாரக்கூட்டங்களை நடாத்தியது. போதியளவு பெரும்பான்மையை ஸ்ரீ. ல சு. க. கொண்டிராமையினால் 1960 ஜுலையில் மீண்டும் ஒரு பொதுத்தேர்தல் நடாத்தப்பட்டது.

1960 ஜுலையில் நடந்த பொதுத்தேர்தலின் போது இ. தி. மு. க. சமசமாஜ கட்சியினருக்கு ஆதரவு வழங்காது தமிழரசுக் கட்சியினருக்கு ஆதரவு நல்கியது. இலங்கை சமசமாஜ கட்சியினர் 1960 மார்ச் பொதுத்தேர்தலின் போது ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சிக்கெதிராக 120 தொகுதிகளில் போட்டியிட்டதுடன் தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பாக கடைப்பிடிக்கும் இனவாத நிலைப்பாட்டினை வன்மையாகக் கண்டித்தது. ஆனால் 1960 ஜுலையில் நடந்த பொதுத்தேர்தலின் போது ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியுடன் போட்டித் தவிர்ப்பு ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொண்டது. சமதர்மக் கொள்கைக்காகவும் மொழி சம அந்தஸ்திற்காகவும் முன் நின்ற சமசமாஜக்கட்சியினர் நான்கு மாதங்களுக்குள் அக்கொள்கைகளுக்கு எதிரான நிலைப்பாட்டினைக் கொண்ட ஸ்ரீ ல. சு. க. யுடன் போட்டித்தவிர்ப்பினை மேற்கொண்டமை அக்கொள்கைகளின் காரணமாக நட்புறவைப்பேணிய இ. தி. மு. க வினை சிக்கலுக்குள்ளாக்கியது.

லங்கா சமசமாஜக் கட்சியின் இந்நிலைப்பாட்டினை கண்டித்த இ. தி. மு. க. மொழிக்கொள்கைக்காகவும் அதே நேரத்தில் மலையக மக்களின் பிரஜாவுரிமைக்காகவும் குரலெழுப்பும் தமிழரசுக் கட்சிக்கு வடகிழக்கு பகுதிகளில் ஆதரவு வழங்குவது எனத்தீர்மானித்தது. அத்துடன் ஏனைய மாகாணங்களில் இ. தி. மு. க கொள்கைகளை ஏற்றுக்கொள்ளும் வேட்பாளர்களை ஆதரிப்பதெனவும் தீர்மானித்தது. இ. தி. மு. க. வின் இந்நடவடிக்கை நாளடைவில் இ. தி. மு. க தமிழரசுக் கட்சியுடன் இணைந்து ஐக்கிய நடவடிக்கைகளில் ஈடுபட வழிசமைத்தது.

வடகிழக்கு வாழ் தமிழ் மக்களின் உரிமைகளுக்காகவும் குரலெழுப்பிய தமிழரசுக்கட்சியினர் மலையக மக்களின் குடியுரிமைக்காகவும் குரலெழுப்பி வருவதால் அக்கட்சியினருடன் கூட்டுச்சேர்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் இலகுவில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இப்பிரச்சினைக்கும் தீர்வு காணக்கூடிய நிர்ப்பந்தத்தினை அரசுக்கு ஏற்படுத்தலாம் எனும் நிலைப்பாட்டினை இ. தி. மு. க அறுபதுகளின் இறுதியில் மேற்கொண்டது. இந்நிலைப்பாட்டினை அமுல் படுத்தும் வகையில் 1960 டிசெம்பர் 17ம், 18ம் திகதிகளில் கூடிய இ. தி. மு. க பொதுச்சபை மேற்கூறிய நிலைப்பாட்டினை ஏகமானதாக ஏற்றுக்கொண்டதுடன் 1961 ஜனவரி 20ம் திகதி யாழ்ப்பாணத்தில் தமிழரசுக்கட்சியினர் நடாத்தவுள்ள சத்தியாகிரகப் போராட்டத்தில் இ. தி. மு. க உறுப்பினர்களும் கலந்து கொள்ள வேண்டும் எனும் தீர்மானத்தையும் மேற்கொண்டது.

இச் சத்தியாகிரகப் போராட்டத்தைப் பற்றியும் மலையகத்தவர்கள் இப்போராட்டத்தில் பங்கு பற்றுவதன் அவசியத்தை அறிவுறுத்தும் வகையில் இ. தி. மு. க 10-12-1960 அன்று கலாசார மாநாடு ஒன்றினை பண்டாரவளை நகர மண்டபத்தில் நடாத்தியது. இம்மாநாட்டில் தமிழரசுக் கட்சி தலைவர்களான மட்டக்களப்பினைச் சார்ந்த மறைந்த சாம் தம்பிமுத்து. எம். திருச்செல்வம், கியூ. சி மு. மாணிக்கம் என்போர் கலந்துகொண்டனர். இக்கூட்டத்தின் போது திரு. ஏ. இளஞ்செழியன் மலையகத் தமிழர் இப்போராட்டத்தில் இணைவதற்கான அவசியத்தைப்பற்றி வலியுறுத்தலானார். இதன் விளைவாக மலையக இளைஞர்கள் திரு.இளஞ்செழியன் தலைமையில் யாழ்ப்பாணத்தில் நடந்த சத்தியாக்கிரகப் போராட்டத்தில் கலந்துக் கொண்டனர்.

அது நாள்வரை வடகிழக்கு மக்களால் தனித்து முன்னெடுத்த போராட்டங்களை போலல்லாது இச்சத்தியாக்கிரகப் போராட்டத்தில் மலையக மக்களும் பங்கு கொண்டமை அன்றைய ஆட்சியாளர்களைத் திணற வைத்தது. இச்சத்தியாக்கிரகம் இராணுவத்தினைக் கொண்டு முறியடிக்கப்பட்டதுடன் மலையகப் பிரேதசங்களுக்கும் இராணுவம் அனுப்பி வைக்கப்பட்டது. இச்சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்ட வடக்கின் தலைவர்கள் கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டனர்.

இ. தி. மு. க. வின் பிரவேசம் காரணமாக மலையகத்தின் பாரிய தொழிற்சங்கங்களான இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும், ஜனநாயக தொழிலாளர் காங்கிரசும் ஓர் நிலைப்பாட்டினை மேற்கொள்ள நேர்ந்தது. இ.தி.மு.க. வின் ஆதரவுடன் தமிழ் மக்கள் முகம் கொடுத்துள்ள நெருக்கடி தொடர்பான ஆலோசனைக் கூட்டம் கொழும்பு புல்லர்ஸ் வீதியில் உள்ள



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஈழநாடு பத்திரிகையைச் சார்ந்த கே. எஸ். தங்கராசாவின் இல்லத்தில் ஒழுங்கு செய்யப்பட்டது. தமிழ் காங்கிரசைச் சார்ந்த எம். சிவசிதம்பரம் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த தொழிற்சங்கத் தலைவர்களான எஸ். நடேசன் , ரொசாரியோ பர்ணான்டோ, இலங்கைத் தொழிலாளர் காங்கிரசைச்சார்ந்த கே. இராஜலிங்கம், இ தி. மு. க வைச்சார்ந்த ஏ. இளஞ்செழியன், மு. அ. வேலழகன் மற்றும் தமிழ் அபிமானிகளான சேர். கந்தையா வைத்தியநாதன், டாக்டர் பொன்னையா என்போர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் கைது செய்யப்பட்ட தமிழ் தலைவர்களை விடுதலை செய்யும் வரை மற்றும் மலையக மக்களின் குடியுரிமை உட்பட தமிழ் மக்களின் உரிமைகளை பெறும் வரை பொதுவேலை நிறுத்தத்தினை முன்னெடுக்கவேண்டுமெனும் தீர்மானம் எடுக்கப்பட்டதுடன் மலையகத்தில் போராட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொறுப்பினை முறையே ஏ. இளஞ்செழியன், மு.அ. வேலழகன் எஸ். நடேசன், ரொசாரியோ பர்ணாந்து என்போரிடம் ஒப்படைக்கப்பட்டது.

வெற்றியீட்டும் வரை வேலைநிறுத்தத்தைத் தொடருவோம் என சபதமெடுத்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வேலை நிறுத்தத்தை மேற்கொண்ட மறுதினமே அரசின் நிர்ப்பந்தத்திற்கு இணங்கி வேலைநிறுத்தத்திலிருந்து வாபஸ் பெற்றுக் கொண்டது. ஓர் நீண்ட பொதுவேலை நிறுத்தத்திற்கு தம்மை தயார் செய்திருந்த தோட்டத் தொழிலாளர்கள் இதனால் பெரும் ஏமாற்றத்திற்கும் கடன் சுமைக்கும் ஆளானதுடன் பிரஜாவுரிமையை பெற்றுக் கொள்ளக் கூடிய சந்தர்ப்பத்தினையும் தவறவிட்டனர்.

சத்தியாக்கிரகப் போராட்டத்துடன் இ. தி. மு. க. விற்கும் தமிழரசுக் கட்சிக்கும் நல்லுறவு மேலும் வலுவடைந்து இ. தொ. கா, ஜ தொ. கா.. என்பவற்றிற்கு மாற்று சக்தியாக இ. தி. மு. க. வை தமிழரசுக் கட்சியினர் கணிக்கலாயினர். தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த தமிழரசுக் கட்சித் தலைவர்கள் இ. தி. மு. க. வுடன் உத்தியோக பூர்வமாக பேச்சுவார்த்தை மேற்கொள்ள முனைந்தனர். தமிழீழத்தின் சுபாஷ் சந்திரபோஸ் என அழைக்கப்பட்ட அரசு ஊழியரான திரு. இராசரத்தினம் இ. தி. மு.க பொதுச் செயலாளர் திரு. ஏ. இளஞ்செழியனை தடுப்புக்காவலிலுள்ள திரு. அ. அமிர்தலிங்கத்தின் உறவினர் எனக்கூறி சிறைச்சாலைக்கு அழைத்துச் சென்றார். அங்கு எஸ். எம். இராசமாணிக்கம், அ. அமிர்தலிங்கம், டாக்டர் இ. வி. எம். நாகநாதன் ஆகியோருடன் திரு. ஏ. இளஞ்செழியன் கலந்துரையாடலை மேற்கொண்டார். இக்கலந்துரையாடலின் போது மொழியுரிமைக் கோரிக்கையுடன், மலையக மக்களின் குடியுரிமைக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



1961 யாழ் சத்தியாக்கிரகப் போராட்டத்தில்
திரு.ஏ. இளஞ்செழியன். திரு. ஏ. சிவசிதம்பரத்துடன், ஏனைய போராட்ட வீரர்கள் காணப்படுகின்றனர்



சத்தியாக்கிரகப் போராட்டம்.
யாழ் கச்சேரி முற்றம், கையில் கொடியுடன் திரு. ஏ . இளஞ்செழியன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கோரிக்கையும் தமிழரசுக்கட்சி முன்வைக்கின்றமையினால் இ. தி. மு. க. தமிழரசுக்கட்சியுடன் கூட்டிணைந்து செயற்படுவதுபற்றி கலந்துரையாடப்பட்டது.

தமிழரசுக்கட்சியுடன் கூட்டிணைந்து செயற்படுவது தொடர்பாக கலந்துரையாட இ. தி. மு. க இதேயாண்டு பண்டாரவளை மாவட்ட கிளை சார்பாக கூட்டமொன்றினை நடாத்தியது, தமிழரசுக் கட்சியின் சார்பாக திரு. திருச்செல்வம் கியூ. சி. அக்கூட்டத்தில் கலந்து கொண்டதுடன், சமஷ்டி ஆட்சி கிடைத்தால் மலையகத்திற்கு எவ்வாறான நன்மை கிடைக்குமென இ. தி. மு. க உறுப்பினர் கேள்வியெழுப்பினர். தடுப்புக்காவலிலுள்ள தலைவர்கள் விடுதலைபெற்று வந்தவுடன் மற்றும் லண்டனில் சிகிச்சை பெற்றுவரும் தந்தை செல்வா நாடு திரும்பியதும் இக்கேள்விகளுக்கு பதிலளிப்பார் என திரு. திருச்செல்வம் கூறியதுடன் இதனையொத்த பிறிதொரு கூட்டம் நுவரெலியா நகரில் ஒழுங்கு செய்யப்பட்டதுடன் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றும் நடாத்தப்பட்டது.

நுவரெலியாவில் நடாத்தப்பட்ட கூட்டத்தில் தடுப்புக் காவலிலிருந்து விடுதலை பெற்ற திரு. அ. அமிர்தலிங்கம் எம். சிவசிதம்பரம், திருமதி. மங்கையர்க்கரசி முதலியோர் கலந்துகொண்டதுடன் பங்குபற்றுநர்களின் கேள்விகளுக்கு இவர்கள் விடையளித்தனர். இவ்விரு கூட்டங்களின் பின்னர் தமிழரசுக்கட்சியினருடன் கூட்டிணைந்து செயற்படும் தீர்மானத்தை இ. தி. மு க. வினர் மேற்கொண்டனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழரசுக் கட்சித்தலைவர்களின் மலையகப் பிரவேசமும் இ. தி. மு. க. தடையும்

தமிழரசுக்கட்சியுடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொண்ட இ. தி. மு. க. 1962 எப்ரல் 21, 22ல் இரண்டாவது மாநில மாநாட்டை ஹற்றனில் நடாத்த திட்டமிட்டது. இம்மாநாட்டின் சிறப்பு விருந்தினராகப் பங்குகொள்ளும்படி தமிழரசுக் கட்சித் தலைவர்களுக்கும் ஏனைய மலையக தொழிற்சங்கத் தலைவர்களுக்கும் அழைப்பு விடுத்தது. மலையக மக்களின் குடியுரிமையும், மொழியுரிமையும் இம்மாநாட்டின் பிரதான கோரிக்கையாக அமைந்தது. இம்மாநாட்டில் தமிழரசுக்கட்சித் தலைவர்கள் பங்கு கொண்டதுடன், மலையகத்தைச் சார்ந்த தொழிற்சங்கங்களில் ஜனநாயக தொழிளாளர் காங்கிரசை சார்ந்த அதன் தலைவர் ஜனாப் ஏ. அஸீஸை தவிர எந்தவொரு தொழிற்சங்கத் தலைவரும் பங்கு கொள்ளவில்லை மாறாக வாழ்த்துச்செய்தி அனுப்பினர். இவ்விரண்டு நாள் மநாட்டின் இறுதி அங்கமாக ஹட்டன் டன்பார் மைதானத்தில் மாநாட்டின் பொதுக்கூட்டமொன்று நடாத்தப்பட்டதுடன் இக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக வருகைதந்திருந்த தமிழரசுத் கட்சித்தலைவர் திரு.எஸ். ஜே. வி. செல்வநாயகம் உட்பட ஏனைய தலைவர்கள் இ. தி. மு. க தலைவர் திரு. ஏ. இளஞ்செழியன் அவர்களுடன் திறந்த ஊர்தியில் ஹற்றன் மல்லிகைப்பூ பசாரிலிருந்து டன்பார் மைதானத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். கடும் மழையினையும் பொருட்படுத்தாது திறந்த ஊர்தியில் செல்லும் தலைவர்களுக்குப் பின்னால் ஆயிரக்கணக்கான இ. தி. மு. க தொண்டர்கள் மலையக குடியுரிமைப் பிரச்சினையையும். மொழியுரிமைப் பிரச்சினையையும் முன்வைத்து கோசமெழுப்பி சென்றமை நாட்டின் அனைத்து சிங்களச் சக்திகளினதும் கவனத்தை ஈர்த்தது.

வடகிழக்கில் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சியொன்று மலையகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சீர்த்திருத்த இயக்கமொன்றின் அழைப்பினை ஏற்று மலையகத் தலைநகரில் மொழியுரிமை, குடியுரிமை என்பவற்றிற்காக இணைந்து போராடுவோம் என சூளுரைத்தமை தென்னிலங்கை அரசியல்வாதிகள் மத்தியில் பீதியை உருவாக்கலாயிற்று. இ. தி. மு. க. வினது இச்செயற்பாட்டினைப் பற்றி சிங்கள அரசியல்வாதிகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இ.தி.மு.க. ஹற்றன் மகாநாட்டில் தந்தை செல்வா உரையாற்றுகிறார்



ஹற்றன் மகாநாட்டில் திரு. ந. இளஞ்செழியன் உரையாற்றுகிறார்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கேள்வியெழுப்ப ஆரம்பித்ததுடன் திராவிட நாடொன்றினை உருவாக்க முயலும் தமிழக தி. மு. க செயற்பாட்டின் ஓர் அங்கமே இ. தி. மு. க வின் இந்நடவடிக்கையெனக் கூறினர்.

நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு ஏற்பட்டுள்ள அபாயத்தைக் கருத்திற்கொண்டு இ. தி. மு. க வினை தடை செய்யுமாறு சிங்கள அரசியல் கட்சிகள் கோரின.

இக்காலகட்டத்தில் பேரினவாதத்தின் சின்னமாக விளங்கிய வெலிமடை பாராளுமன்ற உறுப்பினரும் தேசிய விடுதலை முன்னணி கட்சியின் தலைவருமான கே. எம். பி. ராஜரத்தின, தம்பதெனிய பாராளுமன்ற உறுப்பினர் ஆர். ஜீ. சேனாநாயக்க போன்றோர் இ. தி. மு. க ஓர் இனவாதகட்சியெனவும் மற்றும் அது இலங்கையை தமிழகத்துடன் இணைக்க முயலும் தமிழக தி. மு. க வின் கிளை அமைப்பு எனக்கூறி அதனை தடை செய்யும்படி பாராளுமன்றத்தில் கோரினர். இவர்களுடன் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியைச்சார்ந்த ஒருசில பாராளுமன்ற உறுப்பினர்களும் இவ்வாறான இனவாதக் கருத்தினை முன்வைக்கலாயினர்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பேர்சி விக்ரமரத்ன உரையாற்றுகையில்

පසු ගිය දිනවල ආණ්ඩු පක්ෂයේ රැස්වීමකදී ඩී.එම්.කේ. හෙවත් ද්‍රවිඩ මුන්නේත්‍ර කසාගම් නැමැති සංවිධානය පිළිබඳව සාකච්ඡාවු බවත් අපට දැනගන්න තිබෙනවා. එතමයි තවත් කුමණ්ත්‍රන සංවිධානයක් මේ සංවිධානයට අයත් මූලිකයන් අත් අඩංගුවට ගෙන වහාම මේ සංවිධානය තහනම් කිරීමට රජයට බැරි මන්දැයි මම අහනවා. ඉන්දියාවේ ඇති මේ සංවිධානයේ ශාකාවක් කඳුකරයේ පිහිටු වීමෙන් මොන විධියේ ව්‍යාපාර ඔවුන් ගෙන ගොස් අපට මොන ප්‍රශ්න වලට මුහුණ පාන්න සිදුවේදැයි කාට කියන්න පුළුවන්ද? ඒ ගැන එයට වඩා දීර්ඝ වශයෙන් මා කථා කරන්නට යන්නේ නැහැ (19)

கடந்த சிலதினங்களில் ஆளும்கட்சி கூட்டத்தில் டி. எம். கே. அல்லது திராவிட முன்னேற்றக்கழகம் எனும் அமைப்பினைப்பற்றி கலந்துரையாடப்பட்டுள்ளமை எமக்கு தெரியவந்துள்ளது. இதுதான் இன்னுமொரு சதிகார அமைப்பாகும். இவ்வைமப்பினை சார்ந்த முன்னணியாளர்களை கைது செய்து உடனடியாக இவ்வமைப்பினை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏன் தடைசெய்ய அரசிற்கு முடியாது என நான் கேட்கிறேன். இந்தியாவிலிருக்கும் இவ்வமைப்பின் கிளையை மலைநாட்டில் அமைப்பதன் மூலம் எவ்வாறான நடவடிக்கையை இவர்கள் கொண்டுசென்று எமக்கு எவ்வாறான பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க நேரிடும் என யாருக்கு சொல்லமுடியும்? இதனைப்பற்றி இதைவிட அதிகமாக நான் பேசப்போவதில்லை (தமிழாக்கம் ஆ-ர்)

பாராளுமன்ற உறுப்பினர்கள் கே. எம். பி ராஜரத்தின. பேர்சிவிக்கிரமரத்ன உட்பட அனைத்து சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்களும் இ. தி. மு. க வை தடை செய்யக்கோரிய வேளையில் இ. தி. மு. க தடையுடன் மலையக மக்களின் பிரஜாவுரிமை பிரச்சினைக்குத் தீர்வு காணுதல் அவசியமென ஒரு சில இடதுசாரிக்கட்சி அங்கத்தினர்கள் கூறினர். இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களில் ஒருவரான திரு. பீட்டர் கெனமன்

I see that the hon.members of the Government Parliamentry party are very worried about these D. M. K. 'S springing up. You are terribly worried about it and I too thoroughly condemn these D. M. K. 's But it is your total inactivity on this subject that is breeding D. M. K.'s in Ceylon and keeping the Federal Party alive when its prestige among the tamil pepole is slipping

.......... It is quit clear now that the citizenship act of 1948 did not solve this problem, It left over an enormous residue of persons who are stateless but live in Ceylon.

........... Now we are going to have discussions between the two prime ministers again. I do not want to prejudice these discussion by making any statements. But I must say that the aim of these discussions should to be end the sitution of statelessness once for all. (20)

இ. தி. மு. க. வினை தடைசெய்யக்கோரி பாராளுமன்றத்தில் சிங்கள பிரதிநிதிகள் குரலெழுப்புகையில் பாராளுமன்றத்தில் மலையக மக்கள் சார்பாக நியமிக்கப்பட்டிருந்த நியமன உறுப்பினரான திரு. எஸ். தொண்டமானும் தமிழரசுக் கட்சி உறுப்பினர்களும் மௌனிகளாக இருந்தனர். இ. தி. மு. க தலைவர் திரு. ஏ. இளஞ்செழியன் திரு. எம். திருச்செல்வம், கியூ. சி அவர்களுடன் தலைவர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களைச் சந்தித்து தமிழரசுக் கட்சியினரை மலையகத்திற்கு அழைத்துச் சென்றமையே இனவாத சக்திகள் கொதித்தெழுந்து இ. தி. மு. க வை தடைசெய்யக் கோருவதற்கான பிரதானக் காரணமாயிருக்கையில் தமிழரசுக்கட்சி உறுப்பினர்கள் ஏன் மௌனமாக இருக்கின்றனர் என திரு. ஏ. இளஞ்செழியன் வினவினார். இதற்கு செவிமடுத்த திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்கள் தாம் இ. தி. மு. க தொடர்பாக குரலெழுப்பும்படி தமது உறுப்பினர்களுக்கு அறிவுறுத்துவதாகக் கூறினார்.

இதன் பின்னர் தமிழரசுக் கட்சியினர் இவ்விடயம் தொடர்பாக உரையாற்றிய போதிலும் அவர்கள் உரையாற்றுவதற்கு முன்பதாக இ. தி. மு. க அரசினால் தடை செய்யப்பட்டது.

இக்காலகட்டத்தில் திரு. ஏ. இளஞ்செழியனின் அரசியற் நடவடிக்கைகளுடன் முரண்பட்ட இ. தி. மு. க உறுப்பினர் சிலர் இரண்டு குழுவினர்களாக தனித்து செயற்பட்டனர். இலங்கை திராவிடர் முன்னேற்றக்கழகம் எனும் பெயரிலேயே திரு. இரா. அதிமணி தலைமையின் கீழ் ஒரு பிரிவினரும் திரு. ஏ. எம். அந்தோணிமுத்துவின் தலைமையின் கீழ் ஒரு பிரிவினரும் செயற்பட்டுவந்தனர்.

1962 ஜுலை 22ம் திகதி நள்ளிரவுடன் அவசர கால சட்டத்தினைப் பயன்படுத்தி பிரதமர் ஸ்ரீமா பண்டாரநாயக்கா இ. தி. மு. க. வினை தடைசெய்தார்.

Premier Proscribed the DMK. The three dravida munnetre kazham organisations have been banned in Ceylon by the prime minister Mrs. Sirima Bandaranayake from midnight last night under the Emergency regulations.... The parties have been proscribed. They cannot hold meetings any where in ceylon invite or collect monies for the organisation communicate with persons or Organisation or solicit suport print or distribute any matter (21)

இவ்வறிவித்தலுடன் திரு, ஏ. எம். அந்தோணிமுத்து தமது தலைமையிலான தி. மு. க கலைக்கப்பட்டு விட்டதாக பிரதமருக்கு தந்தி மூலம் அறிவித்ததுடன் திரு. இரா. அதிமணி தலைமையிலான தி. மு. க வும் தமது நடவடிக்கைகளை நிறுத்திக்கொண்டது. தடையின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பின்னர் இத்தடையினைக் கண்டித்து பாராளுமன்றத்தில் தமிழ் பிரதிநிதிகள் பேசலாயினர். இத்தடை தொடர்பாக நீண்ட உரையாற்றிய திரு. அ. அமிர்தலிங்கம்; இந்த நாட்டில் மலைநாட்டுத் தமிழ் மக்கள் மத்தியில் மூடப்பழக்க வழக்கங்களை ஒழித்து சாதிபேதங்களை அகற்றி அவர்களுடைய மொழி குடி உரிமைகளைப் பெற்று அவர்களும் இந்நாட்டில் மனிதர்களாக தன்மானத்தோடு வாழவேண்டும் என்ற ஒரே இலட்சியத்திற்காக உழைத்து வருகின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தை அரசாங்கம் தடைசெய்தது ஜனநாயத்திற்கு முரணானது மனித உரிமைக்கு மாறானது என்பதைச் சொல்லிக் கொண்டிருந்தேன். உண்மையில் இந்த ஸ்தாபனம் எடுத்த எந்த நடவடிக்கைக்காக இந்தத் தடை போடப்பட்டிருக்கிறது என்பதை அரசாங்கத்திடம் நான் கேட்க விரும்புகிறேன். ......

இந்தக் கௌரவம் மிக்க சபையிலே சிம்மாசனப் பிரசங்க விவாதத்தில் பேசிய பல்வேறு அங்கத்தினர்களும் இந்தத் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். கௌரவ அவிசாவலைப் பிரதிநிதி (திரு பிலிப். குணவர்தன) அவர்களும் கௌரவ காலி பிரதிநிதி (திரு. டபிள்யூ. தஹநாயக்கா) அவர்களும் இந்தத் திராவிட முன்னேற்றக் கழகம் பற்றி குறிப்பிட்டார்கள். எனக்கு முன் பேசிய மட்டக்ககளப்பு இரண்டாவது பிரதிநிதி (ஜனாப் ஏ. ஏச் மாக்கான் மாக்கார்) அவர்களும் குறிப்பிட்டார்கள் நுவெரலியா பிரதிநிதி (திரு. ரி. வில்லியம் பெர்னாண்டோ) அவர்களும் குறிப்பிட்டார்கள். வெலிமடைப் பிரதிநிதி கே. எம். பி. ராஜரத்தினாவும் அவரது பாரியார் குசுமா ராஜரத்தினவும் இந்தத் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எதிராகத் கர்ச்சித்தார்கள். கம்யூனிஸ்ட் கட்சியின் கம்புறுப்பிட்டடியாப் பிரதிநிதி (திரு.பேர்ளி விக்கிரமசிங்க ) அவர்களும் பிரஸ்தாபித்தார்கள். இவர்கள் எல்லோரும் குறிப்பிடும் இந்தப் பூதம் என்ன என்பதை நான் குறிப்பிட வேண்டி இருக்கிறது.இந்த திராவிட முன்னேற்றக் கழகம் என்பது இன்று நேற்று தோன்றிய ஒரு இயக்கமல்ல. நான் இலங்கை சர்வகலாசாலையில் 1946-47ம் ஆண்டளவில் கல்வி கற்றுக்கொண்டிருந்த காலத்திலேயே இலங்கை திராவிடர் கழகம் இருந்தது. கடந்த பதினாறு ஆண்டுகளாக இந்த கழகம் இந்த நாட்டில் இயங்கி வருகின்றது. அவர்களது நோக்கம் இலங்கையில் வாழ்கின்ற மலைநாட்டுத் தமிழர்கள் மத்தியில் முக்கியமாகச் சாதியின் பெயரால் காணப்படும் பேதங்கைள ஒழித்துக்கட்ட வேண்டுமென்பதாகும். மூடநம்பிக்கையில் சிக்கி காடனையும் மாடனையும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வணங்கி பலியிட்டு கூத்தாடி வாழும் மூடநம்பிக்கையில் இருந்து அவர்களை விடுவிக்க வேண்டுமென்பதாகும் மலைநாட்டுத் தமிழ் மக்கள் தன்மானம் பெற்றவர்களாகப் பகுத்தறிவு பாதையில் செல்ல வேண்டும் என்ற நோக்கத்துடனேயே இலங்கையில் திராவிட முன்னேற்றக்கழகம் இயங்கி வருகிறது. பெயரளவில் தான் தென்னிந்தியாவில் இயங்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இலங்கை திராவிட முன்னேற்றக் கழககத்திற்கும் ஒற்றுமை இருக்கிறதே தவிர ஸ்தாபன ரீதியாகத் தொடர்பு எதுவும் இல்லை என்பதைத் தெட்டத் தெளிவாகக் கூறவேண்டியது உண்மை. இந்திய திராவிட முன்னேற்றக் கழகத்தலைவர் திரு. அண்ணாத்துரை அவர்களும் செயலாளர் திரு. நெடுஞ்செழியன் அவர்களும் இலங்கைத் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் தங்களுக்கும் எதுவிதமான தொடர்பும் கிடையாதென்பதை எல்லோருக்கும் கூறியிருக்கிறார்கள்.

இலங்கைத் திராவிட முன்னேற்றக் கழகம் என்ற பெயரில் மூன்று ஸ்தாபனங்கள் இருந்தாலும் இரண்டு ஸ்தாபனங்கள் கொழும்பில்தான் இருந்து வருகின்றன. தோட்டப் பகுதியிலிருக்கும் மற்றொரு ஸ்தாபனம் திருவாளர் இளஞ்செழியன் என்பவரைச் செயலாளராகக் கொண்டது. அவர்களுடைய நோக்கம் நாட்டைப் பிரிப்பதல்ல. இவ்ஸ்தாபனத்தின் நோக்கம் நாட்டைப் பிரிப்பதுதான் என்று யாரும் நிரூபிப்பார்களேயானால் நான் என்னுடைய பதவியை ராஜினாமாச் செய்ய ஆயத்தமாக இருக்கிறேன். அப்படி உண்மையென்று யாராலாவது ருசுப்படுத்த முடியுமா? அப்படி ருசுப்படுத்த ஒருவராலும் முடியாது.

அவர்களுடைய நோக்கம் மலைநாட்டுத் தமிழ் தொழிலாளர்களைச் சாதி பேதத்திலிருந்து மீட்டு அவர்களை ஒரேயின மக்களாக ஒன்றுபடச் செய்வதேயாகும். ஒருவரையொருவர் தொடக்கூடாது என்றும் அவர் அந்தச்சாதி, இவர் இந்தச்சாதி என்றும் பிளவு படத்தப்பட்டிருக்கும் மக்களிடையேயுள்ள பேதத்தை அகற்றுவது அவர்களை ஒன்று படுத்துவது பிழையா? அரசாங்கக் கட்சியில் உள்ளவர்களானாலும் சரி, எதிர்க் கட்சிகளில் உள்ளவர்களானாலும் சரி, கௌரவ அவிசாவலைப் பிரதிநிதி அவர்களானாலும் சரி இந்த நோக்கம் பிழையானது எனக் கூறுவார்களா?

மதத்தின் பெயரால் எத்தனை எத்தனையோ மூடநம்பிக்கைகளுக்குட்பட்டு கிடக்கிறார்கள். மற்றவர்களிலும் பார்க்க

www.tamilarangam.net

கூடுதலாக அந்தப் படிப்பற்ற தோட்டத் தொழிலாளர்கள்தான் மூடநம்பிக்கைகளின் கோரப்பிடியில் சிக்கிக்கிடக்கிறார்கள். கடவுள் ஒருவர் உண்டு. ஆனால் அதற்காகப் பலியிடத் தேவையில்லையெனக் கூறுவது பிழையா? இலங்கை திராவிட முன்னேற்றக்கழகம் நிறுவப்பட்டதன் நோக்கமே இதுதான். அடுத்தது அரசாங்கம் செய்த அக்கிரமான செயல்களால் ஒடுக்கப்பட்ட மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி அவர்கள் இழந்தவைகளைப் பெற்றுக் கொடுப்பது. அதுதான் அவர்களை நாடற்றவர்களாக்கி மொழியுரிமையைப் பிடுங்கி. இந்நாட்டில் அவர்களை எந்த விதமான உரிமையும் அற்றவர்களாக ஆக்கிவைத்திருக்கும் அநியாயத்தை எதிர்த்து அவர்களுக்கு உரிமைகளை பெற்றுக்கொடுப்பது அவர்களுக்குத் தொழிலுமில்லை. துணையுமில்லை. கல்வியும் இனிமேல் புதுக்கல்வித்திட்டத்தின்படி சிங்களத்தில் தான். அவர்களுக்கு இந்நாட்டில் பிரஜாவுரிமையில்லை. வாக்குரிமையில்லை. அவர்கள் துரத்தப்பட்டால் தங்கியிருப்பதற்கு ஒரு இடந்தானுமில்லை. மிருகங்களுக்குக்கூடக் காட்டில் இடமுண்டு. எறும்புகளுக்குக்கூடப் புற்றுக்கள் இருக்கின்றன. அந்தத் தொழிலாளர்கள்- இந்த நாட்டின் வளத்துக்காக உழைத்த அந்தத் தொழிலாளர்கள்- இன்று நேற்று வந்தவர்களல்ல. எத்தனை எத்தனையோ தலைமுறைகளாக இந்நாட்டில் வாழ்ந்து வருபவர்கள். (22)

திரு. அ. அமிர்தலிங்கம் உட்பட பல தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இ. தி. மு. க தடை செய்யப்பட்ட பின்னர் அதன் சமூகசீர்த்திருத்த நடவடிக்கைகளையையும், ஏனைய செயற்பாடுகளையும் எடுத்துக்கூறி இ. தி. மு. க மீதான தடை நியாயமற்றதெனக் கூறினர். அதேவேளை இ. தி. மு. க மீதான தடையை வரவேற்ற ஒரு சில கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும் மற்றும் இ. தி. மு. க மீதான தடையை கண்டித்த சமசமாஜக் கட்சி உறுப்பினர்களும் தமது உரைகளில் ஒருவிடயத்தைத் தெளிவாக முன் வைத்தனர். அதாவது மலையக மக்களின் அடிப்படை உரிமையான பிரஜாவுரிமை பிரச்சினையை தீர்க்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினர். பிரஜாவுரிமை மறுக்கப்பட்டமையே இ. தி. மு. க வின் வளர்ச்சிக்கான பிரதானக் காரணமெனக் கூறினர்.

இ. தி. மு. க தடை செய்யப்பட்டதுடன் பொதுச் செயலாளர் ஏ. இளஞ்செழியன் உட்பட அதன் தலைவர்கள் தலைமறைவு வாழ்க்கையை மேற்கொண்டதுடன் இரண்டாவது தலைமையினைக் கொண்டு தமது நடவடிக்கைகளை மேற் கொண்டனர். தாம் முன்னெடுத்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

SEELAN BOOKS SIGNATURE NOR

சீர்த்திருத்த நடவடிக்கைககளை பல்வேறு மன்றங்களை உருவாக்கி அதன் ஊடாக செயற்படுத்தினர். வள்ளுவர் மன்றம், பகுத்தறிவு மன்றம், அண்ணா மன்றம், பாரதிதாசன் மன்றம் போன்ற மன்றங்களை மலையகப் பகுதிகளில் அமைத்து செயற்பட்டதுடன் கொழும்பில் அகில இலங்கை வாலிப முன்னணி என்ற பெயரில் செயற்படலாயின. இதன் தலைவராக பி. நடராஜ செயற்பட்டதுடன் இன்றைய மலையக இலக்கிய கர்த்தாக்களான அந்தனிஜீவா, இரா. மலைத்தம்பி எஸ். மயில்வாகனம் போன்றோர் இவ்வாலிப முன்னணியில் முக்கிய பங்கேற்று செயற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

இ. தி. மு. க. வின் செயற்பாடு காரணமாக கழகம் எனும் சொல் மலையக மக்கள் மத்தியில் பெரும் செல்வாக்குப் பெற்றிருந்தது. இ. தி. மு. க தடை செய்யப்பட்டதுடன் இ. தி. மு. க வுடனான தொடர்பினை குறைத்துக்கொண்ட தமிழரசுக்கட்சியினர் இ. தி. மு. க. வின் துணையுடன் மலையகத்தில் பெற்றுக் கொண்ட அறிமுகத்தினை பயன்படுத்த முனையலாயினர். இ. தி. மு. க தடைசெய்யப்பட்ட வேளையில் இலங்கை தொழிலாளர் கழகம் எனும் தொழிற்சங்கத்தை உருவாக்கி தோட்டத்தொழிலாளர்களை அங்கத்தினர்களாகச் சேர்த்தனர். இ. தி. மு. க தடை செய்யப்பட்ட வேளையில் அவ்வியக்கம் சிதறி விழாது காப்பாற்ற வேண்டிய தமிழரசுக் கட்சியினர் தோழமைக்கு முரணாக பிறிதொரு தொழிற் சங்கத்தையமைத்து மலையகத்த்தில் செயற்பட ஆரம்பித்தமையை தலைமறைவு வாழ்க்கையை மேற்கொண்டிருந்த இ. தி. மு. க தலைமையினர் வன்மையாகக் கண்டித்தனர். தமது மாற்று அமைப்புகளான மன்றங்கள் ஊடாக இதற்கெதிரான பிரச்சாரத்தை மேற்கொண்டனர். தமிழரசுக் கட்சியின் தொழிற் சங்கமான இலங்கை தொழிலாளர் கழகத்தில் இணைய வேண்டாம் என மன்றங்கள் ஊடாகக் கோரினர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தடைநீக்கமும்
# நாடற்றோர் மறுப்பு மாநாடும்

1963ம் ஆண்டு மே மாதம் அவசரகாலச்சட்டம் நீக்கப்பட்டதுடன் இ. தி. மு. க மீதான தடையும் இயற்கையாக நீங்கியது. தடை நீங்கியபின் பகிரங்கமாகக் கூடிய இ. தி. மு. க இக்காலக் கட்டத்தில் இலங்கை வரவிருக்கும் பாரதப் பிரதமர் திரு. ஜவர்லால் நேருவின் விஜயத்தைக் கருத்திற் கொண்டு பத்து லட்சம் மலையக மக்களின் நாடற்றவர் பிரச்சினையை மும்முரப்படுத்துவதன் மூலம் இரு நாட்டினது தலைவர்களையும் இப்பிரச்சினை தொடர்பாக தீர்க்கமான முடிவினை எடுக்க நிர்ப்பந்திக்க வேண்டும் எனும் நிலைப்பாட்டினை மேற் கொண்டது. இதன் பிரதிபலனாக நாடற்றோர் மறுப்பு மாநாடு ஒன்றை 1963 ஜூலை 15-ல் பண்டாரவளையில் நடாத்துவது எனத் தீர்மானித்தது. இம்மாநாடு தொடர்பாக துண்டுப்பிரசுரமொன்றினை வெளியிட்டதுடன் இப்பிரசுரத்தில்...

## தமிழ் பெருமக்களே ஒன்றுபடுங்கள்
## நாடற்றவர் மறுப்பு மாநாடு

அன்பர்களே,

கடந்த ஏப்பிரல் மாதம் 21,22 திகதிகளில் தி. மு. க பொதுச்செயலாளர் தோழர் இளஞ்செழியன் அவர்கள் தலைமையின் கீழ் அட்டன் மாநகரத்தில் நடை பெற்ற இலங்கை திராவிடர் முன்னேற்றக் கழக இரண்டாவது மாநில மாநாட்டிற்குப் பின் நாடற்றவர் பிரச்சினையை விரைவில் தீர்த்து விட வேண்டும் இன்றேல் இலங்கை தி. மு. க பெரும் சக்தியாக வளர்ந்துவிடும் என்ற அபிப்பிராயத்தை முதலமைச்சர் திருமதி பண்டாரநாயக்கா முதல் எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும் ஓரிரு ஏடுகள் தவிர எல்லா ஆங்கில ஏடுகளும் வெளியிட்டுள்ளன. அட்டன் தி. மு. க. மாநாட்டுக்குப்பின்னர் நாடற்றவர் பிரச்சினை ஆட்சியாளரையும் இந்திய பாராளுமன்ற தி. மு. க. குழுத் தலைவர் தோழர் கி. மனோகரன் அவர்கள் அண்மையில் இந்திய பாராளுமன்றத்தில் நாடற்றவர் பிரச்சினைப்பற்றி ஆற்றிய கருத்தாழம் நிறைந்த சொற்பொழிவு இந்திய உபகண்டத்தையும் குலுக்கி கலக்கியுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்த அருமையான சந்தர்ப்பத்தில்தான் இந்திய உபகண்டத்தின் முதலமைச்சர் திரு. நேரு அவர்கள் இலங்கைக்கு வருகிறார். வருகிற அவர் இலங்கை இந்திய பிரச்சினை என்று வர்ணிக்கப்படுகின்ற நமது இனமக்களது பிரச்சினைபற்றி முதலமைச்சர் ஸ்ரீமா பண்டாரநாயக்க அவர்களோடு கலந்து பேசப்போவதாகவும் தெரிகிறது. இரு முதலமைச்சர்களும் கூடி நம்மைப்பற்றி நமது சந்ததியினரைப்பற்றி நம்மைக் கலக்காமல் செய்யும் முடிவு எதுவும் நம்மைக் கட்டுப்படுத்தாது என்பதை அறிவிக்கவும் நாடற்றவர் என்ற பிரச்சினைபற்றி நமது முடிவை அவர்களுக்கு தெரிவிக்கவும் நாடற்றவர் மறுப்பு மாநாடு வருகிற 15-7-62ம் நாள் ஞாயிறு பிற்பகல் 1-மணிக்கு பண்டாரவளை நகர மண்டபத்தில் நடாத்த ஏற்பாடாகியுள்ளது.

எல்லா அரசியல் கட்சிகளும் இப்பிரச்சினை பற்றி அதிகமாக பேசிவருவதால் எல்லாக் கட்சி தலைவர்களையும் குறிப்பாக தமிழரசுத்தந்தை திரு. செல்வநாயகம் அவர்கள், திரு. எஸ் தொண்டமான் அவர்கள், இ. தொ. கா. திரு. ஏ அஸீஸ் அவர்கள் ஜ. தோ .கா என். எம். பெரேரா அவர்கள், இலங்கை சமசமாஜக்கட்சி, தோழர் பீட்டர்கெனமன், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, தலைவர் பிலிப் குணவர்தன எம். ஈ. பி. டபிள்யூ. தஹாநாயக்க ஆகிய தலைவர்களையும் அழைத்து அவர்களது எண்ணங்களையும் தெரிவிக்க கேட்டுக் கொள்வதென்று பொதுக்குழு தீர்மானித்தன்படி அழைப்புகள் அனுப்பவிருக்கிறோம். (23)

இத்துண்டுப் பிரசுரத்தின் மூலம் இருநாட்டினது தலைவர்கள் எத்தகைய தீர்மானத்தை மேற்கொண்டாலும் மலையக மக்கள் இந்நாட்டின் மைந்தர்களே எனும் நிலைப்பாட்டை இ. தி. மு. க. கொண்டுள்ளமையை ஊர்ஜிதப்படுத்தியது மேலும் இம்மாநாடு தொடர்பாக வெளியிட்ட அழைப்பிதழில்

அடிமைத்தளைத் தகர்க்க அனைவரும் திரண்டுவாரீர்.
இலங்கை திராவிடர் முன்னேற்றக்கழக
நாடற்றவர் மறுப்பு மாநாடு.
எலி என உன்னை இகழ்ந்தவர் நடுங்கப்
புலியெனச் செயல் செய்யப் புறப்படு வெளியில்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஈழத் திராவிடர் பெருங்குடி மக்களுக்கு இதுதான் நாடு, இதுதான் வீடு, என்பதை அறிவிக்கவே நாடற்றவர் மறுப்பு மாநாடு கூடுகிறது.

பத்துலட்சம் திராவிடப் பெருங்குடி மக்களின் இழி பெயரைப் போக்கி உரிமை மீட்க துடித்தெழுந்து விட்டது. தி. மு. க. அதில் வெற்றி காணும் வரை ஓயாது ஒழியாது, தன் பணியை கழகம் செய்யும், தாய்க்குலமே! தம்பியர் படையே! திரண்டிடுவீர்! வீரம் வீழ்ந்ததில்லை! மானம் இழந்ததில்லை.

இனி என்ன செய்யப்போகிறீர்கள்?
இலங்கை தி. மு. க. கூட்டும்
நாடற்றவர் மறுப்பு மாநாடு (24)

இவற்றுடன் 23ம் திகதி துணைப் பொதுச்செயலாளர் மு. அ. வேலழகன் வெளியிட்ட துண்டுப் பிரசுரமொன்றில்.

குடியுரிமை, வாக்குரிமை, மொழியுரிமை இழந்துள்ள பல லட்சம் தமிழ் மக்கள் இலங்கையின் தலைபாய பிரச்சினையாக விளங்குகிறார்கள். இதுவரை தோன்றிய பல அரசியல் கட்சிகளும் தொழிற்சங்கங்களும் தங்களின் சுயநல நோக்கத்திற்காக இந்தப் பிரச்சினையை பயன்படுத்தி வருகிறார்கள். இதை ஒரு பொதுப் பிரச்சினையாக்கி கலந்து பேசி திட்டம் தந்திட எந்த தொழிற்சங்கமும் அரசியல் கட்சியும் இதுவரை முன்வரவில்லை.

கடந்த ஆண்டில் அட்டனில் தி. மு. க. நடத்திய மாநில மாநாட்டில் பல்லாயிரகணக்கான மக்கள் எழுப்பிய உரிமைக்குரலின் எதிரொலி அரசாங்கத்தைச் சற்று சிந்திக்க வைத்தது. இதுபற்றி இலங்கை இந்தியப் பிரதமர்கள் கூடிப்பேசப் போவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பத்துலட்சம் மக்களின் உரிமை பற்றி இவர்கள் பேசமுன்வரும் வேளையில் சம்பந்தப்பட்ட மக்கள் தங்களின் எண்ணத்தை வெளியிட்டாக வேண்டும். இந்த நல்ல செயலுக்காக தி. மு. க மாநாடு கூட்டுகிறது. பல அரசியல் கட்சியினரையும் தொழிற் சங்கவாதிகளையும், மாநாட்டில் கலந்து கொண்டு அவர்கள் கருத்தை எடுத்துரைக்க கேட்டுக் கொண்டுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாட்டிலுள்ள சிங்கள, ஆங்கில ஏடுகள் நம்மைப்பற்றி இல்லாததையும் பொல்லாததையும் எழுதி பயங்கர நச்சுக்கருத்துக்களை பரப்பி சிங்கள மக்களிடையே வகுப்புவாத எண்ணங்களை தூவுகின்றன.

நாளிலும் பொழுதிலும் வேலையற்ற தமிழரின் தொகை பெருகி வளர்ந்து வருகிறது. தொழிற்கமிசனரின் அனுமதிச் சீட்டில்லாதவர்களுக்கு வேலை கிடையாது என்ற கொடியமுறை அமுலாகப்போகிறது. அடிப்படை உரிமையற்ற பல லட்சம் மக்களை நாடற்றவர்கள் என்ற பெயரில் வீதியில் நிறுத்தப்போகிறது அரசாங்கம்.

நாம் சிங்கள மக்களின் விரோதிகளல்ல என்ற நல்லெண்ணத்தை எடுத்துரைத்து நாங்கள் நாடற்றவர்களல்ல என்ற உரிமைக்குரலை எழுப்பி நமது முடிவை இரு நாட்டு அமைச்சர்களுக்கும் தீர்மான வடிவில் வழங்கிட ஆகஸ்ட் 25ந் தேதி பண்டாரவளையில் நாடற்றவர் மறுப்பு மாநாடு நடைபெறவிருக்கின்றது.

பல்வேறு கட்சிகளையும் தொழிற் சங்கங்களையும் தமிழர் தமது கட்சி கொள்கை வேறுபாடுகளை மறந்து லட்சக்கணக்கில் மாநாட்டில் கூடி எண்ணிக்கையிலாவது நாம் நாடற்றவர்களல்ல என்பதை எடுத்துக்காட்ட வேண்டும்.

பத்து லட்சம் மக்களின் ஆதரவில் வாழும் வியாபாரப் பெருங்குடியினர் நன்கொடை மூலம் தமது ஒத்துழைப்பைத் தரும்படி கேட்டுக்கொள்கிறோம். பிறப்புரிமைபெற துணிந்து செயல்படும் எங்களுக்கு உடலாலும் பொருளாலும் துணைநில்லுங்கள் என அனைவரையும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம். வெற்றி நமதே. (25)

இ. தி. மு. க மலையக மக்களின் அடிப்படை மனித உரிமைப் பிரச்சினையான குடியுரிமை பிரச்சினையைப் பற்றி ஓர் தீர்க்கமான இறுதி முடிவை அனைத்து இடதுசாரி மற்றும் தமிழ் கட்சிகளுடன் இணைந்து மேற்கொள்ளும் வகையில் அனைத்து கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்தவேளை இ. தி. மு. க. விற்கு எதிராக இனவாத பிரச்சாரத்தை திட்டமிட்டு மேற்கொண்டுவந்த சுயாதீன பத்திரிகை (தவச கம்பனி)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இ. தி. மு. க. வின் இவ்வமைப்பு தொடர்பாக திரிபான செய்தியை வெளியிட்டது. இ. தி. மு. க. வை நாம் தமிழர் இயக்கமென பெயரிட்டு வந்த இப்பத்திரிகைக் கம்பனி தமது சிங்கள மாலைப் பத்திரிகையான 'சவச' பத்திரிகையில் பின்வருமாறு செய்தியினை வெளியிட்டது.

# අපි දෙමළුන්ට වමේ තුන්හවුල හවුල් වෙයිද

මෙරට රටවැසි කම් නැති හොර වැසියන්ගෙන් සමන්විතවූ "අපි දෙමළු" වාමාංශික එක්සත් පෙරමුණේ නායකයින්ට අත වනති. මේ අත වැනිම කර තිබෙන්නේ බණ්ඩාර වෙල මුළු දෙවන "අපි දෙමළු" සමළුවට සහභාගි වන ලෙස වමේ නාකයින්ට සාදරයෙන් ගෞරවයෙන් ආරාධනය කිරීමෙනි .

ලබන 25 වෙනි ද බණ්ඩාරවෙල පැවැත්වෙන මේ "අපි දෙමළු" දෙමළ සම්මේලනයට සහභාගිවන වන ලෙස වාමාංශික එක්සත් පෙරමුණට ආරාධනා කර ඇතත් ශ්‍රී ලංකා නිදහස් පක්ෂයට එබඳු ආරාධනයක් කර නැත.

බණ්ඩාරවෙල දෙමළ මහ පෙළපාලියට සහභාගිවන ලෙස ඇන්. ඇම්. පෙරේරා , පිලිප් ගුණවර්ධන පීටර් කෙනමන්, ඇස්.තොන්ඩමන්, ඒ.අසීස් . යන මහත්වරු හා වෙනත් දෙමළ පක්ෂවල නායකයින්ට ආරාධනා ලැබී ඇත. ශ්‍රී ලංකා නිදහස් පක්ෂය හෝ එක්සත් ජාතික පක්ෂය හෝ ජාතික විමුක්ති පෙරමුණ හෝ මීට සම්බන්ධ කර නොගැනීමට "අපි දෙමළු" තිරණය කර තිබේ.

එසේ ආරධනා නොකරන්නේ රට වැසි ප්‍රශ්නය භාෂා ප්‍රශ්ණය ආදී වැදගත් ප්‍රශ්ණවලදී රජය එක ඇහැකින් නොහොත් වපර ඇහැකින් බලා ඇති නිසාබව "අපි දෙමළු" නිකුත්කර ඇති පත්‍රිකාවෙන් කියයි. ද්‍රවිඩයින්ට ඇති අයිතිවාසිකම් ගැන වාමපක්ෂ දැනටමත් සාධරණ මත කිහිපයක් ඉදිරිපත් කර ඇති බවත් ඉදිරි කාලයේදී රට තුල වාමාංශික රජයක් ඇති වුවහොත් ඊට සම්පූර්ණ සහාය දෙන බවත් මේ "අපි දෙමළු" පත්‍රිකාව වැඩිදුරටත් කියයි.

ඔවුනොවුන්ගේ පිට කසා ගැනිමේ ප්‍රතිපත්තිය අනුව වමේ තුන් හවුල අපි දෙමළුන්ට හවුල් වේ දැයි දේශපාලන නිරීක්ෂකයන් ප්‍රශ්ණකරන්නේ මේනිසාය.

## රට වැසිකතා

වතුකරයේ ද්‍රවිඩයන් වෙනුවෙන් රජයෙන් පත්කල මන්ත්‍රීන් වන ඇස්.තොන්ඩමන් / අසීස් යන දෙදෙනා රට වැසිකම් පතා දැනටකරන සටන වෘත්තිය සමිතිසටනක් බවට පත්වී ඇතැයිද ඉන්කිසිම දිනෙක ප්‍රශ්නය සාර්ථක ලෙස නොවිසඳේ යයිද අපි දෙමළු අදහස් කරති.

ඉන්දිය අගමැති ශ්‍රී නේරු තුමා හා ලංකා අගමැති සිරිමාවෝ බණ්ඩාරනායක මැතිනිය පමණක්



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

දෙමල ප්‍රශ්න විසඳීමට සාකච්ඡාකිරීම කිසිම පලක් නොවන ඒවා වන අතර මේ ප්‍රශ්ණ නිරාකරණය කරගැනිමට අනෙකුත් දේශපාලන පක්‍ෂනායකයින්ටත් වතුකරයේ රටවැසිකම් නැති ද්‍රවිඩ නියෝජිතයන් කිහිප දෙනෙකුටත් අගමැති නේරු සමග සාකච්ඡාවලට සහභාගිවීමට ඉඩදියයුතුයැයි ද සම්මේලනයේදී රජයෙන් ඉල්ලා සිටිනු ඇත.

සම්මේලණයේ තීරණ ලකීසුරුතුමා අතට පත්කිරීමටද "අපි දෙමළ" සංවිධානය බලාපොරොත්තු වෙති. (26)

## நாம் தமிழர்களுடன் இடதுசாரி முக்கூட்டு இணையுமா?

இந்நாட்டில் குடியுரிமையற்ற கள்ள பிரஜைகளைக் கொண்ட நாம் தமிழர் இயக்கம் இடதுசாரி ஐக்கிய முன்னணி தலைவர்களுக்கு கைகாட்டுகின்றது. பண்டாரவளையில் நடாத்தவுள்ள நாம் தமிழர் சம்மேளனத்தில் பங்குபற்றும்படி இடதுசாரி தலைவர்களுக்கு அன்புடனும், கௌரவத்துடனும் அழைப்பு விடுத்தமை மூலம் இக்கைகாட்டலை செய்துள்ளது.

எதிர்வரும் 25ம் திகதி பண்டாரவளையில் நடைபெறும் இவ் நாம் தமிழர் சம்மேளனத்தில் பங்குபற்றும்படி இடதுசாரி ஐக்கிய முன்னணிக்கு அழைப்பு விடுத்த போதிலும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கு அவ்வாறான அழைப்பு விடுக்கப்படவில்லை.

பண்டாரவளையில் மாபெரும் தமிழ் ஊர்வலத்தில் கலந்துகொள்ளுமாறு என். எம். பெரேரா, பிலிப்குணவர்தன, பீற்றர் கெனமன், எஸ். தொண்டமான், ஏ. அஸீஸ் போன்றோருக்கும் மற்றும் தமிழ் கட்சிகளின் தலைவர்களுக்கும் அழைப்பு கிடைத்துள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அல்லது ஐக்கிய தேசிய கட்சி அல்லது தேசிய விடுதலை முன்னணியை இதில் தொடர்புபடுத்திக் கொள்ளக்கூடாது என நாம் தமிழர் தீர்மானித்துள்ளது.

குடியுரிமைப் பிரச்சினை, மொழிப் பிரச்சினை போன்ற முக்கிய பிரச்சினைகளில் அரசு ஒரு கண்ணில் அல்லது மாறு கண்ணில் இப்பிரச்சினைகளின்பால் நோக்கியுள்ளமையே அவ்வாறு அழைப்பு விடாமைக்கு காரணம் என நாம் தமிழர் விடுத்துள்ள பிரசுரத்தில் கூறப்பட்டுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழர்களுக்குள்ள உரிமைகளைப்பற்றி இடதுசாரி கட்சிகள் தற்போதே நியாயமான கொள்கைகள் பலவற்றை முன்வைத்ததுடன் எதிர்காலத்தில் நாட்டில் இடதுசாரி ஆட்சி ஏற்பட்டால் அதற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாக நாம் தமிழர் பிரசுரத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தோட்டத்துறை தமிழர்கள் சார்பாக அரசால் நியமிக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ். தொண்டமான், அஸீஸ் எனும் இருவரும் குடியுரிமை கோரி தற்போது மேற்கொள்ளும் போராட்டம் தொழிற்சங்கப் போராட்டமாக இருக்கின்றமையினால் அதனால் ஒருபோதும் பிரச்சினையை வெற்றிகரமாகத் தீர்க்க முடியாது என நாம் தமிழர் கருதுகின்றனர். இந்திய பிரதமர் ஸ்ரீ நேரு அவர்களும் இலங்கைப் பிரதமர் சிறிமா பண்டாரநாயக்க அம்மையார் மட்டும் தமிழ் பிரச்சினையை தீர்ப்பதற்கு கலந்துரையாடுவது எவ்வித பலனும் இல்லாததொன்றாக அமைவதுடன் இப்பிரச்சினையை தீர்த்துக்கொள்வதற்கு ஏனைய கட்சித்தலைவர்களுக்கும் தோட்டத்துறையில் குடியுரிமையற்ற தமிழர்களின் பிரதிநிதிகள் சிலருக்கும் பிரதமர் நேருவுடன் கலந்துரையாட சந்தர்ப்பம் அளிக்கவேண்டுமென சம்மேளனத்தில் கோர உள்ளது. சம்மேளனத்தின் தீர்மானத்தை கையில் ஒப்படைக்க நாம் தமிழர் அமைப்பு எதிர்ப்பார்க்கின்றது. (தமிழாக்கம் ஆ-ர்)

இதேவேளை ஆகஸ்ட் 22ம் திகதியன்று வெளியிட்ட பத்திரிகையில் பின்வரும் செய்தியை பிரதானச் செய்தியாக வெளியிட்டிருந்தது.

## වතුකරයේ අපි දෙමළ කැලෑ හටන් පටන් ගතීද ?

උඩරට වතු කරයේ ඉතා දැඩි ලෙස සංවිධානය වී තිබෙන "අපි දෙමළ" රහස් ව්‍යාපාරයේ සංවිධායකයින් විසින් වතුකරයේ පදිංචි සිංහලයින්ට විරුද්ධව සංවිධානය කරනලද "ගරිල්ලාසටන" ලගදීම ක්‍රියාත්මක කිරීමට බලාපොරොත්තු වනබව විශ්වාසකටයුතු.වාර්තාවකින් දැනගන්නට තිබේ.

මෙම රහස් ව්‍යාපාරයේ සාමාජිකයන් සියළු දෙනාටම යුද්ධ අවිආයුධ ලැබී ඇති බවද දැනගන්නට තිබේ. උඩරට වතුකරයේ වෙසෙන සුළු පිරිසක් වන සිංහල ගැමියන්ට විරුද්ධව පළමුව ඇරඹීමට යන මේ ව්‍යාපාරය අනුක්‍රමයෙන් දිවයිනේ දෙමල බලය වැඩි ප්‍රදේශ පුරා ව්‍යාප්ත කිරීමට සංවිධායකයන්ගේ අදහස බැව්කියනු ලැබේ.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

දාහතයි පනහේ (17.50) මුවාවෙන් කඳුරට වතුකරයේ ද්‍රවිඩ කම්කරුවන් ළඟදී අරඹන්නට යන වැඩ වර්ජනයද මේ සිංහල විරෝධී ව්‍යාපාරයේ එක් පියවරක් බවද සැලයි. වැඩ වර්ජනයක් අරඹා නොයෙක් වෘත්තීය සමිතිවලට බෙදීගොස් තිබෙන ද්‍රවිඩ බලය එක්කිරීමෙන් ද්‍රවිඩ ජාතිවාදී සංවිධානය තවතවත් තර කර සිංහල ගැමියනට පහර දීමට සංවිධායකයන්ගේ බලාපොරොත්තුව බැව්ද දැනගන්නට ඇත.

දැනට වතුකරයේ ඉතාමත් වැඩි ද්‍රවිඩ බලයක් තිබෙන බලගතු වෘත්තීය සමිති දෙකක නායකයින් දෙදෙනෙක්, මේ දිනවල වතුකරයේ සැරිසරණ "අපි දෙමළ " සංවිධානයේ නායකයින් සමඟ ඉතාම රහසිගතව සාකච්චාකල බව විශ්වාස කටයුතු මාර්ගයකින් දැනගන්නට තිබේ. මෙම රහස් සාකච්චා වතුකරයේ වල්බිහිවීඇති ස්ථාන වල පිහිටි රහස් කුටි වලදී පවත්වා ඇති බව සැලයි.

ප්‍රථම වරට "සවස" මුද්‍රණ කිහිපයකිනුත් "දවස" සහ "රිවිදින" පත්‍රවලිනුත් පමණක් අනාවරණය කරනලද පරිදි "අපි දෙමළ" සංවිධානවල සාමාජික සාමාජිකාවන්ට මේ දිනවල ඉතාමත් රහසිගතව යුද පුහුණුවීමේ පංති පැවැත්වෙන බව දැනගන්නට තිබේ.

මාස ගණනකට සෑහෙන ආහාර ද්‍රව්‍ය දැනට සතියක පමණ සිට දිනපතා කොටස් වශයෙන් ගෙන ගොස් " අපි දෙමළ" සංවිධානවල නායකයින්ගේ නිවෙස්වල ගබඩා කරණ බවද සැලයි. (27)

## தோட்டத்துறையில் நாம் தமிழர்காட்டுப் போராட்டத்தை ஆரம்பிப்பார்களா?

மேல்நாட்டுத் தோட்டத்துறையில் மிக இறுக்கமாக ஸ்தாபனமாகியுள்ள நாம் தமிழர் இரகசிய இயக்கத்தின் அமைப்பாளர்கள் தோட்டப்பகுதிகளில் குடியமர்ந்துள்ள சிங்களவர்களுக்கு எதிராக ஸ்தாபனமயமாக்கப்பட்ட கெரில்லா போராட்டத்தை அண்மையில் அமுல்படுத்த எதிர்பார்ப்பதாக நம்பத்தகுந்த அறிக்கையின் மூலம் தெரியவந்துள்ளது.

இவ்விரகசிய இயக்கத்தைச்சார்ந்த அங்கத்தினர் அனைவருக்கும் யுத்தக் கருவிகள் கிடைக்கப்பட்டுள்ளமை அறியக்கிடைத்துள்ளது. மேல்நாட்டுத் தோட்டப் பகுதிகளில் வாழும் சிறுபிரிவினரான சிங்கள கிராமவாசிகளுக்கு எதிராக முதலாவதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள இவ்வியக்கம் படிப்படியாக தீவில் தமிழ் அதிகாரம் காணப்படும் பிரதேசங்கள் முழுமைக்கும் வியாபிப்பது இவ்வமைப்பாளர்களின் கருத்து எனக் கூறப்படுகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பதினேழு ஐம்பது (17.50) என்றதன் பெயரில் மேல்நாட்டு தோட்டத்துறை தமிழ் தொழிலாளர்கள் அண்மையில் ஆரம்பிக்கவுள்ள வேலை நிறுத்தமும் இவ் சிங்கள விரோத இயக்கத்தில் ஒரு நடவடிக்கையாக தெரிய வந்துள்ளது. வேலை நிறுத்தத்தை ஆரம்பித்து பல்வேறு தொழிற்சங்கங்களுக்கு பிரிந்து சென்றுள்ள தமிழ் சக்தியை ஒன்றுபடுத்துவதன் மூலம் தமிழ் இனவாத அமைப்பினை மென்மேலும் பலப்படுத்தி சிங்கள கிராமத்தவர்களைத் தாக்குவது அமைப்பாளர்களின் எதிர்பார்ப்பு என்பது தெரியவந்துள்ளது.

தற்போது தோட்டப்பகுதியில் அதிக தமிழர் சக்தியைக் கொண்டுள்ள சக்தி வாய்ந்த தொழிற்சங்கங்கள் இரண்டின் இரு தலைவர்கள் இந்த நாட்களில் தோட்டப் பகுதிகளில் சஞ்சரிக்கும் (நாம் தமிழர்) அமைப்பின் தலைவர்களுடன் மிக இரகசியமாக பேச்சுவார்த்தையை மேற்கொண்டுள்ளமை நம்பத்தகுந்த மார்க்கம் ஊடாகத் தெரிய வந்துள்ளது. இவ்ரகசிய பேச்சுவார்த்தை தோட்டத்துறையில் புற்கள் வளர்ந்த இடங்களில் காணப்பட்ட இரகசிய அறைகளில் நடாத்தப்பட்டுள்ளது எனத்தெரிய வந்துள்ளது. முதலாவதாக சவச பத்திரிகை சிலவற்றினாலும் தவச மற்றும் ரிவிதின பத்திரிகைகளினால் மட்டும் வெளிக்காட்டியதன்படி நாம் தமிழர் அமைப்பின் அங்கத்தினர்களுக்கு இந்நாட்களில் மிகவும் இரகசியமாக இராணுவப்பயிற்சி வகுப்புக்கள் அளிக்கப்பட்டு வருவது தெரியவந்துள்ளது.

பல மாதங்களுக்கு தேவையான உணவுப் பொருட்களை கடந்த ஒருவாரம் முதல் தினந்தோறும் பகுதி பகுதியாகக் கொண்டு சென்று நாம் தமிழர் இயக்கத் தலைவர்களின் வீடுகளில் களஞ்சியப்படுத்துவதாக தெரியவந்துள்ளது (ஆ - ர்)

சிங்கள தினசரிகள் இவ்வாறான துவஷ்பிரச்சாரத்தை வைப்பதன் ஊடாக மலையக மக்களின் குடியுரிமைப் பிரச்சினையை இ. தி. மு. க முன்னெடுப்பதை தடுக்க முயன்றபோதிலும் இ. தி. மு. க தமது நடவடிக்கையை தொடர்ந்து முன்னெடுத்து திட்டமிட்டபடி பண்டாரவளை நகரமண்டபத்தில் நாடற்றோர் மறுப்பு மாநாட்டை நடாத்தியது. மலையக மக்களின் அடிப்படை மனித உரிமைப் பிரச்சினையான குடியுரிமைப் பிரச்சினையைப்பற்றி இப்பிரச்சினையின்பால் அக்கறைக் காட்டும் அனைத்துக் கட்சிகளையும் இணைத்து ஓர் தீர்க்கமான முடிவினை முன்வைக்க இ. தி. மு. க மாநாட்டின் மூலம் முயன்றபோதிலும் அம்முயற்சி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பலனளிக்கவில்லை. அழைப்பு விடுக்கப்பட்ட அனைத்து இடதுசாரிக்கட்சிகளும் தமிழரசுக் கட்சியும் இம்மாநாட்டில் பங்கு கொள்ளவில்லையென்பதுடன் எந்தவொரு செய்தியையும் அனுப்பி வைக்கவில்லை.

எனினும் இ. தி. மு. க. வின் பொதுச்செயலாளர் திரு.ஏ. இளஞ்செழியனின் தலைமையின் கீழ் மாநாடு நடைபெறலாயிற்று. ஆயிரத்திற்கும் அதிகமான போராளிகள் கலந்து கொண்ட இக்கூட்டத்திற்கு முன்னோடியாக பதுளை பாதையூடாக பண்டாரவளை நகர மண்டபத்தை நோக்கி ஊர்வலமொன்று மேற்கொள்ளப்பட்டதுடன் இவ்வூர்வலத்தில் **நாங்கள் நாடற்றவர்கள் அல்லர்! நாங்களும் இந்நாட்டு மக்களே! உழைக்கும் எங்களுக்கும் சம உரிமை வேண்டும்.! சிங்கள மொழிக்குரிய அந்தஸ்த்தை தமிழ் மொழிக்கும் தா! சகல மக்களும் வாழ்வு தர சமதர்ம இலங்கையை அமைக்கப்போராடுவோம்,** எனும் பதாகைகளையும் சுலோகங்களையும் கோஷித்தவாறும்! ஆயிரத்திற்கும் அதிகமான இ. தி. மு. க உறுப்பினர்கள் ஊர்வலம் சென்ற வேளையில் இம்மாநாட்டினை குழப்புவதற்காக திட்டம் தீட்டியிருந்த இனவாதிகள் குழுவொன்று ஊர்வலத்திற்கு எதிர்திசையிலிருந்து ஓர் ஊர்வலத்தை ஆரம்பித்து பற தெமலு அப்பட எப்பா! (பறத்தமிழன் எமக்குவேண்டாம்) கள்ளத்தோணி அப்பட எப்பா (கள்ளத்தோணி எமக்கு வேண்டாம்) போன்ற கோஷங்களை இட்டவாறு ஊர்வலத்தை நோக்கி வரலாயினர். இ. தி. மு. க. ஊர்வலத்தினை சந்தித்த சிங்கள இளைஞர் பிரிவினர் இ. தி. மு. க. உறுப்பினர்கள் கையிலிருந்த பதாகைகளை பறிக்க முயன்றபோது இருதரப்பினருக்குமிடையில் மோதல் ஏற்படலாயிற்று. காவலில் இருந்த போலிஸ் இதனைக் கண்டும் காணாததைப் போல் இருந்ததுடன் சில மணி நேரங்களிற்குப் பின்னர் தலையிட்டு அமைதியை நிலைநாட்டி ஊர்வலத்தை தொடர அனுமதியளித்தனர். ஊர்வலம் நகர. மண்டபத்தையடைந்ததுடன் மாநாடு நடைபெறலாயிற்று.

இம்மாநாடு பி. ப 6.00 மணியளவில் முடிவுற்றதுடன் மாநாட்டைவிட்டு வெளியேறியவர்கள் அதுவரை காத்திருந்த இனவெறியர்களால் நகர மத்தியில் தாக்கப்பட்டனர். மாநாட்டில் பங்கு கொண்ட தமிழ் இளைஞர்களும் எதிர்த்தாக்குதலில் ஈடுபடலாயினர். இவ்வினமோதல்கள் பலமணிநேரம் நடைபெற்றதுடன் பண்டாரவளையை சுற்றியுள்ள பகுதிகளான பதுளை, வெலிமட, அப்புத்தளை, தியத்தலாவ,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆலிஎல, போன்ற பகுதிகளுக்கும் கலகம் பரவலாயிற்று. பெரும்பாலான தோட்டமக்கள் தாக்கப்பட்டதுடன் பெண்களும் காடையர்களால் தாக்கப்பட்டனர். இக்கலவரம் மேலும் ஏனைய பகுதிகளுக்கு வியாபிப்பதை தடுக்கும் வகையிலும் அமைதியை உருவாக்கும் வகையிலும் நாட்டின் பல பகுதியிலிருந்தும் பொலீஸ் வரவழைக்கப்பட்டு கலவரம் அடக்கப்பட்டு வழமை நிலைக்கு கொண்டுவரப்பட்டது. தமிழருக்கு சொந்தமான கார் எரிக்கப்பட்டு கடைகள் உடைக்கப்பட்டு தீ வைக்கப்பட்டன. 4 தமிழ் இளைஞர்களும் 11சிங்கள இளைஞர்களும் அப்புத்தளை பங்கட்டி மருத்துவமனையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இச்சம்பவம் தொடர்பாக சிலோன் டெய்லி மிரர் பத்திரிகை

'DMK MEN HID ALL NIGHT IN DRAINS AND BUSHES'

Hundreds of Indian estate Labourers who had come to town yesterday to join the DMK rally in which about 2000 took part in the demonstrations and were held up following the clash between them and some local residents left their estates- early this morning from their hideouts.

Four persons were admitted to hospital with head injuries while two others sought admission this morning.

The whole of last night batches of local residents threw a cordon round the town, hiding at the exits and pouncing upon the fleeing men most of whom had come from Hatton and Talawakelle. Some vehicles in which they came were also damaged.

Some People are reported to have held up passing vehicles and assaulted the passengers. About a hundred men who hid under drains and bushes left this morning by train

Reinforcements from Haputale, Welimada and Diyatalawa were rushed to quell the disturbance.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

About 15 men who were taken into custody in this conection were later released.(28)

என செய்தியினை வெளியிட்டதுடன் இச்சம்பவம் முழு நாட்டினது கவனத்தையும் ஈர்த்தது.

1958ம் ஆண்டு இனக்கலவரத்தையடுத்து நடந்த இவ்வினக்கலவரம் தொடர்பாக பாராளுமன்றத்தில் தமிழ் பிரதிநிதிகளுக்கும் இனவாத சிங்களப் பிரதிநிதிகளுக்குமிடையில் கடுமையான விவாதம் நடைபெறலாயிற்று. குறிப்பாக இனவாத அமைப்பினைக் கொண்டுள்ள வெலிமடை உறுப்பினர் திரு. இராஜரத்தின அவர்களுக்கும் நியமன உறுப்பினர் திரு. எஸ் தொண்டமானுக்குமிடையில் கடும் வாதங்கள் நடைபெற்றன. திரு. எஸ். தொண்டமான் இ. தி. மு. க. விற்கும் தமிழரசுக் கட்சிக்கும் எதிரானவர் எனக் கூறிக்கொண்டு பண்டாரவளை சம்பவத்தினைக் கண்டிக்கலானார். இது தொடர்பாக உரையாற்றுகையில்

Take the ugly incidents that occurred in Bandarawella in the high streets what happened there? You talk of the tortures and Persecutions in south Vietnam. what did they do on the Public roads of Bandarawella? Men were assaulted women were strepped Children infants were Placked out from their mothers and thrown on the streets of Bandarawela last Sunday. We talk of maitriya; We talk of Protecting the Buddhist in south Vietnam are you not ashamed? This has happened in the Presence of the Police. These People were brought in lorries. They kept in hotel they were fed and given to drink in a miserable hotel at the junction in Bandarawella (29) என இச்சம்பவத்தின் பின்னணியை வெளிக்கொணரலானார்.

இம்மாநாட்டிற்கு சில தினங்களுக்கு முன்பதாக சிங்களத் தினசரிகள் மேற்கொண்ட விஷமப் பிரச்சாரங்கள் சிங்கள மக்கள் மத்தியில் இம்மாநாட்டிற்கு எதிரான உணர்வை ஏற்படுத்தியிருந்தது. இக்காலக்கட்டத்தில் சிங்கள இனவாதத்தின் காவலனாக விளங்கிய வெலிமடை பாராளுமன்றப் பிரதிநிதி கே. எம். பி இராஜரத்தினவிற்கு இம்மாநாட்டிற்கு எதிராக சிங்கள இளைஞர்களை அணிதிரட்ட வாய்ப்பேற்பட்டதுடன் திட்டமிட்டு இம்மாநாட்டைச் சீர்குலைக்கும் முயற்சியிலும் ஈடுபட முடிந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எவ்வாறாயினும் இம்மாநாட்டில் உரையாற்றிய திரு. ஏ. இளஞ்செழியன் மலையகத்தில் பிறந்த இந்திய வம்சாவளியினர் மலையக மைந்தர்களே எனவே அவர்கள் யாரிடமும் குடியுரிமை கோரத்தேவையில்லை. அவர்களுக்கே இம்மண் சொந்தமென உரையாற்றியதுடன் பின்வரும் தீர்மானங்களையும் இம்மாநாடு ஈற்றில் நிறைவேற்றியுள்ளது.

(அ) மலை நாட்டு திராவிடத் தொழிலாளர்கள் நாடற்றவர்கள் அல்ல என்பதை இம்மாநாடு பிரகடனப்படுத்துகிறது.

(ஆ) நாடற்றவர் என்றநிலை இந்திய பாகிஸ்தானிய சட்டத்தை உருவாக்கிய அப்போதைய இலங்கை அரசியலாலராலும் அதற்கு சாதகமாக இருந்த இந்திய அரசினாலும் ஏற்பட்ட ஒன்றே என்பதை கடந்த 15 ஆண்டுகளாக இலங்கை திராவிடர் முன்னேற்றக் கழகம் கொண்ட முடிவை மீண்டும் இம்மாநாடு உறுதிப்படுத்துகின்றது.

(இ) நாடற்றவர் என்று வர்ணிக்கப்படுகின்ற மலையக மக்களின் பிரச்சினை தீருகின்ற வரையில் திரு. தொண்டமான் அவர்கள் மலையக மக்கள் சார்பாக பாராளுமன்றத்தில் வகித்து வரும் நியமனப் பிரதிநிதித்துவத்தை உடன் ராஜினாமா செய்யும்படி அவரை இம்மாநாடு கேட்டு கொள்கிறது.

(ஈ) நாடற்றவர் என்று வர்ணிக்கப்படுகிற இந்தப் பிரச்சினை தீருகின்ற வரையில் மலையக வேலைவாய்ப்புக்களை மலையகத் திராவிடர்களுக்கே வழங்கும்படி அரசாங்கத்தையும் தோட்ட முதலாளிமார்களையும் ஏனைய அமைப்புக்களையும் இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

(உ) மலையக திராவிட மக்களின் பிரதிநிதிகளென்றும் தலைவர்களென்றும் உரிமை கொண்டாடும் சகல தலைவர்களையும் அமைப்புக்களையும் நாடற்றவர் என்று வர்ணிக்கப்படுகிற இழிநிலையைப் போக்க ஒரு கூட்டு நடவடிக்கை எடுக்க முன்வரும்படி இம்மாநாடு வேண்டிக் கொள்கிறது. (30)

இம்மாநாட்டில் உரையாற்றியவை தொடர்பாகவும் மற்றும் கலவரம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொடர்பாகவும் அனைத்து சிங்களப் பத்திரிகைகளும் இனவாத ரீதியில் திரித்து செய்திகளை வெளியிட்ட வேளையில் ஏரிக்கரை நிறுவனத்தின் சிங்கள பத்திரிகையான தினமின இம்மாநாடு தொடர்பாகவும் கலவரம் தொடர்பாகவும் சரியான செய்தியினை வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

தினமின பத்திரிகையில் இச்சம்பவங்கள் தொடர்பாக வெளியிட்ட செய்தியில்-

### ද්‍රවිඩ කලගම් පක්ෂයේ පරමාර්ථය කියයි.

"මේ රටේම ඉපදී මේ රටේම හැදිවැඩී සිටින ද්‍රවිඩ ජනතාව සටන් කරන්නේ මේ රටේ වැඩිකොටස වන සිංහල මිනිසුන්මෙන් ප්‍රජාඋරුමය හා සියළුම මානුෂික අයිතිවාසිකම් දිනාගෙන ශ්‍රේෂ්ඨ පුරවැසියන් මෙන් මේ රටේ ජීවත් වීමටයි. බණ්ඩාරවෙල පුරහලේදී පැවැත්වූ ද්‍රවිඩ මුන්නේත්‍ර කලගම් " අපි දෙමළ" පක්ෂයේ ප්‍රථම වාර්ෂික සම්මේලනය අමතා කතාකළ එහි සභාපති ඒ. ඉලන්චේලියන් මහතා ප්‍රකාශ කලේය.

කළු රතු වර්ණ වලින් යුත් කොඩි හා සටන් පාඨ වලින් යුත් දැන්වීම් පුවරුද රැගත් පෙළ පාලියක් රැස්වීම් ශාලාව කරා සටන් පාඨ කියමින් නගරය හරහා ගමන් කළහ.

" ජාතිභේද අපට එපා" " මේක අපේ මව් බිමයි " බෙල්ල කැපුවත් අපි යන්නේ නැහැ යන සටන් පාඨ කියමින් ඔවුන් පෙළපාලියේ ගමන් කලහ.

එක් දහස් පන්සියයක් පමණ දෙනා සහභාගි වූ මෙම මහා සභාව අමතා තවදුරටත් දෙමළෙන් කතා කල එහි සභාපති වරයා නීතිය අනුව තමන් මේ රටේ පුර වැසියන් නොවන බව රජය කිවත් තමන් උපන් රට මෙය බවත් ජිවිත පුදා හෝ සටන් කරන්නේ තමන්ගේ මව් බිමට තමන්සතු අයිති වාසිකම් රැකගැනීමට බවත් කීවේය.

සමසමාජ පක්ෂය හෝ කොමියුනිස්ට් පක්ෂය මේ රටේ ද්‍රවිඩ ජනතාව කෙරෙහි සතුටු දායක තත්වයක් උදාකර දෙතැයි සිතිය නොහැකිබවකී ඉලන්චේලියන් මහතා මේ රටේ ජාතික ධනයෙන් වැඩිකොටසක් ලබා දෙන්නේ වතු කම්කරුවන් නිසා ඒ අයට පුරවැසිකම් නොදීම අසාධාරනයක්යැයිද කිය.

**අයිතිවාසිකමක්**

ද්‍රවිඩ මුන්නේත්‍ර කලගම් පක්ෂයේ ප්‍රධාන සංවිධායක ලේකම් ඇම්.ඒ.වේල්ලයගන් මහතා කථාකරමින් විජය රජුගේ පටන් අනාදිමත් කාලයක සිට පැවැත එන මේ රටේ සිංහල ජාතියටත් දෙමල මිනිසුන්ටත් මේ මාතෘ භූමිය හෙවත් ලංකාව පිළිබඳ එක සමාන අයිතිවාසිකමක් තිබෙන බවත් උඩරට ද්‍රවිඩයන් දැන් "කල්ලතෝනින් " යයි කියා හංවඩු ගැසීම අයුක්ති සහගත ක්‍රියාවක් බවත් මේ රටේ මුල්ම කල්ලතෝනියා විජය රජු බවත් කියා සිටියේය.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

විජය රජුගේ බිසව ඉන්දියාවේ පාඬි රජුගේ දියණිය ද්‍රවිඩ තැනැත්තියක් බවත් ඒ රාජකීය යුවලගෙන් ඇතිවූ මේ එකම පිරිස සිංහල දෙමල වශයෙන් භේද භින්නවී සිටින්නේ සිංහල දෙමල වශයෙන් භාෂා දෙකක් කථා කරණ නිසා බවත් වැඩිදුරටත් කථා කල ලේකම් වරයා පැවසීය.

මේ නිසා කොතරම් වධහිංසා කරදර ලැබුණත් උඩරට ඉන්දියානුවන් ගේ මානුෂික අයිතිවාසිකම් රැකගැනීම සඳහා ගෙන යන සටන එසේම ගෙන යන බවත් ඒ මහතා පැවසීය.

කේ.සවුන්දර්රාජා මහතා කථා කරමින් මේ රටේ පුරවැසිකම් නැතුව අසරණව දුක්විඳින ද්‍රවිඩ ජනතාව වහල් බැම්මෙන් මුදවා ඒ අයට පුරවැසි භාවය හා මානුෂික අයිතිවාසිකම් ලබාදී ඔවුන් ශ්‍රේෂ්ඨ පුරවැසි පිරිසක් කරන්නේ ද්‍රවිඩ මුන්නේත්‍ර කලගම් ව්‍යාපාරය බව කීය.

කේ. රාමසාමි. කම්බලයි දාසන් , ජෝන් , ෆ්‍රැන්සිස් ක්‍රිෂ්ණසාමි යන මහත්වරුද සමස්ත ලංකා එක්සත් මුස්ලිම් ව්‍යාපරය සංගමයේ සභාපති වරයාද කථා කළහ (31)

## *திராவிடக்கழக கட்சியின் கொள்கையை கூறுகின்றது.*

இந்நாட்டில் பிறந்து இந்நாட்டிலேயே வளர்ந்துள்ள திராவிட மக்கள் போராடுவது இந்நாட்டில் பெரும்பான்மையினரான சிங்கள மக்களைப்போல் பிரஜாவுரிமை மற்றும் சகல மனித உரிமைகளையும் வென்றெடுத்து சிரேஷ்ட பிரஜைகளாக இந்நாட்டில் வாழ்வதற்கே என பண்டாரவளை நகர மண்டபத்தில் நடாத்தப்பட்ட திராவிட முன்னேற்ற கழகம் நாம் தமிழர் கட்சியின் முதலாவது வருடாந்த சம்மேளனத்தில் பேசிய அதன் தலைவர் ஏ. இளஞ்செழியன் கூறினார்.

கருப்பு சிகப்பு வர்ணங்களைக் கொண்ட கொடி மற்றும் சுலோகங்களைக் கொண்ட அட்டைகளுடன் ஊர்வலமொன்று கூட்ட மண்டபத்தை நோக்கி நகரத்தின் ஊடாக சென்றது.

இனவாதம் எமக்கு வேண்டாம்; இது எமது தாய்நாடு; கழுத்தை வெட்டினாலும் நாம் போக மாட்டோம் எனும் சுலோகங்களை கோஷித்தவாறு அவர்கள் ஊர்வலத்தில் சென்றனர்

ஆயிரத்து ஐந்நூறு பேர் கலந்து கொண்ட இப்பொதுச்சபையில் தொடர்ந்து தமிழில் உரையாற்றிய இதன் தலைவர் சட்டத்தின் படி தாம் இந்நாட்டின் பிரஜைகள் அல்ல என அரசு கூறினாலும் தாம் பிறந்தநாடு இது எனவும உயிரைத் தியாகம் செய்தேனும் போராடுவது தமது தாய் நாட்டிற்கான தம் உரிமையை பாதுகாத்துக் கொள்ளவே எனவும் கூறினார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சமசமாஜக்கட்சியோ கம்யூனிஸ்ட் கட்சியோ இந்நாட்டின் திராவிட மக்களுக்கு திருப்திகரமான நிலமையை உருவாக்கிக் கொடுக்கும் எனக் கூற முடியாது எனக் கூறிய இளஞ்செழியன் அவர்கள் இந்நாட்டின் தேசிய செல்வத்தின் பெரும்பகுதியைக் கொடுப்பது தோட்டத் தொழிலாளர்களாக இருக்கின்றமையினால் அவர்களுக்கு பிரஜாவுரிமையை வழங்காதிருப்பது அநீதி எனவும் கூறினார்.

திராவிட முன்னேற்றக் கழகக் கட்சியின் பிரதான அமைப்புச் செயலாளரான எம். ஏ. வேலழகன் அவர்கள் பேசுகையில் விஜய மன்னன் முதல் புராதன காலத்திலிருந்து வரும் இந்நாட்டின் சிங்கள இனத்திற்கும் தமிழ் மக்களுக்கும் இது தாய் நாடு அல்லது இலங்கையைப் பற்றி சமமான உரிமை உண்டென்றும் மேல்நாட்டு திராவிடர்களை இப்பொழுது கள்ளத்தோணி என குறியீடு செய்வது அநீதியான செயலெனவும் இந்நாட்டின் ஆரம்ப கள்ளத்தோணி விஜய மன்னன் எனவும் கூறினார்.

விஜய மன்னனின் மனைவி இந்திய பாண்டிய மன்னனின் மகள் ஓர் திராவிடப் பெண் எனவும் இவ்வரசு தம்பதிகளின் மூலம் உருவாகிய இவ் ஒரே பிரிவினர் சிங்களவர், தமிழர் என பேதமுற்று பிரிந்திருப்பது சிங்களம், தமிழ் என்ற இரண்டு மொழிகளைப் பேசுவதனாலேயே என தொடர்ந்து பேசிய செயலாளர் கூறினார்.

இதனால் எந்தளவு வதைகளையும் தொந்தரவுகளையும் பெற்றாலும் மலைநாட்டு (மலையக) இந்தியர்களின் மனித உரிமைகளை பாதுகாப்பதற்காக கொண்டுச் செல்லும் போராட்டத்தை அவ்வாறே கொண்டு செல்வதாக அவர் கூறினார்.

கே. சௌந்தர்ராஜா பேசுகையில் இந்நாட்டில் பிரஜாவுரிமையின்றி அப்பாவிகளாக துன்பப்படும் திராவிட மக்களை அடிமைத்தளையிலிருந்து மீட்டு அவர்களுக்கு பிரஜாவுரிமையையும் மற்றும் மனித உரிமைகளையும் பெற்றுக் கொடுத்து அவர்களை சிரேஷ்ட பிரஜைகள் பிரிவினராக ஆக்குவது திராவிட முன்னேற்றக் கழக இயக்கமே எனக்கூறினார்.

கே. ராமசாமி, கம்பளை தாசன், ஜோன் பிரான்சிஸ், கிருஷ்ணசாமி போன்றோரும் அகில இலங்கை முஸ்லிம் இயக்கத்தின் தலைவரும் பேசினார் (ஆ - ர்))

மேலும் கூட்டத்தின் பின்னர் நடந்த கலவரத்தைப் பற்றி வெளியிட்ட செய்தியில்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

### රැස්වීමෙන් පසු කලබලයක්

ද්‍රවිඩ මුන්නේත්‍ර කලගම් වාර්ෂික සම්මේලන වාරය බණ්ඩාරවෙල නගර සභා ශාලාවේ පැවැත්වීමෙන් පසු නොයෙක් දුර බැහැර පළාත් වලින් පැමිණ සිටි පිරිසක් තම ගම් පෙදෙස් හා නිවෙස් බලා යාම සඳහා පුරහල සිට නගරය හරහා බස්නැවැතුම් පොළ හා දුම්රිය ස්ථානය කරායද්දී තැන්තැන් වල සැගවී සිටි කණ්ඩායමක් ගල්මුල් බෝතල් ආදීය ගෙන ඔවුන් ලුහුබදිමින් පහර දෙන්නට වූ නිසා බියෙන් තැතිගත් ඒ අය හිස්ලූලූ අත දුවන්නට වූහ.

පොලීසිය ගත් ප්‍රබල උත්සහය නිසා කලබලය සංසිඳුවන ලදී.

තුවාල ලත් අය පොලිස් ජීප් රථ වලින් බණ්ඩාරවෙල රෝහල කරා ගෙනයන ලදහ . (32)

## கூட்டத்தின் பின் கலவரம்

திராவிட முன்னேற்ற கழகம் கட்சியின் வருடாந்த கூட்டம் பண்டாரவளை நகரசபை மண்டபத்தில் நடாத்தியதன் பின் பல்வேறு தூரப்பிரதேச நகரங்களிலிருந்து வந்தவர்கள் தம் ஊர்களையும் வீடுகளையும் நோக்கி செல்வதற்காக நகர மண்டபத்திலிருந்து நகரத்தினூடாக பஸ் நிலையத்திற்கும், புகையிரத நிலையத்திற்கும் செல்லுகையில் சிற்சில இடங்களில் மறைந்து இருந்த குழுவொன்று கற்களாலும் முட்களாலும் மணல் நிரப்பிய போத்தல்களாலும் அவர்களை துரத்தி தாக்கியமையினால் பயத்தினால் திகிலுற்ற அவர்கள் சிதறி ஓடலாயினர். பொலீஸ் எடுத்த பெரும் முயற்சியின் காரணமாக கலவரம் அமைதியாக்கப்பட்டது.

காயமுற்றோர் பொலீஸ் வண்டிகளின் மூலம் பண்டாரவளை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

சிங்கள தினசரி பத்திரிகைகளில் ஒன்றான தினமின இ. தி. மு. க வின் உண்மையான நிலைப்பாட்டினை விளக்கிய போதிலும் இனவாத சக்திகள் இ. தி. மு. க விற்கெதிரான இனவாத நிலைப்பாட்டினை கைவிடவில்லை. பாராளுமன்றத்தில் சிங்களப் பிரதிநிதிகள் இ. தி. மு. க வினை நிரந்தரமாகத் தடை செய்யும்படி கோரினர். இதே வேளை இ. தி. மு. க. வினால் நடத்தப்பட்ட மாநாடு தினத்தன்று இரத்தினபுரியில் கூடிய இனவாத குழுவினர் இ. தி. மு. க விற்கு எதிராக அபிசிங்கலுா ( நாம் சிங்களவர்) என்ற அமைப்பினை உருவாக்கியமை குறிப்பிடத்தக்கது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஸ்ரீமா - சாஸ்திரி ஒப்பந்தம்

நாடற்ற பிரச்சினை தொடர்பாக இ. தி. மு. க தொடர்ச்சியாக முன்னெடுத்த போராட்டத்தின் விளைவாக பண்டாரவளை சம்பவம் உருவானதுடன் அதன் தாக்கம் இப்பிரச்சினைக்கு ஓர் தீர்வை காணும்படி அரசை நிர்ப்பந்தித்தது. நாடற்ற பிரச்சினையை முதன்மையாகக் கொண்டு செயற்பட்டு வந்த இ. தி. மு. க நாட்டு மக்கள் முகம் கொடுக்கும் பிரச்சினை பற்றியும் குரலெழுப்பி வந்தது. இடதுசாரி கூட்டரசாங்கம் 1964ல் லேக்ஹவுஸ் பத்திரிகை நிறுவனத்தை தேசிய மயமாக்குவதற்கும் மற்றும் பத்திரிகை சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துவதற்கான முயற்சியில் ஈடுபடுகையில் இ. தி. மு. க இதனை ஜனநாயக விரோதச் செயலெனக் கூறி அதற்கெதிராக தமிழ் மக்கள் மத்தியில் பிரச்சாரத்தை மேற்கொண்டது. இப்பிரச்சினை தொடர்பாக இ. தி. மு. க வின் துணைப்பொதுச் செயலாளர் விட்ட அறிக்கை.

## " MINORITIES WILL BE HIT"

The last nail in the coffin of the freedom of the minorities will be driven if legislation is brought to muzzle the press in any manner, stated Mr. M. A. Velalagan general secretary of the D.M.K. in statement to the press He adds " The free press is one of the advantageous avenues open to the minorities to let the public and the Government know about the plight and conditions of this section of the people. and if that avenue is also closed then the minorities of the country will have their fate sealed. and this country connot boast of democracy as the cherished rights of the people will fade away.

Free thinking and writing are fundamental rights of a citizen of a democratic country and this freedom must be safeguard at any cost.

"On behalf of the D. M. K. I appeal to all right thinking persons of this country whether they belong to the majority with the rights of the citizen. I appeal especially to the Government to take its hand off any move to muzzle or curb the free press and to safeguard democracy in the country." (33)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இ. தி. மு. க பத்திரிகைச் சுதந்திரத்திற்காக குரலெழுப்பிய வேளை இடதுசாரிக்கட்சிகள் பத்திரிகைச் சுதந்திரத்தை தடைப்படுத்தும் அரசின் முயற்சிக்கு ஆதரவான நிலைப்பாட்டினை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. இ. தி. மு. க நாட்டின் பொதுப்பிரச்சினைகள் தொடர்பாக குரலெழுப்பிய போதும் இனவாத சக்திகளும் சிங்கள பத்திரிகைகளும் இ. தி. மு. க ஓர் இனவாத சிங்கள விரோத இயக்கமென்ற பிரச்சாரத்தை கைவிடவில்லை. இவ்வினவாத பிரச்சாரத்தை முறியடிக்கும் வகையில் இ. தி. மு. க தமது 19வது வருடாந்த மாநாட்டை நடாத்த திட்டமிட்டது.

1964 அக்டோபர் 18ம் திகதி கொழும்பு செஞ்சிலுவை சங்கமண்டபத்தில் 19வது வருடாந்த மாநாட்டை நடாத்தியது. அனைத்து பத்திரிகையாளர்களை இம் மாநாட்டிற்கு வரவழைத்ததுடன் கூட்டத்தில் உரையாற்றிய அனைத்து பேச்சாளர்களும் தமது இயக்கம் சிங்கள மக்களுக்கு எதிரானதல்ல எனும் கருத்தினை தமதுரைகளில் வலியுறுத்தினர். இம்மாநாட்டின் பின்னர் சிங்கள பத்திரிகைகள் இ. தி. மு. க தலைவர்களின் உரைகளை வெளியிட்டன.

## ද්‍රවිඩ මුන්නේත්‍ර කසාගම් පක්ෂයට සිංහල සහය ඕනෑමලූ කවදාවත් හතුරු කම් කරන්නේ නෑ

ඇතැම් දේශපාලනඥයින් ඇතුළු සමහර උදවිය ලංකාවේ ද්‍රවිඩ කසාගම් පක්ෂය ඉන්දියාවට ගැතිකම් කරමින් මෙරටට ද්‍රෝහි කම් කරන රට ගිලගැනීමට බලාපොරොත්තුවෙන් සිටින කොටසක් හැටියට හංවඩු ගසා ඇතත් තම පක්ෂය එවැන්නක් නොවන අතර මෙරට සිංහල ජනතාව සමඟ උරෙනුර ගැටී සමාජවාදය කරා ගමන් කිරීමට උදව් දීමට සූදානම්ව සිටින පක්ෂයක් යැයි රියේ කොළඹ රතුකුරුස සමාජ ශාලාවේ පැවැති රැස්වීමක මූලසුන ගෙන කතා කල ඒ.ඉලන්චේලියන් මහතා කීය.

ලංකා ද්‍රවිඩ මුන්නේත්‍ර කසාගම් සංගමයේ 19 වැනි සංවත්සරය හා එම සංගමයේ ප්‍රතිපත්ති මහජනතාවට දැනගැනීම සඳහා මෙම රැස්වීම පැවැත්විණි.

ඉන්දියාවේ ද්‍රවිඩ මුන්නේත්‍ර කසාගම් පක්ෂය ඇතිකලේ ද්‍රවිඩ ජනතාවගේ චාරිත්‍ර සංස්කෘතිය හා කලාව දියුණු කරීමට බවත් එම චාරිත්‍ර විධි මෙරට ජනතාවට ඇති කිරීම සඳහා ලංකාවේ මෙම සංවිධානය ඇතිකළ බවත් කීය.

ඉන්දියාවේ මෙම පක්ෂය දේශපාලනය ඇඳාගත් බැවින් ලංකා පක්ෂය ඉන් ඉවත් වූ බවකී ඒ මහතා ඇතැම් දේශපාලඥයින් සහ සමහර කොටස් අප පක්ෂය භයානක පුද්ගලයන් සිටින ලංකාවට ද්‍රෝහිකම්



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

කරණ පක්ෂයක් බවට හංවඩු ගසා ඇතත් අප පක්ෂය ඉංදියාවේ කිසිම පක්ෂයක් සමග කිසිම සම්බන්ධයක්වත් නැතැයි ඒ මහතා කීය.

ද්‍රවිඩ ජනතාවක් වශයෙන් සංස්කෘතික චාරිත්‍ර කලා ආදිය දියුණු කිරීමේදී ගාන්ධි, නේරු, තොන්ඩමන් අයිස් යන අයට ජය වේවා පතමින් සටන් පාඨ කීම පුරුද්දක් වශයෙන් තබාගත් ඔවුන් ද්‍රවිඩ මුන්නේත්‍ර කසාගම් පක්ෂය මුළාවේ දැමූ බවත් ඒ නිසාම වැඩි වැඩියෙන් අප පක්ෂය ද්‍රෝහි පිරිසක් හැටියට මහජනතාවට ඒත්තු ගිය බවත් කී ඒ මහතා මේ රටේ නියම සමාජ වාදය කරා ගමන් කරන දේශපාලන කොටස් වලට උදව් දීම තම පක්ෂයේ පරමාර්ථය බවත් කීය.

අපගේ විමුක්තිය නිදහස් යුක්තිසහගත ඉල්ලීම් ඉටුකර ගැනීමට අපගේ එක්සත්භාවය අවශ්‍යයයි. අපට සිංහල ඉගෙන ගැනීමට ලැබුණානම් අපගේ පරමාර්ථයන් සිංහල භාෂාවෙන් පෙන්වීමට ඉඩ තිබුණ බව කී ඒ මහතා ලංකාවේ හැම පළාතකම ද්‍රවිඩ ජනතාව සිටින බවත් ඔවුන්ට චාරිත්‍ර විධි කියා දීම සඳහා දිවයිනේ හැම පළාතකම ශාඛා ඇති කොට එමගින් සිංහල සහෝදරයන් සමග අත්වැල් බැඳගෙන සමාජවාදී අදහස් ඇතිව එකම පවුලක අය වශයෙන් ජීවත්වීම තම පක්ෂයේ එකම පරමාර්ථය බවත් කීය.

පක්ෂයේ ප්‍රධාන ලේකම් ඇන්.ඒ.වේල්අලගන් මහතා කතා කරමින් ලංකාවේ ඇතැම් ප්‍රවෘත්ති පත්‍රවලින් ද්‍රවිඩ මුන්නේත්‍ර කසාගම් පක්ෂය ඉතා භයානක කොටස් සිටින ආගම් විරෝධි පක්ෂයක් ලෙසට හඳුන්වා දී ඇති බවත් මෙම රැස්වීම් පවත්වන්නට විශේෂයෙන් යෙදුනේ ප්‍රවෘත්ති පත්‍ර මාර්ගයෙන් අප ප්‍රතිපත්ති මහජනතාවට පෙන්වාදී සමාජවාදී අදහස් ඇති සාමකාමී කොටසක් බවට පෙන්වා දීමට බවත් කිය.

අන්වාර් බ්‍රිනිදාස මහතා මලයාල කැනඩම් තෙළිඟු සිංහල කථා කරණ බෙහෝ අය ද්‍රවිඩයන් බවත් ඔවුහු ද්‍රවිඩයන් බව නොසිතනවානම් එය වරදක් බවත් ලංකාවේ ලගම සිටින ද්‍රවිඩයන්ට බුද්ධාගම උගන්නනවා වෙනුවට අද පිට රට බුද්ධාගම ප්‍රචාරය කිරීමට යන බවත් එයට තමා විරුද්ධ නොවන අතර මෙරට සිටින ද්‍රවිඩයන්ට බුද්ධාගම ගැන අවබෝධයක් දියයුතු බවත් කිය.

කේ.කුමාර්ස්වාමි. පෙරියාර් ඒ.ඇස්. ජෝන් යන මහත්වරුද කථා කළහ (34)

**திராவிட முன்னேற்றக் கழக கட்சிக்கு சிங்கள ஆதரவு வேண்டுமாம் ஒருநாளும் துரோகம் இழைக்காதாம்.**

ஒரு சில அரசியல்வாதிகள் உட்பட ஒரு சிலர் இலங்கைத் திராவிடக் கழக கட்சி இந்தியாவிற்கு ஆதரவளித்து இந்நாட்டிற்கு துரோகம் இழைத்து நாட்டை விழுங்க எதிர்பார்த்திருக்கும் பிரிவினர் என பெயர் சூட்டியுள்ளபோதிலும் தமது கட்சி அவ்வாறானதொன்றல்ல என்பதுடன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்நாட்டின் சிங்கள மக்களுடன் தோளோடுதோள் சேர்ந்து சோசலிசத்தை நோக்கி பயணம் செல்ல தயாராக உள்ள கட்சியென கொழும்பு செஞ்சிலுவை சங்க மண்டபத்தில் நடந்த கூட்டத்தில் தலைமை வகித்து உரையாற்றிய சங்கத்தின் தலைவர் ஏ. இளஞ்செழியன் கூறினார்.

இலங்கை திராவிட முன்னேற்றக் கழக சங்கத்தின் 19வது வருடாந்த மற்றும் சங்கத்தின் கொள்கைகளை மக்களுக்கு அறியத் தரும் வகையில் இக்கூட்டம் நடைபெற்றது.

இந்திய திராவிட முன்னேற்றக் கழகக் கட்சி தமிழ் மக்களின் பாரம்பரியம் கலாச்சாரம், கலை என்பனவற்றினை அபிவிருத்தி செய்வதற்காகவே உருவாக்கப்பட்டது. அப்பாரம்பரிய விதிமுறைகளை இந்நாட்டு தமிழ் மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுப்பதற்காகவே இலங்கையில் இவ்வமைப்பு உருவாக்கப்பட்டது எனவும் கூறினார்.

இந்தியாவில் இக்கட்சி அரசியலை இணைத்துக் கொண்டமையினால் இலங்கை கட்சி அதிலிருந்து விடுபட்டது எனக்கூறிய அவர் ஒரு சில அரசியல்வாதிகளும் ஒரு சில பிரிவினரும் எமது கட்சி பயங்கரமான நபர்கள் உள்ள இலங்கைக்கு துரோகம் இழைக்கும் கட்சியென பெயர் சூட்டியுள்ள போதிலும் எமது கட்சி இந்தியாவுடன் எவ்வித தொடர்பும் கொண்டில்லையெனக் கூறினார்.

திராவிட மக்கள் என்ற வகையில் கலை, கலாசார, பண்பாடு போன்றவற்றை மேம்பாடு செய்கின்றபோது காந்தி, நேரு, தொண்டமான். அஸீஸ் போன்றவர்கள் வாழ்க எனும் சுலோகங்களை கூற பழக்கப்படுத்தி வைத்திருந்த அவர்கள் திராவிட முன்னேற்றக்கழகக் கட்சியை கஷ்டத்தில் போட்டதுடன் அதிகமாக எமது கட்சி துரோகி பிரிவினர்களாக மக்களுக்கு உணர்த்தப்பட்டதென கூறிய அவர் இந்நாட்டின் சிறந்த சோஷலிசத்தை நோக்கி பயணத்தை மேற்கொள்கின்ற அரசியல் கட்சிகளுக்கு உதவி நல்குவதும் தமது கட்சியின் குறிக்கோளெனவும் அவர் குறிப்பிட்டார்.

எமது விடுதலை சுதந்திரம் நியாயமானது. கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ள எமது ஐக்கியம் அவசியமாகும். எமக்கு சிங்களம் படிக்கக் கிடைத்திருந்தால் எமது குறிக்கோள்களை சிங்கள மொழியில் வெளிக்காட்ட முடிந்திருக்கும் எனக் கூறிய அவர் இலங்கையின் அனைத்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பகுதிகளிலும் தமிழ் மக்கள் இருக்கின்றனர் எனவும் அவர்களுக்கு பழக்கவழக்க முறைகளை சொல்லிக் கொடுப்பதற்காக தீவின் அனைத்துப் பகுதிகளிலும் கிளைகளை உருவாக்கி அதனூடாக சிங்களத் தோழர்களுடன் கைகோர்த்து சோசலிசக் கருத்துக்களுடன் ஒரே குடும்பத்தின் அங்கத்தினர்களாக வாழ்வது தம் கட்சியின் ஒரேகுறிக்கோள் எனவும் கூறினார். கட்சியின் பொதுச்செயலாளர் எம். ஏ. வேலழகன் பேசுகையில் ஒருசில பத்திரிகைகளில் திராவிட முன்னேற்ற கழகத்தவர்களின் கட்சி மிகவும் பயங்கரமானவர்கள் உள்ள, மதவிரோத கட்சி என அறிமுகப்படுத்தியுள்ளன எனவும் இக்கூட்டம் நடாத்துவதற்கான விஷேட காரணம் செய்திப்பத்திரிகை மூலம் எமது கொள்கைகளை பொது மக்களுக்கு எடுத்துக் காட்டி சோசலிசக் கருத்துக்களை உடைய அமைதியான பிரிவினர் என்பதனை எடுத்துக்காட்டுவதேயாகும் எனக்கூறினார்.

அன்வர் ப்ரணிதாச (அன்பர் பூபதிதாசர்) அவர்கள் மலையாளம், கன்னடம், தெலுங்கு, சிங்களம் பேசும் அநேகர் திராவிடர்கள் என்றும் அவர்கள் திராவிடர்களாக கருதாவிடின் அது பிழையாகும் எனவும் இலங்கையின் அருகில் இருக்கும் திராவிடர்களுக்கு பௌத்த மதத்தினை படிப்பிக்காமல் அதற்கு மாறாக இன்று வெளிநாடுகளில் பௌத்த மதத்தை பிரச்சாரம் செய்கின்றனர் எனவும் அதற்கு தாம் எதிர்ப்பல்ல என்பதுடன் இந்நாட்டில் வாழும் திராவிடர்களுக்கு பௌத்த மதத்தைப்பற்றி தெளிவு ஏற்படுத்த வேண்டுமெனவும் கூறினார்.

கே. குமாரசாமி, பெரியார் ஏ. எஸ் ஜோன் போன்றோரும் உரையாற்றினர் (ஆ - ர்)

இவ்வாறு இ. தி. மு. க தேசிய பிரச்சினை தொடர்பாகவும் மற்றும் சிங்கள மக்கள் மத்தியில் பரப்பப் பட்டுள்ள இனவாத நிலைப்பாட்டினைகளையும் முயற்சியில் ஈடுபட்டுள்ள வேளையில் ஏலவே திட்டமிட்டபடி பிரதமர் ஸ்ரீமா பண்டாரநாயக்கா அவர்கள் இந்தியாவிற்கான விஜயத்தை மேற்கொண்டார். நாடற்றவர் பிரச்சினை தொடர்பாக இ. தி. மு. க மேற்கொண்டு வரும் போராட்டம் காரணமாக பீதியுற்ற இனவாத பாராளுமன்ற அரசியல் வாதிகளும் மற்றும் இடதுசாரி அரசியல் வாதிகளும் பிரதமரின் இவ்விஜயத்தின் போது நாடற்றவர்களின் பிரச்சினைக்கு ஓர் தீர்க்கமான முடிவினை இந்தியாவுடன் மேற்கொள்ளும்படி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கோரினர். இந்தியப் பிரதமர் லால் பகதூர் சாஸ்திரியுடன் இருதரப்பு பேச்சு வார்த்தைகளை மேற்கொண்ட திருமதி. ஸ்ரீமா பண்டாரநாயக்க தமது பேச்சுவார்த்தையின் போது நாடற்ற பிரச்சினைக்கு முக்கியத்துவம் அளித்து திரு. லால் பகதூர் சாஸ்திரியுடன் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டார்.

இவ்வொப்பந்தத்தின் படி இந்தியா 5,25000 மலையக தமிழருக்கு குடியுரிமை வழங்கவும், இலங்கை 3,00000 பேருக்கு குடி உரிமை வழங்கவும் இணக்கம் காணப்பட்டது. இவ்வொப்பந்தம் கைச்சாத்திடுதல் தொடர்பாக பிரச்சினையில் சம்பந்தப்பட்டவர்களிடமோ அல்லது அவர்களது பிரதிநிதிகளிடமோ கலந்துரையாடப்படவில்லை.

ஆகக்குறைந்தது மலையக மக்களின் சார்பாக பாராளுமன்றத்தில் நியமன உறுப்பினராக வீற்றிருந்த திரு. எஸ். தொண்டமானிடமும் இவ்விடயம் தொடர்பாக கலந்துரையாடப்படவில்லை. வெறுமனே மந்தைகளை பிரித்துக்கொள்வதைப்போல் இருநாட்டுத்தலைவர்களும் மலையக மக்களைப் பிரித்துக்கொண்டனர். அனைத்து தமிழ்த் தலைமைகளும் இவ்ஜனநாயக விரோத நடவடிக்கையை கண்டித்தனர். தமிழரசுக் கட்சி அதனை காட்டுமிராண்டிச் செயல் என வர்ணித்தது.

முழு இந்திய வம்சாவளி மக்களுக்கும் இலங்கையே தாய்நாடு எனக்கூறி போராடி வந்த இ. தி. மு. க இவ்வொப்பந்தத்தினை பற்றி ஆராய்வதற்கு முயன்றது. தமிழரசுக்கட்சியைச் சார்ந்த டாக்டர் ஈ. எம். நாகநாதன் ஊடாக திரு. எம். திருச்செல்வம் இல்லத்தில் ஓர் கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்தது. இக்கலந்துரையாடலில் கலந்து கொள்ளும்படி அனைத்து மலையக தொழிற்சங்கங்களுக்கும் அழைப்பு விடுத்தது. எனினும் இ. தி. மு.க வை தவிர எந்தவொரு அமைப்பும் கலந்துகொள்ளவில்லை. இவ்வொப்பந்தம் தொடர்பாக கலந்துரையாடிய இவ்விரு அமைப்புக்களும் இவ்வொப்பந்தத்தை எதிர்ப்பதென தீர்மானித்தன.

இச்செயற்பாட்டில் முதற்கட்டமாக இ. தி. மு. க முதன்முதலாக கொழும்பில் பிரச்சாரக்கூட்டங்களை மேற்கொண்டது. முதலாவது எதிர்ப்புக் கூட்டத்தை கொழும்பு விவேகானந்தா வித்தியாலயத்தில் ஒழுங்கு செய்தது. தமிழரசுக்கட்சியை சார்ந்த டாக்டர் ஈ. எம். நாகநாதன், பண்டிதர் கா. பொ. இரத்தினம் மற்றும் இ. தி. மு. க வைச் சார்ந்த பெரியார், ஏ. எஸ். ஜோன், பொதுச்செயலாளர் மு. அ. வேலழகன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிரான்சிஸ் மணியக்காரர், குறட்செல்வன் குமாரசாமி, ஏ. வி. நாதன் மலைத்தம்பி, எஸ். சண்முகம் முதலானோர் திரு. ஏ. இளஞ்செழியனின் தலைமையின் கீழ் உரையாற்றினர். கொழும்பில் நடாத்திய இக்கூட்டத்துடன் மலையகம் முழுவதும் எதிர்ப்பு பிரச்சாரக் கூட்டத்தை நடாத்தி இ. தி. மு. க எந்தவொரு நாட்டிற்கும் மனு போடவேண்டாம் ஏனெனில் நீங்கள் யாவரும் இலங்கையர்களே எனும் பிரச்சாரத்தை மேற்கொண்டது.

எவ்வாறு 1948ம் ஆண்டு மலையக மக்களின் குடியுரிமையை பறித்தவேளை பாராளுமன்ற இடதுசாரி கட்சிகளும் தமிழ் மக்களது அமைப்புக்களும் தமது எதிர்ப்பினை பாராளுமன்ற எல்லைக்குள் மட்டும் வரையறுத்துக் கொண்டனவோ அதேபோல இவ்வொப்பந்தம் தொடர்பான எதிர்ப்பினை தமிழ் கட்சிகளும் பாராளுமன்றத்துடன் நாளடைவில் வரையறுத்துக்கொண்டன.

தமிழரசுக் கட்சியினரும் இ. தி. மு. க வினரும் ஒப்பந்தத்துக்கு எதிரான நடவடிக்கையை முன்னெடுத்ததுடன் நாடு பொதுத்தேர்தலை சந்தித்தது. 1965ம் ஆண்டு பொதுத்தேர்தல் நடைபெற்றதுடன் இப் பொதுத்தேர்தலின்போது சிறிமா சாஸ்திரி ஒப்பந்தத்தை இடதுசாரிக் கட்சிகள் ஆதரித்தமையினால் தேர்தலின் போது இக்கட்சிகளுக்கு ஆதரவளிக்க கூடாது எனும் தீர்மானத்தை இ. தி. மு. க மேற்கொண்டது. இதேவேளை இவ்வொப்பந்தத்தை எதிர்த்த தமிழரசு கட்சிக்கு ஆதரவளிப்பது எனும் நிலைப்பாட்டினை கடைப்பிடித்தது. தமிழ் மக்கள் செறிவாக வாழும் வடகிழக்கு பிரேதசங்களில் தமிழரசு கட்சிக்கு ஆதரவாக பிரச்சாரத்தை மேற்கொண்டது.

தேர்தலின் போது திரு. டட்லி சேனாநாயக்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியினர் வெற்றியீட்டிய போதிலும் அரசினை அமைக்கும் அறுதிப் பெரும்பான்மையைப் பெறவில்லை. இதனால் ஐக்கிய தேசியக் கட்சியினர் தமிழரசுக் கட்சியின் உதவியை நாடினர். தமிழரசுக் கட்சியினரும் இதற்கு இணங்கவே தேசிய அரசு உருவாக்கப்பட்டது. இ. தி. மு. க இதனை எதிர்த்ததுடன் தமிழரசுக் கட்சியினருடனான உறவை நிறுத்திக் கொண்டது. இதேயாண்டு அக்டோபர் 16, 17ம் திகதிகளில் மட்டகளப்பு மாவட்டத்தில் 3வது மாநில மாநாட்டை மட்டக்களப்பு நகர மண்டபத்தில் நடாத்தியது. இம்மாநாட்டின் பின்

www.tamilarangam.net

இ. தி. மு. க தமிழரசுக் கட்சி அரசுடன் இணைந்தமையினால் தமிழ் மக்களுக்கு புதிய தலைமையொன்றின் அவசியம் தோன்றியுள்ளது எனும் கருத்தினை முன்வைத்தது.

1964ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சிறிமா சாஸ்திரி ஒப்பந்தத்தை காட்டுமிராண்டி ஒப்பந்தம் என வர்ணித்து அதற்கெதிராக குரலெழுப்பிய தமிழரசுக் கட்சியினர் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து தேசிய அரசை உருவாக்கி செயற்பட்டனர். அத்துடன் ஐ. தே. க அரசு சிறிமா சாஸ்திரி அமுலாக்கல் சட்டத்தை 1967ல் அறிமுகப்படுத்தியபோது அதனையும் ஆதரிக்கலாயினார். இம் முறை ஐ. தே. க வினால் நியமனப் பதவி அளிக்கப்பட்டிருந்த திரு. எஸ். தொண்டமான் இதனை ஆதரிக்கலானார். தமிழரசு கட்சியின்பால் சிறிதளவு நம்பிக்கை கொண்டிருந்த இ. தி. மு. க விற்கு இது பெரும் அதிர்ச்சியை கொடுக்கலாயிற்று.

SEELAN BOOKS
SIGNATURE
NORWAY



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அரசியல் கட்சியாக பிரகடனப்படுத்தல்

தமிழரசுக்கட்சியினர் ஸ்ரீமா சாஸ்திரி அமுல்படுத்தல் சட்டத்தை ஆதரித்தவுடன் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான அரசியல் இயக்கமொன்று தமிழ் மக்கள் மத்தியில் இல்லையென பிரச்சாரம் செய்த இ. தி. மு. க அப்பொறுப்பினைத் தாமே ஏற்கப்போவதாக அறிவித்தது. 1968 ஜனவரி 29ம் திகதி நடந்த பொதுக்குழுக்கூட்ட முடிவின்போது இ. தி. மு. க அரசியல் கட்சியாகச் செயற்படும் என அறிவித்தது.

இ. தி. மு. க இனி அரசியல் கட்சி, இதுவரை சமூகநல கலாசார இயக்கமாக இருந்து வந்த இலங்கை திராவிட முன்னேற்றக்கழகம் நேற்றுமுதல் அரசியல் கட்சியாக மாற்றி அமைக்கப்பட்டது. நேற்று நடைபெற்ற பொதுக்குழுக்கூட்டத்தில் இதற்கான முடிவு செய்யப்பட்டது.

பொதுக்குழுக்கூட்டம் நேற்று திரு. வி. க. நினைவுப் பள்ளியில் நடைபெற்றது. நடப்பு வருடத்துக்கு பொதுச் செயலாளராக திரு. ஏ. இளஞ்செழியன் 22 மாவட்டக்கிளைகளின் பிரதிநிதிகளால் தெரிவு செய்யப்பட்டார். இணைத்துணைச் செயலாளர்களாக திரு. இளம்வழுதியும், திரு. தேவராசனும் தெரிவு செய்யப்பட்டனர்.

இக்கூட்டத்தில் திருவள்ளுவர் தினத்தை பொது விடுமுறை தினமாக பிரகடனப்படுத்துமாறு அரசாங்கத்தை கேட்டுக் கொள்வதென முடிவு செய்யப்பட்டது. வள்ளுவர் தினத்தை தமிழர் எழுச்சி தினமாகக் கொண்டாடுவதெனவும் முடிவு செய்யப்பட்டது. அண்மையில் நடைபெற இருந்த கல்முனை இடைத்தேர்தலில் போட்டியிடும் நான்கு அபேட்சகர்களில் யாருக்கு இலங்கை திராவிட முன்னேற்றக்கழகம் ஆதரவு அளிப்பது என்பது பற்றி கூட்டத்தில் ஆராயப்பட்டது.

இதுபற்றி கழகத்தின் துணைச் செயலாளர்களில் ஒருவரான திரு. இளம்வழுதி பேசுகையில் கூறியதாவது திரு. மாணிக்கம் தனது கொள்கையில் உறுதியாக நின்றார். தமிழ் மக்களும் மலையக மக்களும் காட்டிக்கொடுக்கப்படுவதை வெறுத்தார். அதற்காக தனது பதவியையும் துறந்தார்.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொள்கை அளவில் அவர் நமது தி. மு. க கொள்கைகளையே கொண்டவர். எம்மைப்போல் மலைநாட்டு மக்களின் குடியுரிமைச்சட்டம், பிரஜா உரிமை சட்டங்களுக்காக பாடுபடுபவர். இப்படிப்பட்டவரை நாம் ஆதரிப்பது, அரசியல் வாழ்வில் கண்ணியம் உள்ளவர்களையும் உரிமை நிலை நாட்டுவதற்காக பதவிதுறக்கத் தயாராக இருப்பவர்களையும் வளர்க்க உதவும்.

பொதுச்செயலாளர் திரு. ஏ. இளஞ்செழியன் பேசுகையில் சொன்னதாவது. திரு. மாணிக்கம் நாட்டுப் பிரிவினையைக் கேட்பவர். மேலும் அவர் சுதந்திர தினத்தை துக்க தினமாக கொண்டாட இருக்கிறார். இவைகள் நமது கொள்கைகளுக்கு அப்பாற்பட்டது. ஒரு சில கொள்கைகளுக்காக நாம் அவரை ஆதரிக்கையில் நாம் மற்ற கொள்கைகளையும் ஏற்பதாக பொதுமக்களும் அரசும் முடிவு செய்யும் நிலை உள்ளது. ஆதலால் இது குறித்து செயற்குழு மட்டும் விரைவில் கூடி முடிவு எடுக்கவேண்டும்.



அரசியற் கட்சியாகப் பிரகடனப்படுத்திய பொதுக்கூட்டம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

துணைப் பொதுச் செயலாளர்களில் ஒருவரான திரு. தேவராசன் பேசுகையில் குறிப்பிட்டதாவது இதுவரை தமிழ் இனத்தை வழி நடத்திச் சென்ற தலைவர்கள் அனைவரும், பிரபுத்துவப் பரம்பரையினராகவும் பொது மக்களுடன் எதுவித தொடர்புகள் அற்றவர்களாகவும், மக்களின் பிரச்சினைகளையும் அபிலாசைகளையும் உணரவோ, விளங்கவோ முடியாத நிலையிலும் இருந்து வந்தனர். (35)

இ. தி. மு. க வின் அரசியல் பிரவேசத்தை தமிழ் நாளிதழ்கள் வரவேற்றன. சுயாதீன தமிழ் நேசிப் பத்திரிகையான வீரகேசரி இ. தி. மு. க வின் அரசியல் பிரவேசம் பற்றி கருத்து மன்றத்தை உருவாக்கி மக்களின் கருத்துப் பரிமாற்றத்திற்கு வாய்ப்பளித்தது. இதே வேளை அதன் சகோதரப் பத்திரிகையான மித்திரன் இவ்விடயம் தொடர்பாக தலையங்கம் ஒன்றினையும் வெளியிட்டது.

இலங்கை திராவிட முன்னேற்றக் கழகம் பல ஆண்டுகள் வரை சமூகச் சீர்திருத்த ஸ்தாபனமாகப் பணியாற்றிவிட்டு இப்பொழுது ஒரு அரசியல் கட்சியாகத் தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்டிருக்கிறது. தி. மு. க வைப் பற்றி சிங்கள மக்கள் மத்தியில் பீதியடைந்த காலம் ஒன்றுண்டு. இலங்கையை இந்தியாவுடன் இணைக்கப் பாடுபடும் கட்சியென தி. மு. க பரப்பப்பட்டதையும் நாம் அறிவோம். சென்னை மாநிலத்தில் தி. மு. க ஆட்சி ஏற்பட்டு அங்கு நிர்வாகம் சீராக நடப்பதையும் அறிஞர் அண்ணா அன்புக்கரம் நீட்டியிருப்பதும் இங்கு நிலவிவரும் தவறான எண்ணங்களைச் சிறிது சிறிதாக மாற்றியிருக்கின்றன. இந்த சந்தர்ப்பத்தில் தன்னை ஒரு அரசியல்கட்சியாக பிரகடனப்படுத்தி கொண்டிருக்கும் இ. தி. மு. க விற்கு ஒரு அதிமுக்கியமான பொறுப்பும் கடமையும் உண்டு. அதுதான் பெரும்பான்மையோர்களான சிங்கள மக்களின் மனதில் நம்பிக்கையும் நல்லெண்ணத்தையும் வளர்க்க முற்படுவ[illegible] இ. தி. மு. க வின் பொதுச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் திரு. இளஞ்செழியனின் உரையைப் படிக்கும் பொழுது இந்த வகையில் அவருடைய கட்சி சிறப்பாகப் பணிபுரியுமென்ற நம்பிக்கை உறுதியாக ஏற்படுகிறது. (36)

அரசியற் கட்சியாகப் பிரகடனப்படுத்திய இ. தி. மு. க அதன் முதல் அரசியல் நடவடிக்கையாக 1968 பெப்ரவரியில் நடாத்தப்பட்ட கல்முனை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இடைத்தேர்தலில் போட்டியிட்ட திரு. எம். மாணிக்கத்தை ஆதரித்து பிரச்சார நடவடிக்கையில் ஈடுபட்டது. திரு. எம். மாணிக்கம் தமிழரசுக்கட்சியிலிருந்து விலகி தமிழ் ஈழ விடுதலை முன்னணி என்ற கட்சியினை உருவாக்கி இத்தேர்தலின் போது போட்டியிட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு இ. தி. மு. க அரசியல் நடவடிக்கையை முன்னெடுத்து நான்கு மாதங்கள் கழியும் வேளையிலேயே இலங்கையரசு அடையாள அட்டை மசோதாவையும் மாவட்ட சபை மசோதாவையும் அறிமுகப்படுத்தியது. அடையாள அட்டை மசோதாவை நாசி நடவடிக்கையென வர்ணித்த இ. தி. மு. க இம்மசோதாவை பகிஷ்கரிக்கும்படி தமிழ் மக்களைக் கோரியதுடன் மாவட்ட சபை மசோதா தொடர்பாக மக்கள் கலந்தாலோசிக்க கால அவகாசம் அளிக்க வேண்டுமென அரசை கோரியது.

இக்காலகட்டத்தில் அரசுடன் இணைந்திருந்த தமிழரசுக்கட்சியினர் இவ்விரு மசோதாவிற்கும் ஆதரவளித்தனர். இவ்விரு மசோதாக்களின் பின்னர் அரசு துறைமுகங்களை தேசிய மயமாக்க முயன்ற வேளை அதனைக் கண்டித்து தமிழரசுக் கட்சியினர் அரசியலிருந்து விலகினர். இந்நடவடிக்கையை அரசியல் நாடகமென இ. தி. மு. க வர்ணித்ததுடன் தமிழ் மக்களின் நலன்களின் பால் உண்மையான அக்கறை இருந்தால் மாவட்ட சபை மசோதா கைவிடப்பட்டமை மற்றும் இந்திய வம்சாவளி தமிழ் மக்களுக்கு ஊறு விளைவிக்கும் ஸ்ரீமா சாஸ்திரி ஒப்பந்தர் அமுல்படுத்தல் சட்டம் கொண்டு வரப்பட்டமை என்பனவற்றிற்கு எதிர்ப்பினை காட்டி அரசினை விட்டு ஏன் வெளியேற வில்லையென கேள்வியெழுப்பியது.

Expressing its surprise at the official statement issued by the F. P. leadership on the causes of the pull out Mr. Ilancheliyan claims that the Fort Fredrick and the Port nationalisation issuses were insignificant reasons for the FP's act which he describes as a political manoeuvre and election stant to retain their parlimentary seats.

If the F.P had been genuinely sincere asks Mr. Ilancheliyan what dettered them quiting the government.

*When regulations under the Srima Shastri pact were passed by which 5 1/2 lacks of up country tamils are to repartriated?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*When the DC bill was dropped?

*When the "Indentity Cardbill" A piece of nazi legislation was passed?

*When public servants were on the verge of lossing their jobs on account non-preficiency in Sinhala (37)

இவ்வாறு தமிழரசுக் கட்சியின் செயற்பாடுகளுக்கு எதிராகக் குரலெழுப்பியது. இ. தி. மு. க 1968 அக்டோபர் 14ம் திகதி திரு. சி. என். அண்ணாத்துரை அவர்களின் பிறந்த தின விழாவை கொழும்பு விவேகானந்தா வித்தியாலத்தில் நடாத்தியது. இக்கூட்டத்திற்கு தமிழகத்தைச் சார்ந்த தி. மு. க உறுப்பினரும் தி. மு.க இளைஞர் கழகத் தலைவருமான ஜனார்தனை வரவழைத்தது. இவ் விழாவில் உரையாற்றியவர்கள் ஸ்ரீமா சாஸ்திரி ஒப்பந்தத்தையே விமர்சித்தனர். மேலும் மலைநாட்டில் வாழும் தோட்டத் தொழிலாளர்களுக்கே மலைநாடு சொந்தமெனக் கூறினர் இவ்வுரைகள் சிங்கள பத்திரிகைகளில் திரிபுபடுத்தி பிரசுரிக்கப்பட்டது. ஆரம்ப முதலே இ. தி. மு. க ஓர் இனவாத இயக்கமெனவும் அது தடை செய்யப்பட வேண்டுமெனும் கருத்தினை முன்வைத்த இலங்கை கம்யுனிஸ்ட் (மாஸ்கோபிரிவு) நாளிதழான எத்த (உண்மை) பின்வருமாறு, செய்தியை திரிப்புப்படுத்தி தலைப்பு செய்தியாக வெளியிட்டது.

**මෙහිම ඉදලා රට අල්ලමු ලංකා ඉන්දියානුවන්ට**
**කලාගම් නායකයා කියයි.**

සිරිමා ශාස්ත්‍රී ගිවිසුම් අනුව ආපසු යැවීමට නියමිත ඉන්දියානුවන් ඉන් වලක්වා ලංකාවේ ද්‍රවිඩ මුන්නේත්‍ර කලාගම් පක්ෂය වර්ධනය කොට දකුණු ඉංදියාවත් උතුරු ලංකාවත් ඒකාබද්ධ කොට ද්‍රවිඩ රාජ්‍යයක් ගොඩ නැංවීම සඳහා ගෙනයන තුමන්ත්‍රණය හෙළිවෙයි.

ඉන්දියාවේ ද්‍රවිඩ මුන්නේත්‍ර කලාගම් පක්ෂයේ නායක මදුරාසි මහ ඇමැති සී.ඇන්.අන්නදොරෙ මහතාගේ හැට වෙනි ජන්මෝත්සවය ලංකාවේ සැමරීම මුවාවෙන් ලංකාවට පැමිණ සිටින අන්නදොරේගෙ නියෝජිතයන් පිරිසක් ඒ සඳහා සංවිධාන කටයුතුකරගෙනයයි. පසුගිය ද පැවැති ඒක්රැස්වීමක් අමතා කථා කළ ඉන්දියාවේ ද්‍රවිඩ මුන්නේත්‍ර කලාගම් පක්ෂයේ තරුණ සංවිධාන නායක ජනාතනන් නැමැත්තා මෙසේ ප්‍රකාශ කළේය.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

සිරිමා ශාස්ත්‍රී ගිවිසුම අනුව ඉන්දියාවේ පුරවැසිකම ලබා ඉන්දියාවට යාමට බලාපොරොත්තු වන ලංකාවේ ද්‍රවිඩ ජනතාව එසේ කිරීමට පෙර තව වරක් ඒ ගැන සිතා බැලිය යුතුයි.

සිරිමා ශාස්ත්‍රී ගිවිසුම වැනි ගිවිසුමක් අනුව පුරවැසිකම් දෙනු ලැබු බුරුමයේ සිටි ද්‍රවිඩ ජනතාව අද ඉන්දියාවට පැමිණ ජිවත් වීම සඳහා දුහදුක් විදිති. ඉන්දියාවේ නැගෙනහිර වෙරලාසන්නයේ බිම් ප්‍රදේශ වල ඔවුන් පදිංචි කරවා ඇති අතර ඔවුන් ජිවත් වනවාට වඩා මැරෙති. මේ නිසා ඉංදියාවේ පදිංචි වීමට යාමට ප්‍රථම කිප දෙනෙකු හෝ ඉන්දියාවට ගොස් ඉන්දියාණු පුරවැසිකම් ලැබු බුරුම ද්‍රවිඩ ජනයාගේ දුක් ගැහැට සියැසින් බලා ඉන්පසු තීරණය කරණ ලෙස ඉල්ලමි.

ද්‍රවිඩ රාජ්‍යයක් සඳහා ඉන්දියාවේ සටන් කරන තමනට ඉන්දියාවේදි පහර ගැසීමට පුවත්පත් කටයුතු කරන්නාක් මෙන් ලංකාවේ ඇත්ත නැමැති පුවත්පත කටයුතු කරනබැවි තේරුම් ගෙන ඊට පිළිතුරු දිමට සුදනම් විය යුතුයැයිද මොහු මෙහිදි පැවසිය.

ද්‍රවිඩ රාජ්‍යයක් සඳහා සටන් කරන්නන්ගේ සති පතා පුවත්පත වන "තමිල් උලගම්" කතෘ නඩරාජ් නැමැත්තා කථා කරමින් ලංකාවේ දේශපාලන නායකයින්ට ද්‍රවිඩ ජනතා අයිතින් රැකිමට ශක්තියක් නොමැති බවත් අවශ්‍යව ඇත්තේ අන්නාදොරේ වැනි නායකයකු බවත් ප්‍රකාශ කළේය.

ලංකාවේ ද්‍රවිඩ මුන්නේත්‍ර කලාගම් පක්ෂයේ නායක ඒ ඉලන්වෙලියන්ද කථාකළ මෙම රැස්වීම පැවැත්වුයේ කොළඹ විවේකානන්ද කන්දේ විවේකානන්ද විද්‍යාලයේදීය (38)

## இங்கிருந்தே நாட்டை பிடிப்போம்.

### இலங்கை இந்தியர்களுக்கு கழகத்தலைவர் கூறுகிறார்.

ஸ்ரீமா சாஸ்திரி ஒப்பந்தத்தின்படி திருப்பி அனுப்ப வேண்டியுள்ள குறிப்பிட்ட இந்தியர்களைத் தடுத்து இலங்கை திராவிட முன்னேற்றக்கழகக் கட்சியை வளர்த்து தென்னிந்தியாவையும் வட இலங்கையையும் ஒன்றிணைத்து திராவிட இராச்சியத்தை உருவாக்குவதற்காக கொண்டு செல்லும் சதி அம்பலமாகியுள்ளது.

இந்திய திராவிட முன்னேற்றக் கழகக் கட்சியின் தலைவர் மெட்ராஸ் முதலைமச்சர் சி. என். அண்ணாத்துரை அவர்களின் அறுபதாவது பிறந்த தினத்தை கொண்டாடும் தோரணையில் இலங்கை வந்துள்ள அண்ணாத்துரையின் குழுவினர் இதற்கான அமைப்பு வேலைகளை நடாத்திச் செல்கின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அண்மையில் நடந்த கூட்டமொன்றில் உரையாற்றிய இந்திய திராவிட முன்னேற்றக் கழக கட்சியின் இளைஞர் அமைப்புத் தலைவரான ஜனார்தனன் என்பவர் இவ்வாறு கூறியுள்ளார்.

ஸ்ரீமா - சாஸ்திரி ஒப்பந்தத்தின் படி இந்திய குடியுரிமைப்பெற்று இந்தியா செல்லஎதிர்பார்க்கும் இலங்கைத் தமிழ் மக்கள் அவ்வாறு செய்வதற்கு முன் இன்னுமொருமுறை அதனைப் பற்றி நினைத்துப் பார்க்க வேண்டும்.

ஸ்ரீமா - சாஸ்திரி ஒப்பந்தத்தினைப்போல் ஒப்பந்தமொன்றின் கீழ் குடியுரிமை வழங்கப்பட்ட பர்மாவிலிருந்த தமிழ் மக்கள் இன்று இந்தியாவிற்கு வந்து பல்வேறு துன்பங்களை அனுபவிக்கின்றனர். இந்தியாவின் கிழக்கு கடற்கரையோரங்களில் இவர்கள் குடியமர்த்தப்பட்டவுடன் வாழ்வதைவிட மடிகின்றனர். இந்தியாவில் குடியமர செல்லமுன் ஒரு சிலர் இந்தியாவிற்கு சென்று இந்திய குடியுரிமை பெற்ற பர்மா தமிழ் மக்கள் படும் துன்பங்களை சொந்தக்கண்ணினால் பார்த்து அதன் பின் தீர்மானிக்கும்படி வேண்டுகிறேன்.

திராவிட நாட்டிற்காக போராடும் தமக்கு இந்தியாவில் பத்திரிகைகள் தாக்குவதைப் போல் இலங்கையின் எத்த எனும் பத்திரிகையும் செயற்படுவதை விளங்கிக்கொண்டு அதற்கு பதிலளிக்க தயாராக வேண்டுமெனவும் அவர் அங்கு கூறினார்.

திராவிட நாட்டிற்காக போராடுபவர்களின் வாரப்பத்திரிகையான தமிழ் உலகம் ஆசிரியர் நடராஜா அவர்கள் உரையாற்றுகையில் இலங்கையின் அரசியல் வயோதிபர்களுக்கு தமிழ் மக்களின் உரிமையை பாதுகாக்க சக்தியில்லையெனவும் தேவைப்படுவது அண்ணாத்துரை வீரனைப்போன்ற தலைவனாகும் எனக்கூறினார்.

இலங்கை திராவிட முன்னேற்றக்கழகக் கட்சியின் தலைவர் ஏ. இளஞ்செழியனும் பேசிய இக்கூட்டம் கொழும்பு விவேகானந்தா மேடு விவேகானந்தா வித்தியாலயத்தில் நடைபெற்றது (ஆ - ர்)

கம்யூனிஸ்ட் கட்சியின் எத்த பத்திரிகை இவ்வாறான செய்தியினை வெளியிட்டதுடன் இனவாத சக்திகளும் எதிரணிக்கட்சிகளும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இ. தி மு. க வை உடனடியாகத்தடை செய்யும்படி அரசைக் கோரினர். திரு. ஆர். ஜி. சேனாநாயக்கவின் சிங்கள மஹஜன கட்சியின் கீழ் அணிதிரண்ட இனவாத சக்திகள் தென்னிலங்கையின் பிரதான நகரங்களில் பொதுக்கூட்டங்களை நடாத்தி இ. தி. மு. க சிங்கள மக்களுக்கு எதிரானது எனும் பிரச்சாரத்தை மேற்கொண்டன.

இனவாத சக்திகளின் இப்பிரச்சாரத்திற்கு மத்தியில் தமது பிரச்சாரக் கூட்டங்களை நடாத்திய இ. தி. மு. க எதிர் வரும் பொதுத்தேர்தலில் தமது கட்சி 20 தேர்தல் தொகுதிகளில் போட்டியிடும் என அறிவித்தது. இவ்வறிவித்தல் தொடர்பாக கருத்து வெளியிட்ட டைம்ஸ் ஓப் சிலோன் ஆங்கிலப்பத்திரிகை இ. தி. மு. க வின் இச்செயற்பாடு ஐக்கிய தேசிய கட்சி, தமிழரசுக் கட்சி, தமிழ் காங்கிரஸ் மற்றும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் போன்ற கட்சிகளை விழிப்படையச் செய்துள்ளது எனக்குறிப்பிட்டது.

### D. M. K's 20 seat target causes alarm

The United national Party, TheFederal Party, Tamil Congress and the Ceylon Workers Congress are concerned about the DMK's intention to contest 20 seats at the next General election.

With the DMK's entrance into the Political scene in the Tamil speaking areas of Ceylon the influence and political power the F. P. or T. C and the CWC had in the areas has been undermined. Neither the FP nor TC is prepared to come to any arrangement with the DMK but according to DMK sources 90 percent of the depressed classes in the North and the East are backing them.

The same source said that a formidable number of registered citizens of Indian origin too are supporting the DMK and its members in the plantation areas.

Although the Ceylon Workers Congres is the most powerful organisation in the upcountry plantations, political circles feel that the DMK's concentration on the registered citizens of indian Origin might compel the CWC to review its relations with the DMK.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

If the CWC losses its influnce over about 15 seats in the plantations the UNP too will be at a disadvantage in these areas (39)

இ. தி மு. க வின் இவ்வறிவித்தல் தமிழ் கட்சிகளை மட்டுமல்லாது ஏலவே தடைசெய்யக்கோரி வந்த இனவாத அமைப்புக்களை பீதிக்குள்ளாக்கியது. இதனால் தடை செய்யும் கோரிக்கை வேகமடைந்தது. இ. தி. மு. க இவ்வறிவித்தலை விடுத்த காலகட்டத்திலேயே யாழ்ப்பாண மாவிட்டபுரம் கோயிலுக்குள் செல்ல தாழ்த்தப்பட்டோர் எனக்கூறப்படும் பிரிவினருக்கும் அனுமதியளிக்க வேண்டும் எனும் கோரிக்கை முனைப்படைந்தது.

அதேவேளை இக்காலகட்டத்தில் நடந்த கிராம சபைத் தேர்தல்களில் தாழ்த்தப்பட்டோர் போட்டியிடத்துணிந்தனர். இராலி கிராம சபைத்தேர்தலில் தாழ்த்தப்பட்டோர் எனக்கூறப்படும் பிரிவினரைச் சார்ந்த நால்வர் போட்டியிட்டமை குறிப்பிடத்தக்கது.

எவ்வாறாயினும் இ. தி. மு. க வினை தடைசெய்யும் படியான இயக்கம் தென்னிலங்கையில் வலுவடைந்தமையினால் இ. தி. மு. க வினைப்பற்றியும் அதன் நடவடிக்கைகளைப் பற்றியும் ஆராய்ந்து தடை தொடர்பாக தமது நிலைப்பாட்டை வெளியிட அரசுக்கு நேர்ந்தது. இவ்வியக்கம் தொடர்பாக தகவல்களைத் திரட்டும்படி குற்றப்புலனாய்வுத்துறைக்கு அரசு உத்தரவிட்டது. குற்றப்புலனாய்வுத்துறை இ. தி. மு. க வின் நடவடிக்கையைப்பற்றி நீண்டதொரு அறிக்கையை சமர்ப்பித்ததுடன் அவ்வறிக்கைக்கு இணங்க இ. தி. மு. க வைத் தடை செய்வதற்குரிய காரணிகள் எதுவும் இல்லையெனக் கூறியது. இவ்வறிக்கையின் பலபகுதிகள் ஆங்கில சிங்கள நாளிதழ்களில் பிரசுரிக்கப்பட்டது.

## DMK NOT SUBVERSIVE

But enquries, surveilance continue.

EXHAUSTIVE, investigations into the activities of Ceylon's nineteen (19) year-old Dravida Munnetra Kazagam (DMK) have thrown up no evidence to justify the organisation's Proscription, the "Daily News" understands.

In recent months, the opposition has urged at political meetings that the



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

DMK be proscribed on the grounds that it is a subversive organisation with foreign connections.

Official surveillance over the DMK, which considerably predates the recent oppositions campaign has shown conclusively that both communist parties (moscow and peking) have more tangible connections with foreign. agencies than the DMK

Ceylon's DMK has not indulged in subversive or treasonable activity.

"The DMK'S political potency, right now, is no greater than that of the SMP" an official source cracked last week. It was explained, however, that this did not mean that there would be any weakening or curtailment of continuing surveillance over the DMK'S activity. Infact, the record clearly shows the "Daily News" understands, that such surveillance has been intensified since 1965.

## LEADER WAS SLY ENTRANT.

As a result of this surveillance, it was found that a DMK leader was a sneak entrant with no legal. basis whatsover for remaining in this counry. The illicit immigrant was on February 19 last year was held at the Detention camp Slave-Island, and subsequenly deported.

Surveillance has also shown that DMK leaders in India have consistently urged their counterparts here to remains, steadfastly loyal to ceylon.

(1) In July 1967. a group of DMK reprsentatives from India told a welcoming party at the Ratmalana airport that they had brought this very special massage to DMK Folk in ceylon from Tamilnad's bossman C.N Annadurai.

By race and language we all are Tamil. but by country we are separated. Every Tamil must have this in mind and be loyal to the country in which us live.

The DMK group was led by a member of the Indian Legislative Assembly Mr. C. P. Sitarasu and included the Secretary of the Madras. DMK Mr V.G RAJENDRAN.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(2) Some months ago, when the D.M.K was feting A.P.Janarthanam, President of the Tamil student movement in South india, at the Hasthagiri Hotel, Dam street, Pettah, it was pointedly said that the Ceylon DMK had no Link with the DMK in South india.

In addition the local DMK has resolved that membership of the DMK should be open only to " people who are born in the Island and who have voting rights" and that "illicit immigrants and state less persons" are specifically excluded from membership.

It has also been noted that the DMK was strongly opposed to the district council Bill. At a special DMK committee meeting called to discuss the various issues arising from the bill in may last year it was unanimously agreed that district Councils as contemplated would not solve the probelms of ceylon's minoritees. It was also emphatically resolved that the DMK would support decentralisation of goverment power only under a democratic socilist set up.

## What are the links ?

What connection are there between the Ceylon DMK and South Indian organisation with the same initials? Is the SouthIndian body clearly separatist in tendency within india itself the "parent" or "overlord" of the Ceylon's group? This is what the record shows:-

* Ceylon DMK was formed some years after the Indian DMK had established itself with the aim of setting up a separate Dravidian state in the South India.

* The UNP Government o f the time (Prime Minister Mr. Dudley Senanayake) did not issue visas to Indian DMK invitees expected to address the inaugural meeting of Ceylon DMK in 1952.

* Ceylon's DMK has gone through a series "splinterings" and "reunification" at one point co-operating with ceylon's Fedreal party and subssequently opposing it even at the kalmunai by election.

* On several occasions DMK invitees from India have toured Ceylon as guest of Ceylon's DMK. Nearly all such visitors have enjoined the local DMK to preseve



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

manifestly its loyality to Ceylon. Among the non DMK Ceylonese with whom these Indian visitors have made contact are Dr. N. M. perera, Messrs S. J. V. Chelvanayakam, G.G. Ponnambalam, A. Aziz and S. Thondaman.

* Local DMK groups have commemorated South Indian events for example, Mr. Annadurai's death was mourned at meeting in Hali-Ela, Colombo, Trincomalee, Karainagar, Nelliady, Manner and Kayts.

* On at least two occasion's DMK men from south India on personal visits to Ceylon, have refused to Participate in meeting, and rallies of Ceylon's DMK.

# Aims of Ceylon DMK

Ceylon's DMK currently functions under a policy adopted at a meeting held in november 1964 at the red Cross Socity Hall interalea that policy listed the following main aims:-

1. To safeguard and foster the right and welfare of all those Dravidians (Tamil speaking people) who have made Ceylon their motherland is the paramount object of the Ceylon DMK.

2. To restore the lost rights which the Ceylon Dravidians who have been made second class citizens in their own Motherland cherished for a good number of years; to ensure that equal opportunities are afforded to them in all spheres and to bring together the Tamil speaking people under one fold and front withuot any religious distinction's and discriminations.

3. To alter the state of affairs which had pervented the up-country Dravidian workers who had been brought to Ceylon 140 years ago, to make lanka a fertile country and who have played the major role in Ceylon's economy from generation to generation and who have been toiling for the prosperity and wealth of this country. from enjoying equal status and equal rights with the rest of the population and to ensure that they achieve citizenship and voting rights.

4. To fight with might to enthrone the Tamil Language as the national and



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

state Language of the Dravidian nationals (Tamil nationals) who constitute the second largest nationality in ceylon.

The DMK has some 6,000 members, with active branches in Colombo, Badulla, Ratnapura, Kalawana, Point Pedro, Hatton, Trincomalee, Matale, Mannar, and Udupiddy.

It hold its annual convention in the Jaffna Town Hall on April 23 and 24 Key note resolutions at that Convention will demand.

1. A rightful place for the Tamil language in the Country.

2. Collaboration between the DMK and other parties in Ceylon which agree to the Tamil Language being given its rightful place in Ceylon

The DMK's headqurarters are at 1st Cross Street, Pettah(40)

புலனாய்வுத்துறையின் அறிக்கை இ. தி. மு. க வினை தடை செய்வதற்கான ஆதாரங்கள் இல்லையெனக் கூறிய போதிலும் இ. தி. மு. க வினை தடைசெய்யக் கோரிய சக்திகள் தமது செயற்பாட்டினை வேகப்படுத்தின. இக்காலக் கட்டத்தில் லேக்ஹவுஸ் பத்திரிகை நிறுவனம் அரசுக்கு சார்பான நிலைப்பாட்டினைக் கொண்டிருந்தமையினால் இ. தி. மு. க வை தடைசெய்யக்கோரி அரசுக்கு எதிராக எழும் எதிர்ப்பலையை தணிக்கும் வகையில் இ. தி. மு. க வினைப் பற்றிய முழுவிபரங்களை சிங்கள மக்களுக்கு அறியத்தரும் வகையில் இ. தி. மு. க பொதுச்செயலாளரைப் பேட்டிகண்டு சிங்கள, ஆங்கில நாளிதழ்களில் வெளியிட்டது. ஆயினும் இவ்வெதிர்ப்பியக்கத்திற்கு பௌத்த பிக்குமாரும் ஆதரவளித்தமையினால் பிரதமர் தம்மால் ஏன் இ. தி. மு. க வை தடைசெய்யமுடியாது என்பதனை பகிரங்கமாக கூறநேர்ந்தது. பண்டாரகம என்னும் இடத்தில் நடந்த பொதுக் கூட்டமொன்றில் உரையாற்றிய பிரதமர் திரு. டட்லி சேனாநாயக்க பின்வருமாறு கூற நேர்ந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Premier " why I can't ban the DMK" Although the press and certain Local Government bodies are carrying out a big campaign against Dravida Munnetra Kasagam Party, requesting me to ban that Party, under the constitution, I have no power vested in me to ban any Political Party

The prime minister added that he did not approve of the Idea that he should declare an emergency, merly for reasons of banning the D. M. K (41)

உத்தியோகப் பூர்வமாக அரசியல் நடவடிக்கையில் ஈடுபட்ட இ. தி. மு. க யாழ் மாவட்டத்தின் நான்காவது மாநில மாநாட்டை 18-9-69 அன்று நடாத்தியதுடன் அன்றையதினம் யாழ்முற்றவெளி மைதானத்தில் பொதுக்கூட்டமொன்றினையும் நடாத்தியது. இப்பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய திரு. ஏ. இளஞ்செழியனின் உரை முழுநாட்டினையும் பரபரப்பிற்குள்ளாக்கியது. அன்றைய தினம் நடாத்தப்பட்ட பொதுக்குழுக் கூட்டம் தொடர்பாக ஈழநாடு பத்திரிகை பின்வருமாறு செய்தியினை வெளியிட்டது.




Daily Mirror 11- 06 - 1969



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தேசத்துரோகத் திட்டம் எதுவும் கிடையாது
# இ. தி. மு. க அறிவிப்பு

இலங்கையை தமிழகத்தின் ஒரு குடியேற்ற நாடாக்கும் தேசத்துரோகத் திட்டமோ, இலட்சியமோ, கொள்கையோ, எண்ணமோ, இலங்கைத் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு கிடையாது. இலங்கைத் திராவிட முன்னேற்றக்கழகத்திற்கும் தமிழக திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும்' கலாச்சார தொடர்பு மட்டுமே உண்டு. வேறு எவ்வித தொடர்பும் இல்லை.

இவ்வாறு இலங்கைத் திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு தீர்மானத்தின் மூலம் அறிவித்திருக்கின்றது.

வடக்கு கிழக்கு மாகாணங்களிலும், மலை நாட்டிலும் அடுத்த பொதுத்தேர்தலில் இலங்கைத் திராவிட முன்னேற்றக்கழகம் போட்டியிடும் யாழ்ப்பாண நகர மண்டபத்தில் நேற்றுக் காலை நடந்த இலங்கைத் திராவிட முன்னேற்றக்கழக பொதுக்குழுக் கூட்டத்தில் சுமார் 3 மணி நேர ஆலோசனையின் பின் மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது. பொதுத்தேர்தலில் போட்டியிடும் சாதக பாதகங்களைப்பற்றி உறுப்பினர்கள் தங்கள் கருத்தை தெரிவித்தனர். திரு. ஏ. இளஞ்செழியன் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்திற்கு உறுப்பினர்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டிருந்தனர். இக்கூட்டத்தில் கீழ் கண்ட தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

தமிழினம் இழந்த உரிமைகளை மீண்டும் பெறவும், நிலைநாட்டவும், முன்னேற்றம், பெருவாழ்வு, சமத்துவம், சமாதானம், ஆகியவைகளை ஏற்படுத்தவும் வகைசெய்யவும் ஓர் உண்மை சமதர்மக்குடியாட்சியை உருவாக்கவும் இ. தி. மு. க வின் தலைமையில் திரண்டெழுமாறு ஈழம் வாழ் தமிழ் இனத்தை இப்பொதுக்குழு வேண்டுகிறது.

பேராதனைப் பல்கலைக்கழகம் போன்ற நிறைவான ஓர் பல்கலைக்கழகத்தை தமிழ் மக்கள் வாழும் பிரேதசத்தில் ஏற்படுத்த வேண்டுமென இ. தி. மு. க ஆட்சியாளரை வேண்டுகிறது.

நாட்டில் நாளுக்கு நாள் பெருகிவரும் வேலையில்லாமையும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வேலையில் பின்தங்கிய நிலையும் நாம் அவதானிக்காத தொன்றல்ல. ஆயிரக்கணக்கான பட்டதாரிகள் குறிப்பாக தமிழ்ப் பட்டதாரிகள் வேலைவாய்ப்பின்றி வேலையில் பின்தங்கிய நிலையிலும் உள்ளார்கள் என்பதை நாம் வேதனையுடன் காண்கிறோம். ஆகவே இப்பட்டதாரிகளுக்கு பூரண வேலை வாய்ப்பளிக்கக் கூடிய, உடனடியாக வேண்டிய நடவடிக்கைகளை ஆட்சியாளர் மேற்கொண்டு இவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென இ. தி. மு. க கோருகிறது. மற்றும் பலதீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.(42)

If the Tamils in Ceylon wanted to win back their lost right they should reject the Federal Party. The Tamil Congress and the Ceylon workers Congress and rally round Ceylon D. M. K. This is the gist of a resolution passed at fourth annual sessions of the Ceylon D. M. K which opened here on Wednesday at the town hall.

At a meeting of the General Council held behind closed doors this morning the FP. TC and the C. W. C came under heavy fire........

Another resolution calling upon the sinhala masses to turn deaf ear to those "champions of communalism" and to adopt the path of love show by to the lord Buddha was also passed"-(43)

இச்செய்திகளுடன் மாலை நடந்த பொதுக் கூட்டத்தில் திரு. ஏ. இளஞ்செழியன் ஆற்றிய உரை திரிபுபடுத்தப்பட்டு ஆங்கில சிங்கள நாளிதழ்களில் வெளியிடப்பட்டது. அச்செய்தி நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. கூட்டத்தில் பேசிய திரு. இளஞ்செழியன் தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளை சாத்வீகப்போராட்டம் மூலம் பெற முடியாவிடின், புரட்சி ஒன்றினை ஏற்படுத்துவதன் மூலம் பெறவிரும்பின் தமிழ் மக்கள் கெரில்லா யுத்தமொன்றிற்கு தம்மை தயார்படுத்திக் கொள்ள வேண்டுமெனக் கூறினார். தற்கொலைப்படை அமைத்தல், பொலீஸ் நிலையங்களைத் தகர்த்தல், ஆயுதப் பயிற்சி முகாம் அமைத்தல், வேண்டுமெனவும் ஆயினும் அதற்கான தேவை தற்போது இல்லை எனவும் தமதுரையில் கூறினார். தமிழ் அமைப்புகளைப் பொறுத்தமட்டில் இ. தி. மு. க வின் இப்புதிய நிலைப்பாடு திகிலூட்டியதுடன் சிங்கள அமைப்புகளை சினங்கொள்ளச் செய்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**DMK Bosses plan 'revolution' here**

The local DMK men adopting a militant line are planning a ' revolution' that would. ensure equal rights to the Tamils. The party men were addressing the final day rally of the two-day D. M. K s. foruth annual convention at fort ground Jaffna.

The rally was held after a procession carrying black flages.

The D. M. K general Secretary Mr. A. ILeancheliyan lashed at the Federal Party., Tamil Congress and the Thondaman and Aziz led trade unions on the hill country as sold the rights of the Tamils. He said "we are now working for a revolution in the country which will teach the rest, of the nation that we Tamils are not second grade" "We will set up a suicide corps that will plunge at the first signal into attack. We will smuggle in arms and ammunitions and we will raid the police stations in this country.

These measures, be added are however the last resorts. "We want to be recognised as a fully- fledged political party and we want to be taken in for negotiations. But as long as men like R.G Senanayake go on threatening us, telling the Sinhala people that granting recognition to the rights of the Tamil is an act of charity. We will not depend on negotiation. (44)

திரு. ஏ. இளஞ்செழியன் தற்போதைய நிலையில் கெரில்லா யுத்தமொன்றினை மேற்கொள்வதற்கான தேவையில்லையென்பதை பெரிதுபடுத்தி பத்திரிகைகள் வெளியிடாமல் பொலிஸ் நிலையங்களைத் தகர்க்க வேண்டும். முதலான விடயங்களுக்கு முக்கியத்துவம் அளித்தமையினால் நாட்டில் பதற்ற நிலைமை உருவாகியது. தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி.ஜி. பொன்னம்பலம் உட்பட பல தமிழ்த்தலைவர்கள் திரு. இளஞ்செழியன் உரையை கண்டித்து அறிக்கைவிட்டனர். சிங்கள அமைப்புகள் இ.தி.மு.க. வை தடைசெய்து அதன் தலைவரை நாடுகடத்தும்படி கோரியதுடன், ஆங்கில சிங்கள நாளிதழ்களும் தமது தலையங்கங்களில் இ. தி. மு. க. தொடர்பாக நடவடிக்கையெடுக்க வேண்டுமெனக்கோரின.

சிங்கள அமைப்புகளும் பிக்குகள் அமைப்புகளும் மற்றும் சிங்கள புத்திஜீவிகளும் இணைந்து மாபெரும் பொதுக்கூட்டமொன்றினை கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நடாத்தின. பின்னால் இலங்கையின் பிரதம



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நீதியசராகப் பதவியேற்ற திரு. ஹேமா பஸநாயக்கவின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. Ban the DMK immediatly
2. Ban all film, books, pereodicals and other DMK propa ganda meterials.
3. Keep a close watch on DMK activities in all places and maintain suitable records.
4. Weedout every anti sinhala organisation in the country.
5. Formulate a "Sinhala only policy" and follow it to the letter.
6. Draft a second Electoral Register for Indian Tamils.
7. Prevent any Ceylonese helping any "traitarous organisation" like the DMK
8. Cancel the citizenship of any person holding ceylon citizenship by Reg istration if he is found giving financial or other assitance to the DMK to propagate it's activities.
9. Punish the DMK spokesman who had advacated using "guerilla and revolutionary tactics as a means to usurp power."
10. Form organisations to help the police safeguard the country by combating. DMK activicies-(44)

இ. தி. மு. க பொதுச் செயலாளர் திரு. ஏ. இளஞ்செழியனின் இவ்வுரை எந்தளவு தாக்கத்தை ஏற்படுத்தியதெனில் தலையங்கம் எழுதிய ஒரு சில ஆங்கிலப்பத்திரிகைகள் சிறுபான்மையினர் பெரும் பாகுபாடுகளை சந்தித்துள்ளனர் எனப்பகிரங்கமாகக் கூறநேர்ந்தது. திரு. ஏ. இளஞ்செழியனின் உரை தொடர்பாக தலையங்கம் எழுதிய சிலோன் டெய்லி மிரர் திரு. ஏ. இளஞ்செழியனின் உரை சினமூட்டும் தன்மையை கொண்டது எனக்கூறியதுடன், சிறுபான்மையினர் பாகுபாடுகளுக்கு முகம் கொடுத்துள்ளனர் எனக்குறிப்பிட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

While we maintain the minorities are a discriminated lot we equally categorically assert that militant and hostile antics of the DMK are injurious to national unity and shoud be slapped down at all costly.

If the leaders are guilty of inflaming communal passions, thay should be meted out the severest punishment reserved for rabble rousers and jingoistic racists-(45)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இச்சம்பவத்தின் பின்னர் திரு. ஏ. இளஞ்செழியன் உட்பட இ. தி. மு. க வின் முன்னணி உறுப்பினர்கள் குற்றப்புலனாய்வுத் துறையினரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர். திரு.ஏ. இளஞ்செழியன் இந்தியப்பிரஜை என்றும் இலங்கையின் வடபகுதியை தமிழ் நாட்டுடன் இணைப்பதற்காக இந்திய நாம் தமிழர் இயக்கத்தினால் அனுப்பப்பட்டவர் என இனவாத சக்திகள் கூறின. இவரை நாடு கடத்துவதற்கான வாய்ப்பிருக்கின்றதா என அறியும் வகையில் கள்ளக் குடிகள் தொடர்பாக தகவல் கொடுக்கும் சங்கத்தைச் சார்ந்த உத்தியோகத்தர்கள் குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தை நாடி திரு. ஏ. இளஞ்செழியன் இந்தியாவிலிருந்து வந்ததிற்கான ஆதாரங்களை தேடலாயினர். எனினும் திரு. ஏ. இளஞ்செழியனின் ஆவணங்கள் திணைக்களத்தில் காணப்படவில்லை.

இச் செய்தியினை அறிந்துகொண்ட எத்த பத்திரிகை தமது பிரதான தலைப்புச் செய்தியாக பின்வரும் செய்தியை வெளியிட்டது.

### ඉලන්චෙලියන්ගේ තොරතුරු හංගලා

ද්‍රවිඩ මුන්නේත්‍ර  කසාගම් නැමැති දෙමළ ජාතිවාදී පක්ෂයේ නායක ඒ ඉලන්චෙලියන් මහතා පිළිබඳ විස්තර තොරතුරු ඇතුලත් ලිපිගොනු ආගමන හා විගමන දෙපාර්තමේන්තුවෙන් අභිරහස් ලෙස අතුරුදහන් වී ඇත.

ඉලන්චෙලියන් මහතාගේ වතගොත සොයා බැලීම සඳහා ආගමන හා විගමන දෙපාර්තමේන්තුවට හොර වැසි ඔත්තු සපයන්නන්ගේ සංගමයේ නිලධාරින්ට එම දෙපාර්තමේන්තුවේ උසස් නිලධාරියෙකු විසින් මේ බව අනාවරණය කර ඇත.

ඉලන්චේලියන් නමින් මොහු දැන් ලංකාවේ පෙනී සිටියත් මොහුගේ නියම නම කුමාර වේල් බව සොයාගත හැකි වී තිබේ.

ඉලන්චේලියන් හා කුමාරවේල් යන නම් දෙකටම ආගමන විගමන දෙපාර්තමේන්තුවේ තිබුණ ලිපිගොනු සියල්ලම අතුරු දහන් වීම ගැන හොර වැසි ඔත්තු සංවිධානයේ නිලධාරීහු එම  දෙපාර්තමේන්තු නිළධාරින්ට සිය අප්‍රසාදය පළකර ඇත.

දැනට ඉලන්චේලියන් නමින් පෙනී සිටින මොහු 1952 ඔක්තෝබර් 14 වැනිද සෙක් කුමාරවේල් නමින් ලංකාවේ පදිංචිවී සිටි බවත් ඔහු දකුණු ඉන්දියාවේ රාමනාද් දිස්ත්‍රික්කයේ කොමර් ප්‍රදේශයේ උපන් අයෙකු බවත් සොයා ගෙන ඇත. යළිත් වරක් ලංකාවට පැමිණීමෙන් පසුව ඔහු ඉලන්චේලියන් යන නමින් පෙනී සිටි බවත් අනාවරණය වී තිබේ.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

" අපි දෙමළ" සංවිධානය පිටුපස සිට ඔවුන්ට ආධාර උපකාර කරන ජාතිවාදි සංවිධාන හා පුද්ගලයන් ගැන සොයා බැලීමට රහස් පොලිසියේ විශේෂ කණ්ඩායමක් යොදවා ඇත.

ගොරිල්ලා සටන් ක්‍රම හා අවි ආයුධ ගැන පුහුණුව දෙමින් වතු කම්කරු හා වෙනත් " අපි දෙමළ" සාමාජිකයන්ට ලංකාවේ ජාතිවාදි විප්ලවයක් කිරීමේ අනුබල දක්වන අය කෙරෙහිද විශේෂයෙන් සොයාබැලීමට මෙම සංවිධානය අදහස් කර ඇති බව දැනගන්නට ඇත.

මෙම ව්‍යාපාරය මෙහෙය වන පුද්ගලයින් නැවති සිටින තැන් හා ගමන් බිමන් පිළිබඳවද සැලකිල්ලක් දැක්වීමට හා පරීක්ෂණ පැවැත්වීම මෙම කණ්ඩායමට පැවරී ඇති විශේෂ වගකීමක් වෙයි.

මේ අතර ඉලන්චෙලියන් නැමැත්තා පසුගිය ද යාපනයේදී කල ජාතිවාදී ප්‍රකාශය සම්බන්ධයෙන් රහස් පොලිසියේ විශේෂ අංශයේ නිළධාරිහු පෙරේද ඔහුගෙන් පැය පහක් තිස්සේ ප්‍රශ්න කළහ.

උඩරට දෙමල ජනතාවට නිදහස ලබා ගැනීම සඳහා  ද්‍රවිඩ මුන්නේත්‍ර කසාගම් ගෙන යන ව්‍යාපාරයට සිංහලයින් විරුද්ධ වුවහොත් මුළු උඩරටම විනාශ කර දමන බව ඉලන්චේලියන් මහතා ප්‍රකාශ කර ඇති අතර එම සම්පූර්ණ ප්‍රකාශය ඉකුත් 22 දින " ඇත්ත " ප්‍රධාන පුවතින් අනාවරණය කරන ලදී.

උඩරට ද්‍රවිඩ ජනතාව ජාතිවාදී කලහලයකට පෙළඹවීමට ද්‍රවිඩ මුන්නේත්‍රම් කසාගම් පක්ෂය රහස් ව්‍යාපාර ගෙන යන බවට රහස් පොලිසියට තොරතුරු ලැබී ඇති අතර රහස් පොලිසිය එම පක්ෂ නායකයින්ගෙන් ප්‍රශ්න කිරීමට පෙළඹී ඇත්තේ  ඉන් පසුවය.

රහස් පොලිසියේ විශේෂ අංශය ද්‍රවිඩ මුන්නේත්‍ර කසාගම් පක්ෂයේ අනෙකුත් නායකයින්ගෙන්ද මෙ සම්බන්ධයෙන් ප්‍රශ්න කරනු ඇත.

පිටකොටුවේ දෙවන හරස් විදියේ ඉලන්චේලියන් නැවති සිටින ස්ථානය සම්පූර්ණයෙන්ම " අපි දෙමළ" ව්‍යාපාරය මෙහෙයවීමේ මූලික ස්ථානය වී ඇත.

රෑ දහවල් දෙකේම මෙම ස්ථානය රජයේ දෙපාර්තමේන්තුවල විශ්ව විද්‍යාලයේ හා වතුවල සේවය කරන නොයෙකුත් තරාතිරමේ ද්‍රවිඩ පුද්ගලයින්ගෙන් පිරීපවතී. එ එ හැම අංශයකම ද්‍රවිඩ මුන්නේත්‍ර කසාගම් ව්‍යාපාරය පතුරුවා හැර තම බලය තහවුරු කරවීම පිණිස මෙම පුද්ගලයන්ට මෙහිදී උපදෙස් ලැබෙන බවද දැනගන්නට ඇත.

මේ අතර " අපි දෙමළ" සංවිධානයේ සංවිධානය හා සැලැස්ම සම්පූර්ණයෙන්ම භාරගෙන සිටින ඇම්.පී.භාරති නමැත්තෙක්ද මේ දිනවල කාර්වලින් එහා මෙහා යමින් නිතරම ඉලන්චේලියන් සිටින ස්ථානයට නොයෙකුත් පුද්ගලයන් රැගෙන එමින් නැවත ඇරලවමින් විශාල වෙහෙසක් දරන බවද පෙනෙන්නට ඇත. භාරති නැමැති මොහු එත්තරා ප්‍රසිද්ධ වෙලඳ ව්‍යාපාරිකයෙකුගේ පුද්ගලික ලේකම් වශයෙන්ද කටයුතු කරන අතර මොවුන්ගේ මෙම ජාතිවාදී ව්‍යාපාරයට වතු කම්කරුවන් වෙනුවෙන් පිහිටුවා ඇති එක්තරා ප්‍රධාන පෙළේ වෘත්තිය සමිතියක්ද පිටුපසින් සිට උදව් උපකාර කරන බවද දැනගන්නට ඇත.(46)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இளஞ்செழியனின் விபரங்கள் மறைக்கப்பட்டுள்ளன.

திராவிட முன்னேற்றக் கழகம் என்னும் தமிழ் இனவாதக்கட்சியின் தலைவர் ஏ. இளஞ்செழியன் அவர்களைப்பற்றிய விபரங்களடங்கிய கோவை குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தில் மர்மமாக காணமற்போயுள்ளது.

இளஞ்செழியன் அவர்களின் பின்னணியை ஆராய்வதற்காக குடிவரவு, குடியகல்வு திணைக்களத்திற்குச் சென்ற கள்ள பிரஜைகள் தொடர்பாக தகவல் கொடுக்கும் சங்கத்தின் அதிகாரிகளுக்கு அத்திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவரினால் இதுபற்றி கூறப்பட்டுள்ளது. இளஞ்செழியன் என்ற பெயரில் இவர் தற்போது இலங்கையில் இருந்த போதிலும் அவரது உண்மையான பெயர் குமாரவேல் என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இளஞ்செழியன் மற்றும் குமாரவேல் என்ற இரு பெயருக்கும் குடிவரவு, குடியகல்வு திணைக்களத்திலிருந்த கோவைகள் அனைத்தும் காணாமற் போயுள்ளமையையிட்டு கள்ளப் பிரஜைகளைப் பற்றி தகவல் கொடுக்கும் சங்கத்தின் அதிகாரிகள் தமது அதிருப்தியை தெரிவித்துள்ளனர்.

தற்போது இளஞ்செழியன் என்றபெயரில் இருக்கும் இவர் 1952 ஒக்டோபர் 14ம் திகதி வரை குமாரவேல் என்ற பெயரில் இலங்கையில் இருந்ததுடன் அவர் தென்னிந்திய ராமனாதபுரம் மாவட்டத்தின் கொமர் பிரதேசத்தில் பிறந்தவர் எனவும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. மீண்டும் இலங்கைக்கு வந்தப்பின் இளஞ்செழியன் என்ற பெயரில் இருப்பது தெரியவந்துள்ளது.

நாம் தமிழர் அமைப்பின் பின்னால் இருந்து அவர்களுக்கு உதவியளிக்கும் இனவாத அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் பற்றி ஆராய்வதற்காக இரகசிய பொலீஸ் விஷேச குழுவொன்றை நியமித்துள்ளது.

கெரில்லா போராட்டமுறை மற்றும் ஆயுதப் பயிற்சியளித்து தோட்டத் தொழிலாளர் மற்றும் ஏனைய நாம் தமிழர் உறுப்பினர்களுக்கு இலங்கையில் இனவாத புரட்சியை செய்வதற்கு உதவியளிப்போர் பற்றி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆராய இக்குழு கருதியுள்ளதாகத் தெரிய வருகின்றது. இவ்வியக்கத்தை வழிநடத்தும் நபர்கள் தங்கியிருக்கும் இடம் மற்றும் போக்குவரத்து பற்றியும் கருத்திற் கொள்வதற்கும் மற்றும் விசாரணை நடாத்துவதற்கும் இக்குழுவிற்கு அளிக்கப்பட்டுள்ள விஷேட பொறுப்பாகும்

இதற்கிடையில் இளஞ்செழியன் என்பவர் கடந்த தினம் யாழ்ப்பாணத்தில் ஆற்றிய இனவாத உரையைப் பற்றியும் இரகசிய பொலீசின் விஷேட பிரிவின் அதிகாரிகள் நேற்றுமுன்தினம் அவரை ஐந்து மணித்தியாலங்கள் விசாரணைக்குட்படுத்தியுள்ளனர்.

மேல்நாட்டுத்தமிழ் மக்களை இனவாத கலகத்திற்கு தூண்டுவதற்கு திராவிட முன்னேற்றக் கழகம் இரகசிய இயக்கத்தை நடாத்தி செல்வதாக இரகசிய பொலீசுக்கு தகவல் கிடைத்துள்ளதுடன் இதன் பின்னரே அக்கட்சியின் தலைவர்களை இரகசிய பொலீஸ் விசாரிக்க நேர்ந்துள்ளது.

இரகசிய பொலீஸின் விஷேட பிரிவு திராவிடர் முன்னேற்ற கழகம் கட்சியின் ஏனைய தலைவர்களிடமும் இது தொடர்பாக விசாரிக்கும். புறக்கோட்டை இரண்டாம் குறுக்குத்தெருவில் இளஞ்செழியன் தங்கியிருக்குமிடம் முழுமையாக நாம் தமிழர் இயக்கம் வழிநடத்தப்படும் முதன்மையான இடமாகவுள்ளது.

இரவுபகலாக இவ்விடம் அரச திணைக்கள, பல்கலைக்கழக மற்றும் தோட்டங்களில் சேவையாற்றும் பல்வேறு தரத்திலான தமிழ் பிரஜைகளினால் நிறைந்து காணப்படுகிறது. அவ்வவ் பிரிவுகளிலும் திராவிட முன்னேற்றக்கழக இயக்கத்தை வியாபித்து தமது பலத்தை நிலைநாட்டுவதற்காக இவ் தனி நபர்களுக்கு ஆலோசனை கிடைப்பதாக தெரிய வருகின்றது.

இதற்கிடையில் நாம் தமிழர் அமைப்பின் அமைப்பு மற்றும் திட்டத்தை முழுமையாக பொறுப்பெடுத்துள்ள எம். பி. பாரதி என்பவர் இந்நாட்களில் காரில் அங்குமிங்கும் சென்று அடிக்கடி இளஞ்செழியன் இருக்கும் இடத்திற்கு பல்வேறு நபர்களை அழைத்து வந்து மீண்டும் அனுப்பிவைத்து கடுமையாக வேலை செய்வதாக தெரிய வருகின்றது.

பாரதி எனும் இவர் ஓர் பிரசித்த வியாபாரி ஒருவரின் அந்தரங்க செயலாளராகவும் செயற்படுவதுடன். இவர்களின் இவ்வினவாத



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இயக்கத்திற்கு தோட்டத்தொழிலாளர் சார்பாக உருவாக்கப்பட்டுள்ள பிரதான தொழிற்சங்கமொன்றும் பின்னால் உதவியளிப்பதாகவும் தெரிய வந்துள்ளது.

"எத்த" பத்திரிகையின் இச்செய்தியிலிருந்து இச்செய்தி கற்பனை கலந்து எழுதப்பட்டது என்பது நன்கு புலனாகலாம். அதன் பிரதான நோக்கு இ. தி. மு. க வை தடைசெய்ய வைப்பதும், சிங்கள மக்களை அதற்கெதிராக தூண்டுவதாகவே அமைந்துள்ளது என்பது மேலும் புலனாகலாம்.

இ. தி. மு. க வினர் இலங்கையில் சமதர்ம ஆட்சியினை உருவாக்குவதன் மூலமே சிறுபான்மையினப் பிரச்சினைக்குத்தீர்வு காணமுடியுமெனவும் அதனால் அவ்வாறான முயற்சியில் ஈடுபடும் கட்சிகளுடன் இணைந்து செயற்பட நாம் தயார் என அறிவித்த போதிலும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (மாஸ்கோ.) உட்பட அனைத்து சிங்கள கட்சிகளும் இ. தி. மு. க; தி. மு. க. என்ற பெயரினைக் கொண்டுள்ளமையினால் இலங்கையின் வடக்குப் பிரதேசத்தை தமிழ் நாட்டுடன் இணைக்கும் கொள்கையினை கொண்டுள்ளது, என்ற எண்ணத்தைக் கைவிடவில்லை.

மேலும் இக்காலகட்டத்தில் திரு. என். சண்முகதாசன் தலைமையிலான இலங்கைக் கம்யூனிஸ்ட் (பீக்கிங்) கட்சியில் இளைஞர் அமைப்புத் தலைவர்களில் ஒருவராக செயற்பட்ட திரு. ரோஹனவிஜேவீர பிரிந்து சென்று உருவாக்கிய மக்கள் விடுதலை முன்னணி (சேகுவார இயக்கம்) நாட்டின் சிங்கள இளைஞர்கள் மத்தியில் பலம் பொருந்திய அமைப்பாக வளர்ச்சியுற்றது. அவ்வமைப்பின் தலைவராகவும் சித்தாந்த வாதியுமாக இருந்த திரு. ரோஹன விஜேவீர இ. தி. மு. க ஓர் இனவாத இயக்கமென்ற கருத்தினையே முன்வைத்திருந்தார். தமது அமைப்பின் நிலைப்பாடு சம்பந்தமாக ஐந்து வகுப்புகளை இவர் நடாத்தி வந்ததுடன் அவற்றில் ஒன்று இந்திய விஸ்தரிப்புவாதம் என்ற தலைப்பின் கீழ் நடாத்தப்பட்டது. இவ்வகுப்பில் இந்திய விஸ்தரிப்புவாதத்தின் இறுதியங்கமே இந்திய வம்சாவளித்தோட்டத் தொழிலாளர்கள் என்றும் அதன் பிரதிநிதியாகவே இ. தி. மு. க செயற்படுகின்றது எனும் கருத்தினை முன்வைத்தார். இவ்வகுப்பு தொடர்பாக ஆங்கிலத்தில் வெளியிட்ட தட்டச்சு பிரதியில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

The problem of Estate labour is another that need our attention. Indian labourers were not brought here with any love for our country. They were not brought here to develop our country or to grow the food of our people or to develop our economy. They were brought because the Indian Imperialist wanted cheap labour for their tea eatates the Indian imperialist wanted to earn more profits with cheap labour. When the estate owners left, they left behind these labourers and the problem they created. They left behind these a problem for us. So much so that the estate workers themselves could influence the life of the larger Population of this Country. There are Several Laks of Estate Workers in Ceylon. They enjoy greater Previleges than the People of this Country. In fact one could say that they enjoy Privileges that the ordinary People of this Country do not enjoy. The common People of this Country live in utter destitution in slums, or on rivers and even in river mouths having no proper place to Live in , But every estates workers has a house in the estate and receives an education and even his food from the estate. In fact the estate supplies him with all his needs of life is not difficult for him. But the genuine people of this country and their children have no employment, no fixed employment , no jobs whatsoever, no permannent abode. That is the question This question the indian Problem has become a serious problem for our people. This problem is not what seen on the surface. Underneath it more sublte and tactical operations are taking place We know of a moverment called the Drvida Munnetra Kalagam. This is directed by the We Tamil Movement Illanchellian have come to ceylon and called upon the estate workers in this country to fight to capture political power recently in 1969, A Tamil Pusari called Kundakudi Adikalar had come to Ceylon and stateed that Ceylon had once been a Tamil Kingdom and that they should fight to win it back................

It was also learnt from the reprint in the newspapers and other means that the estate "We Tamil Movement" was being trained to fight.. They are certainly training to fight. this is evidence from what that person called Illanchelian himself has stated (47)

நாட்டில் சமதர்ம புரட்சியொன்றினை நடாத்துவதற்கான நடவடிக்கையில் ஈடுபட்ட மறைந்த ரோகண விஜேவீரவும் தமது இயக்க அங்கத்தினர்களுக்கென நடாத்திய வகுப்புகளில் இந்திய வம்சாவளி மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக இனவாத கருத்தினை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முன்வைத்தமை இ. தி. மு. க வினை சிந்திக்கத் தூண்டியது. இ. தி. மு. க இந்நாட்டில் சமதர்ம ஆட்சி ஒன்றினை ஏற்படுத்துவதையே தமது பிரதான குறிக்கோளாக கொண்டுள்ளமையையும் மற்றும் அதற்கான நடவடிக்கையில் ஈடுபடும் இடதுசாரிக்கட்சிகளுடன் இணைந்து செயற்படத் தயார் எனப் பகிரங்கமாக சிங்களத்தில் அறிவித்த போதும் புதிய இடதுசாரிகளான ஜனதா விமுக்தி பெரமுனவும் (மக்கள் விடுதலை முன்னணி) இ. தி. மு. க வை தமிழக தி. மு. க வின் கிளையென்றும் இனவாத இயக்கமென்றும் கூறியமை இ. தி. மு. க தலைவர்கள் மத்தியில் மீள்சிந்தனைக்கு வித்திட்டது. இடதுசாரிகளின் இவ்வினவாத பிரச்சாரம் தொடர்பாக கலந்துரையாடுவதற்காக பொதுச்சபை 1969 செப்டெம்பர் மாதம் கூடியது.

இப்பொதுக்குழுக் கூட்டத்தில் இனவாதப் பிரச்சாரம் தொடர்பாக ஆழமாகக் கலந்துரையாடப்பட்டது. நாம் விஞ்ஞான சோசலிசக் கருத்துக்களை முன் வைத்தபோதும் தம்மை இனவாத இயக்கம் என நாமம் சூட்டுவதற்கு காரணம் திராவிடர் முன்னேற்றக் கழகம் என்னும் பெயரினைக் கொணடுள்ளமையேயென்பது ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதனால் தந்திரோபாய ரீதியாகப் பெயரை மாற்றுவதென்று தீர்மானிக்கப்பட்டது. எனினும் இ. தி. மு. க என்ற பெயரினை மாற்றினால் சீர்திருத்தக்கொள்கையின் மீதும் தமிழ் தேசியத்தின்மீதும் பற்றுக்கொண்டிருந்த பிரிவினர் தமது இயக்கத்தை விட்டகல்வர் எனும் கருத்து பரவலாக முன்வைக்கப்பட்டது. இறுதியாக இ. தி. மு. க என்றதன் பெயரில் இயக்கத்தினை நடாத்தி செல்வதுடன் இடது சாரி பெயரிலான இயக்கெமான்றினையும் நடாத்திச் செல்லவேண்டும் என இணக்கம் காணப்பட்டது. இதற்கிணங்க கழகத் தலைவர் ஏ. இளஞ்செழியன் இ. தி. மு. க வின் மறைமுகத் தலைவராக இருக்கின்ற அதேவேளை பொதுச்சபை உறுப்பினர் சி. கா. ஆறுமுகம் இ. தி. மு. க வின் தலைவராக செயற்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. மேலும் இளம் சோசலிச முன்னணி என பெயர்மாற்றம் செய்வதாக அறிவிப்பதுடன் இளஞ்செழியன் இவ்வமைப்பிற்கு தலைவராக செயற்பட வேண்டுமெனும் தீர்மானமும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இரு அமைப்புகளுக்குமான தீர்மானங்களை மேற்கொள்வது, அமுல்படுத்துவது என்பதனை வழமையிலுள்ள பொதுக்குழுவே தீர்மானிக்கும் என்பது உள்ளகரீதியாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏற்றுக்கொள்ளப்பட்டது. எனினும் வெளியக ரீதியாக இளம் சோசலிச முன்னணி திரு. ஏ. இளஞ்செழியன் தலைமையில் இயங்கும் என்பதுடன் இ. தி. மு. க திரு. சி. கா. ஆறுமுகம் தலைமையின் கீழ் இயங்கும் என அறிவிக்கப்பட்டது.

இளம் சோசலிச முன்னணி மாக்ஸிய கருத்துக்களை முன்வைக்க ஆரம்பித்தது. இதேவேளை இடதுசாரிகளுடன் கூட்டுச்சேரும் முயற்சியில் ஈடுபட்டது. இச்சந்தர்ப்பத்தில் சமசமாஜக் கட்சியினைவிட்டு வெளியேறிய பாலதம்பு, எட்மன்ட் சமரக்கொடி பிரிவினருடன் பேச்சுவார்த்தை மேற்கொண்டது. இம் முயற்சி வெற்றியளிக்கவில்லை. எவ்வாறாயினும் எதிர்வரும் பொதுத்தேர்தலில் இடதுசாரிகளை ஆதரிப்பது என இ. சோ. மு தீர்மானித்ததுடன் இ. தி. மு. க சார்பில் வடகிழக்கில் வேட்பாளர்களை நிறுத்துவது எனவும் தீர்மானித்தது. இதற்கமைய இ. சோ. மு தென்னிலங்கையில் இடதுசாரிகளை ஆதரித்ததுடன் வடகிழக்கில் முறையே டாக்டர் பூ. ஆ. விசாகரட்னம், பிரான்சிஸ் சேவியர் முதலியோரை வேட்பாளர்களாக நியமித்தது. இருப்பினும் இ. தி. மு. க வின் இரு வேட்பாளர்களும் வெற்றிபெறவில்லை.

தேர்தலின் போது இடதுசாரிக்கட்சிகளை ஆதரித்த இ. சோ. மு. தேர்தலின் பின் இடதுசாரி கூட்டரசாங்கம் மேற்கொண்ட ஜனநாயக விரோத நடவடிக்கைகளை கண்டிக்கத்தவறவில்லை. இடதுசாரி கூட்டரசாங்கம் ஆட்சி பீடமேறிய ஒரு சில மாதங்களுக்குள் பதுளை தீனாக்கொல தோட்டத்தை சார்ந்த அழகர்சாமி, ராமையா என்ற இரு தொழிலாளர்கள் பொலிஸ் துப்பாக்கி சூட்டுக்கு பலியானார்கள். தோட்டத் தொழிலாளர் சுகயீனமுற்றால் மருத்துவ மனைக்கு கொண்டுச் செல்ல வாகனம் வழங்க வேண்டுமெனத் இத்தோட்டத்தொழிலாளர்கள் நிர்வாகியிடம் கோரிவந்தனர். இக்கோரிக்கை புறக்கணிக்கப்படவே தொழிலாளர்கள் வேலை நிறுத்தமொன்றினை மேற்கொண்டனர். தொண்ணூறு நாட்கள் நடந்த இவ்வேலை நிறுத்தத்தை முறியடிக்க நிர்வாகம் பொலீசை அழைத்தது. 1970- செப்டம்பர் முதலாம் திகதி தோட்டத்திற்குள் புகுந்த பொலீசார் மேற்கொண்ட துப்பாக்கி பிரயோகத்தில் காயமடைந்த இவ்விரு தொழிலாளர்களும் 4 நாட்களுக்குப் பின் மரணமடைந்தனர். இப்படுகொலையைக் கண்டித்து நாடெங்கிலும் கண்டனக்கூட்டத்தை நடாத்த இ. சோ. மு முயன்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நோர்வூட் கண்டனக் கூட்டம் திருவாளர்கள் பாலசூரிய [illegible] விஜேவீர, பாலசிங்க, சுப்பிரமணியம், ஏ. இளஞ்செழியன் முதலியோர் வீற்றிருப்பதுடன் திரு. பிளம் சிங்கர் உரையாற்றுகிறார்



திரு. ஏ. இளஞ்செழியன் உரையாற்றுவதுடன் திரு. எஸ். அமிர்தர் அவர்கள் சிங்களத்திற்கு மொழிபெயர்ப்பு செய்கின்றார், அருகில் திரு. ரோகன விஜேவீர அவர்கள் அமர்ந்திருக்கின்றார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதற்கான முதலாவது கண்டனக்கூட்டத்தை நோர்வூட்டில் நடாத்த இ. சோ. மு தீர்மானித்தது. இக்கண்டனக்கூட்டத்தில் பங்கு கொள்ளுமாறு அனைத்து இடதுசாரிக் கட்சிகளுக்கும் தொழிற்சங்கங்களுக்கும் அழைப்பு விடுத்தது. அனைத்து மலையகத் தொழிற்சங்கங்களும் இவ்வமைப்பினை புறக்கணித்தன. ஆயினும் திரு. பாலதம்புவின் புரட்சிகர சமசமாஜக்கட்சியும் மலையக மக்களுக்கு எதிரான நிலைப்பாட்டை கடைப்பிடித்த திரு. ரோகன விஜேவீரவின் மக்கள் விடுதலை முன்னணியும் இவ்வழைப்பினை ஏற்றுக்கொண்டன.

திட்டமிட்டபடி கண்டனக்கூட்டம் நோர்வூட் மைதானத்தில் நடாத்தப்பட்டது ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பங்குபற்றிய கூட்டத்தில் திரு, இளஞ்செழியன் தலைமையின்கீழ் திருவாளர்கள் பாலதம்புவும், ரோகண விஜேவீரவும் உரையாற்றினர். மலையக மக்களைப் பற்றி பிழையான கண்ணோட்டத்தினை கொண்டிருந்த திரு. ரோகண விஜேவீர துப்பாக்கிச்சூட்டினை மட்டுமே கண்டித்தார். மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைப் பற்றி ஒன்றும் கூறவில்லை. மலையக மக்களை இந்திய விஸ்தரிப்பு வாதத்தின் இறுதி அங்கமாகக் கருதிய திரு. விஜேவீர இக்கூட்டத்தில் கலந்துகொள்ள சம்மதித்தமைக்கான காரணம் என்ன என்பது இதுவரை புதிராகவே இருக்கின்றது. ஜே. வி. பி. வழக்கினை விசாரித்த ஆணைக்குழு இவ்விடயம் தொடர்பாக பின்வருமாறு குறிப்பிட்டது.

Allied to the class on "Indian Expansionism" Wijeweera posed the question in regard to the Indian estate sector. This was a problem which was connected with the achievement of economic independence in the tea industry and with the question of unemployment in the hill country. It also posed the problem of the composition of the working class proletariat for the purposes of the successful revolution. It was on this latter issue that Wijweera had ideological differences with Sriwardna. (the 24th Suspect) and Viraj Fernando (the 17th suspect) A Large part of Plantation Proletariat Consisted if cheap tamil labour that had been brought to the country during the British period from india and this consisted of sizable portion of the working class. This proletariat had its roots in India, remitted their earnings to their relatives in their motherland had no loyalities to this country. Their welfare was adequately looked after by two powerful Unions the Ceylon Workers Congress and the Eatate Workers Union headed by a wealthy Landowner



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

who had been granted distinguished citizenship by the Government. Opposition to these Unions was Provided most inadequately by the Young Socialist Front of Illanchellian. Wijeweera was quick to fore see the weakness of relying on this doubtful plantation Sector for the revolution and he proceeded to indicate his distrust for the Indian plantation worker whose loyalites were obviously elsewhere and who would be a ready victim to any allurements offered by the counter revolutionary forces. When he spoke on the same platform with bala tampoe and Illanchillian he was only condermning the shooting of the two estate workers on Keenakella Estate according to marxist theory all workers should unite for successful revolution urban rural and plantation but Wijeweera understandably could not rely on the plantation sector (48)

மலையக மக்கள் தொடர்பாக திரு. விஜேவீர கொண்டுள்ள நிலைப்பாட்டினை அறிந்திருந்த திரு.இளஞ்செழியன் மலையகத்திற்கெதிராக இடதுசாரி புரட்சிகர இயக்கம் ஒன்று கொண்டுள்ள பிழையான நிலைப்பாட்டினை களைக்கவேண்டுமெனும் நோக்குடனே ஜே. வி. பி. இயக்கத்திற்கு அழைப்பு விடுத்தார். திரு.விஜேவீர உரையாற்றியதிலிருந்து விஜேவீர அவர்கள் தமது நிலைப்பாட்டினை கைவிடவில்லை என்பதனை கண்டறிந்தப்பின் தமது உரையில் விஜேவீரவிற்கு பதிலளிக்கும் வகையில் பேசுகையில் இலங்கையில் சோசலிச புரட்சியொன்றை நடாத்த வேண்டுமானால் மலையகத்தின் பத்து லட்சம் தொழிலாளர்களும் அதில் இணையாவிட்டால் அதனை நடாத்தமுடியாது. இலங்கையில் அரசியல் மாற்றத்தை கொண்டுவருவதற்கு தடையாக உள்ளவர்கள் இந்திய சமூகமென்றும் இந்தியாவின் ஆதிக்கம் இவர்களின் மூலம் தான் திணிக்கப்பட்டுள்ளதென்றும் உம்முடைய முன்னணியின் சித்தாந்தம் கூறுகிறது. மொத்தமாக இந்தியர்கள் எனக்கூறுவது பிழையானது. இலங்கையை சுரண்டுவதற்காக வந்தவர்கள் மிக சின்னக் கூட்டமே அக்கூட்டம் உம்முடைய பாஷையில் முகர்ஜிகளாகவும், ஜபர்ஜிகளாகவும், நாடார்களாகவும், செட்டியார்களாகவும், பிள்ளைகளாவும் இருப்பது உண்மை. அச்சிறுக்கூட்டத்துடன் பத்துலட்சம் இந்திய தோட்டத் தொழிலாளர்களையும் உள்ளடக்கி நாடுகடத்தவேண்டும் அல்லது முற்றாக நாசமாக்கவேண்டுமெனக் கூறுவது முற்றிலும் பிழையாகும். இச்சிறு இந்திய முதலாளிக் கூட்டத்தை நாளைக்கு நாடுகடத்த வேண்டுமென நீர் சொன்னால் அது காலங் கடந்த வேலையாகும் அச்சிறு கூட்டத்தை இன்றிரவு பன்னிரெண்டு மணிக்கே நாடுகடத்த வேண்டுமென



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நான்கூறுகின்றேன். அந்தவேளையில் நாம் உம்மோடு இணைகிறோம் ஆனால் பத்து லட்சம் இந்திய தொழிலாளர்களை நாடுகடத்த தயாரானால் அத்தொழிலாளர் வர்க்கம் உங்களை எதிர்த்து போராடும்(49) (இளஞ்செழியனின் இவ்வுரை மறைந்த திரு. எஸ். அமிர்தத்தினால் சிங்களத்திற்கு மொழி பெயர்க்கப்பட்டது.)

நோர்வூட் கண்டனக் கூட்டத்தினைத் தொடர்ந்து திரு. என். சண்முகதாசன் தலைமையிலான இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் (பீக்கிங் விங்) பத்திரிகைகளான கம்கறுவாவும், (சிங்களப்பத்திரிகை) தொழிலாளியும் இக்கூட்டினைப் பற்றி கேள்வியெழுப்பியது. இந்திய வம்சாவழி தோட்டத் தொழிலாளர்களுக்கும், பிரதானமாக தி. மு. க. வுக்கும் எதிராக ரத்தம் உறைந்து போகக்கூடிய விதமாக பிரச்சாரம் நடத்திய உள்ளூர் சேகுவேரா கும்பல் தி. மு. க தலைவருடன் ஒரே மேடையில் பேசியதுபற்றி என்ன விளக்கம் தரப்போகிறார்கள். சேகுவேரா கும்பல் தமது அரசியல் வகுப்புகளில் இந்தியவம்சாவளி தோட்டத் தொழிலாளர்களை இந்திய விஸ்தரிப்பாளர்களின் பகடைக் காய்கள் என வருணிக்கவில்லையா? சிங்கள மக்களைக் காப்பாற்றுவதற்காக தமிழர் ரத்தத்தில் நீந்தப்போவதாக அவர்கள் கூறவில்லையா? இப்படி இருந்தும் உள்ளூர் தி. மு. க தலைவர்களுடன் ஒரே மேடையில் ஏற ஜனதா விமுக்தி பெரமுன தலைவருக்கு எப்படி முடிந்தது? (50)

நோர்வூட் கூட்டத்துடன் பாலதம்புவின் புரட்சிகர சமசமாஜக்கட்சியுடன் உறவைப் பலப்படுத்தி கொண்ட இ. சோ. மு மார்க்ஸிய ரொஸ்கிய வகுப்புக்களை நடாத்துவதற்காக பாலதம்பு மற்றும் பிரின்ஸ் ராஜசூரிய போன்றோரை மலையகத்திற்கு அழைத்து சென்றது. அதேவேளை இளம் சோசலிச முன்னணியின் கீழ் புரட்சிகர தோட்டத்தொழிலாளர் சங்கம் என்ற தொழிற்சங்கத்தை உருவாக்கி தொழிலாளர்களை அணித்திரட்டியது. இத்தொழிற் சங்கத்தின் பொதுச் செயலாளராக அல்வாய் (மாஸ்கோ) ரி. சுப்பிரமணியம் செயற்பட்டதுடன் முறையே பெரிய கட்டுக்கலை மாசிலாமணி தலைவராகவும் தனாதிரியாக பி. எம். லிங்கமும் செயற்படலாயினர்.

இவ்வாறு இ. தி. மு. க. வினர், இளம் சோஷலிச முன்னணி என்ற பெயரில் மார்க்ஸிச கருத்துக்களை மலையக மக்களுக்கு புகட்டலாயினர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஜே. வி. பி. யுடனும் இணைந்து மாபெரும் மே தினமாக மே 2ம் திகதி ஹற்றனில் நடாத்த தீர்மானித்தனர். எனினும் மார்ச் 13ம் திகதி ஜே. வி. பி. தலைவர் விஜேவீர கைது செய்யப்பட்டதுடன் அவர் யாழ்ப்பாண சிறையில் தடுத்து வைக்கப்பட்டார். இக்காலகட்டத்தில் ஜே. வி. பி. யினர் அரசுக்கு எதிராக ஆயுதப் போராட்டத்தை மேற்கொள்வதற்கான தயாரிப்பு வேலைகளை மேற்கொண்டிருந்தனர். யாழ்ப்பாண சிறையில் அடைக்கப்பட்ட விஜேவீர தம்மைச் சந்திக்க வந்த தமது தாயாரின் ஊடாக தம்மை விடுதலை செய்வதற்காக வக்கில் எட்மன்ட் சமரக்கொடியை ஏற்பாடு செய்திருந்தார். ஆயினும் விஜேவீர சார்பாக வாதாட அவரது அமைப்பினர் பாலதம்புவை ஒழுங்கு செய்திருந்தனர். இச்செய்தியினை விஜேவீரவிற்கு அனுப்ப முடியாமல் இருந்தனர்.

இந்நிலையில் ஜே. வி. பி. யின் அரசியல் குழு உறுப்பினர்களான லோக்கு அத்துல, குமாநாயக்க என்போர் திரு. இளஞ்செழியனைச் சந்தித்து யாழ்ப்பாணச் சிறையிலுள்ள தமது தலைவருக்கு மேற்படி செய்தியினை அனுப்ப உதவமுடியுமா எனக்கேட்கலாயினர். இதனை ஏற்றுக்கொண்ட இ. சோ. மு யாழ்ப்பாணத்தைச் சார்ந்த தமது உறுப்பினரான அல்வாய் (மாஸ்கோ) ரி. சுப்பிரமணியத்தை அழைத்து இச்செய்தியினை திரு. விஜேவீரவிற்கு தெரிவிக்குபடி கூறினார். திரு. ரி. சுப்பிரமணியம் யாழ்ப்பாணத்திற்கு சென்ற போதிலும் அவரால் தகவலைக் கொடுக்கமுடியவில்லை.

எவ்வாறாயினும் தாக்குதலுக்கான தயாரிப்பில் ஈடுபட்டிருந்த ஜே.வி.பி யினர் ஏப்பிரல் 2ம் திகதி இரவு திரு. இளஞ்செழியனை வெள்ளவத்தை இல்லத்தில் சந்தித்தனர். ஜே. வி. பி. யின் அரசியல் குழு உறுப்பினர்களான குமாநாயக்க, லொக்கு அதுல, சனத், கருணாரத்ன முதலியோர் திரு. இளஞ்செழியனுடன் கலந்துரையாடியதுடன் தாங்கள் அரசுக்கு எதிராக தாக்குதலை மேற்கொள்ள இருக்கின்ற படியால் அவர்கள் தாக்குதலை மேற்கொள்ளும்போது இ. சோ. மு. வும் மலையகத்தில் தாக்குதலை மேற்கொள்ள முடியுமா எனக்கேட்கலாயினார். இதற்கு பதிலளித்த இளஞ்செழியன் இது தொடர்பாக திரு. பாலதம்புவுடன் கதைக்கும்படி கோரியதுடன் தமக்கு பத்து நாள் அவகாசம் தரும்படி கேட்கலானார். ஏப்பிரல் 31ம் திகதி உங்களை வந்து இருவர் சந்திப்பர் அப்போது உங்களது கருத்தினைக் கூறுங்கள் எனக்கூறி இவர்கள் சென்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

On the night of 2nd April Kumanayake, Loku Atthula., Sanath and karunaratne met Illancheliyan at wellawata and inquired what support the latter could give in the event of J. V. P organising an uprising . Illancheliyan wanted at least 10 day notice to go round and get his supportters in the estate ready (51) எனினும் ஏப்ரல் 5ம் திகதி தாக்குதல்கள் நாடெங்கிலும் மேற்கொள்ளப்பட்டது.

ஏப்ரல் கிளர்ச்சியைத் தொடர்ந்து இ. சோ. மு உறுப்பினர்களும் கைது செய்யப்பட்டனர். ஏப்ரல் 10ம் திகதி தொழிற்சங்கத் தனாதிகாரி பி. எம். லிங்கம் நிர்வாக செயலாளர் என். கருப்பையா என்போர் கைது செய்யப்பட்டதுடன் 11ம் திகதி பதுளை மாவட்ட தலைவர் எம். வீ. கந்தசாமி ஊவா மாவட்ட செயலாளர் என். பி பழனிவேலு முதலியோர் கைது செய்யப்பட்டனர். மே 25ல் சங்க பொதுச் செயலாளர் ரி. சுப்பிரமணியம் கைது செய்யப்பட்டார். இதேவேளை இ. சோ. மு வின் பொதுச்செயலாளர் ஏ. இளஞ்செழியன் ஆகஸ்ட் 17ம் திகதி கைதுசெய்யப்பட்டதுடன் விசாரணையின் பின் 28ம் திகதி விடுவிக்கப்பட்டார். ஆயினும் கைது செய்யப்பட்ட தொழிற்சங்க உறுப்பினர்கள் மூன்று வருடங்களின் பின்பே விடுதலை செய்யப்பட்டனர்.

இ. சோ. மு வின் முன்னணி தொழிற்சங்க உறுப்பினர்கள் கைது செய்யப்பட்ட பின்னர் தொழிற்சங்க நடவடிக்கைகள் முற்றாக ஸ்தம்பிதமடைந்ததுடன் பீதியின் காரணமாக தொழிலாளர்களும் சங்கத்தை விட்டு விலகலாயினர். விசாரணையின் பின் விடுதலை செய்யப்பட்ட திரு. இளஞ்செழியன் தொழிற்சங்கத் தலைவர்களை விரைவில் விடுவிக்க சட்டரீதியான முயற்சிகளை மேற்கொண்டபோதும் பயனளிக்கவில்லை. ஏப்ரல் கிளர்ச்சியினால் இ. சோ. மு பாரியளவில் பாதிக்கப்பட்டது. பெரும்பான்மையான உறுப்பினர்கள் அமைப்புடன் தொடர்பு கொள்வதை நிறுத்திக் கொண்டனர். 1972ல் நாடு வழமைக்குத் திரும்பியவுடன் தமது அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுத்த இளஞ்சோசலிச முன்னணி, இலங்கை திராவிட முன்னேற்றக் கழக செயற்பாட்டினை முழுமையாகக் கைவிட்டது. இ. தி. மு. க வின் தமிழ் தேசிய வாதத்தின் பால் ஆகர்சிக்கப்பட்டு இ.சோ.மு நடவடிக்கைகளில் ஈடுபட்ட உறுப்பினர்கள் தமது செயற்பாடுகளை கைவிட்டனர். ஆயினும் முழுமையான இடதுசாரி அரசியல்வாதியாக மாறிய திரு. இளஞ்செழியன் மார்க்ஸிய ட்ரொஸ்கிய கருத்துக்களை இ. சோ. மு வின் ஊடாக முன்னெடுக்கலானார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இ. தி. மு. க தமிழ் தேசிய வாதத்தைக் கைவிட்டு இடது சாரி கொள்கையினை முழுமையாக பின்பற்றிய வேளையிலேயே தமிழ் மக்களைப் பாதிக்கும் குடியரசு அரசியலைமப்பினையும் பல்கலைக்கழகத் தரப்படுத்தலையும் இடதுசாரி கூட்டரசாங்கம் அறிமுகப்படுத்தியது. இதற்கு எதிராக தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து தமிழர் கூட்டணியை உருவாக்கியது. இவ் அரசியல் அமைப்பிற்கு எதிராக தமிழர் கூட்டணியில் இணையும்படி இ. தி.மு க. உறுப்பினர்கள் திரு. இளஞ்செழியனைக் கோரினர்.

தமிழர் கூட்டணியில் திரு. இளஞ்செழியனின் தலைமையிலான இலங்கை திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்த்துக்கொள்ள தமிழ் பிரமுகர்கள் பலர் தீவிர முயற்சி எடுத்து வருகின்றனர்.............. தமிழர்களின் இக்கட்டான நிலையில் இணைப்பு மீண்டும் சாத்தியமாகலாமென்று சம்பந்தப்பட்ட பிரமுகர்கள் நம்புகின்றனர். (52)

இருப்பினும் திரு. இளஞ்செழியன் இக்கோரிக்கையை நிராகரித்ததுடன் இ. சோ. மு வைக் கட்டியெழுப்புவதில் முழுமூச்சாக ஈடுபட்டார். முழுமையாக இடதுசாரி அரசியல் தத்துவத்தினை ஏற்றுக்கொண்ட திரு. இளஞ்செழியன், தமிழ் தேசியவாதத்தினை கடைப்பிடிக்கும் முன்னாள் இ. தி. மு. க உறுப்பினர் தொடர்ந்தும் அதனை பின்பற்றும் வகையில் இ. தி. மு. க வினை முழுமையாக அவர்களிடம் ஒப்படைக்கலானார்.

இதனைப்பிரகடனப்படுத்தும் வகையில் 1972 டிசம்பர் 24ம் திகதி இ. தி. மு. க பொதுக் குழுக்கூட்டத்தை கொழும்பு வை. சி. டபிள்யூ மண்டபத்தில் கூட்டியதுடன் கழகத்தின் பொறுப்பை சீர்திருத்தக் கருத்தினையும் தமிழ் தேசியவாதத்தினையும் தொடர்ந்தும் பின்பற்ற விரும்பும் பிரிவினரிடம் ஒப்படைக்கலானார். பின்வரும் தீர்மானங்கள் இப்பொதுக்குழுவினால் முன்வைக்கப்பட்டன.

இலங்கை திராவிடர் முன்னேற்றக் கழகம் அரசியல் இயக்கமாகப்பிரகடனப்படுத்தியபின் இந்நாட்டின் பிற்போக்கு இனவாத வகுப்புவாத முதலாளித்துவ சக்திகள் கழகத்தை தமிழக தி. மு. க வுடன் தொடர்புபடுத்தி தமது அரசியல் லாபத்தை பெருக்கிக்கொண்டன. தமிழ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பேசும் மக்களுக்கெதிரிடையாக எழுந்த நெருக்கடியிலிருந்து மீட்பதற்கு அரசியல் இயக்கமாக பிரகடனபடுத்தப்பட்ட கழகத்தில் தமிழ் பேசும் மக்களுக்கு எதிர்பார்த்த எந்தவொரு பலனையும் பெற்றுத்தரமுடியாமல் போய்விட்ட அதேநேரத்தில் எதிர்ச்சக்திகள் சுலபமாகப் பயன்படுத்தும் ஒரு ஆயுதமாக பயன்பட்டது என்பதை கழகம் மறுக்கமுடியவில்லை.

விஞ்ஞானபூர்வமான சோசலிச ஆட்சி முறையில் மட்டுமே பாதிக்கப்பட்ட தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளுக்கும் சிங்களம் பேசும் மக்களின் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணமுடியுமென்ற இலட்சியத்தை இ. தி. மு. க மூலம் அடைய முடியாதென்ற பாடத்தை அனுபவரீதியாகப் பெற்றுள்ளதால் கழகம் அரசியல்ரீதியாக செயல்படுவதை கை விடுவதெனவும் சமூக சீர்திருத்த இயக்கமாக செயல்படுவதெனவும் இக்குழு தீர்மானிப்பதோடு எல்லாத்துறையிலும் சமவாய்ப்பு, சமசந்தர்ப்பம், சமத்துவம் வழங்கும் அறிவியல் பூர்வமான சோசலிஷ இலட்சியத்தைக் கொண்ட அரசியல் இயக்கத்தை ஆதரிப்பதெனவும் இக்குழு தீர்மானிக்கிறது.(53) இத்தீர்மானத்துடன் ஏனைய பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திரு. ஏ. இளஞ்செழியன் இலங்கை திராவிடர் முன்னேற்றக்கழகம் வளர்ந்து வந்த பாதையையும் இன்று தமிழ் மக்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளையும் விவரித்து பேசுகையில் தமிழ் மக்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை அலசவும் ஆலோசிக்கவும் முடிவெடுக்கவும் கூடிய உரிமை தமிழ் மக்களையே பொறுத்தது என்றார். பிறர் ஆணையிடத் தேவையில்லை. நாம் எவருக்கும் அஞ்சத் தேவையில்லை. நாம் பலவீனமாக இருப்பதாலேயே இன்று பயப்படுகின்றோம். தமிழ் மக்களின் ஜனநாயக அடிப்படை உரிமைகளுக்காக குரல் கொடுப்பதில் தவறுமில்லை. இதே வேளையில் இன்னொன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தமிழகத்தலைவர்களுடன் தொடர்பு கொண்டு பேசுவதில் தவறில்லை. ஆனால் அவர்களுடன் பேசுவதால் எமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியாது. எமது பிரச்சினைகளுக்கு நாம் இங்குதான் தீர்வு காணவேண்டும். இதில்தான் எமக்கு நம்பிக்கை உண்டு என்றார்- (54)

திரு. இளஞ்செழியன் முழுமையாக மார்க்ஸிசச் சித்தாந்தத்தில் நம்பிக்கை வைத்து இடதுசாரி இயக்கம் ஒன்றினை கட்டியெழுப்பும் முயற்சியில் ஈடுபட்டிருந்த வேளையிலேயே ஆட்சியிலிருந்த இடதுசாரி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கூட்டரசாங்கம் சிறுபான்மை தமிழ் பேசும் மக்களுக்கெதிரான ஜனநாயக விரோத நடவடிக்கைகளை அமுல்படுத்தியது. 1972ல் உருவாக்கப்பட்ட குடியரசு அரசியலைமப்பு பௌத்த மதத்தினை நாட்டின் மதமாகப் பிரகடனப்படுத்தியதுடன் பல்கலைக்கழகத் தரப்படுத்தலையும் அறிமுகப்படுத்தியது. இவற்றுடன் இதேயாண்டு நிலச்சீர்த்திருத்த சட்டத்தினை அறிமுகப்படுத்தியது. இதன் விளைவாக தோட்டங்கள் அரசுடைமையாக்கப்பட்டன.

குடியரசு சட்டத்தின் காரணமாக தமிழ்பேசும் மக்களின மதவுரிமை இரண்டாந்தரமாக்கப்பட்டதுடன் தரப்படுத்தல் காரணமாக தமிழ் பேசும் இளைஞர்களின் உயர்கல்விக்கு தடைவிதிக்கப்பட்டது. அரசதொழிலையே பிரதான பொருளாதார மார்க்கமாகக் கொண்டிருந்த தமிழ் சமுதாயத்தை இது பெரிதும் பாதித்தது. இதேவேளை நிலச்சீர்த்திருத்ததின் கீழ் அரசுடமையாக்கப்பட்ட பெரும்பாலான பெருந்தோட்டங்களிலிருந்து தோட்டத் தொழிலாளர்கள் விரட்டியடிக்கப்பட்டனர். இந்நடவடிக்கைகள் அனைத்தும் தமிழ் தேசியவாதத்திற்கே உணவளித்தன.

இவ்வனைத்து ஜனநாயக விரோத நடவடிக்கைகளை இளஞ்செழியன் தலைமையிலான இளம் சோசலிச முன்னணியினர் வன்மையாகக் கண்டித்த போதிலும் இடதுசாரிகள் அங்கம் வகிக்கும் அரசினால் இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமையினால் இடதுசாரிகள் பற்றிய தப்பபிப்பிராயம் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் வேரூன்றலாயிற்று. இது இடதுசாரி சித்தாந்தத்துடன் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் முன்னேற முனைந்த திரு. இளஞ்செழியனின் முயற்சிக்கு பாரிய தடையாக அமைந்தது. 1976ம் ஆண்டு தமிழ்க்கட்சிகள் ஒன்றிணைந்து முன்வைத்த வட்டுக்கோட்டை (தமிழ் ஈழம்) பிரகடனம் மற்றும் கம்பளை டெல்டா, சங்குவாரி தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்ட வன்முறைகள் இளஞ்சோசலிச முன்னணியின் செயற்பாடுகளை ஸ்தம்பிதமடையச் செய்தது.

1977 ம் ஆண்டு தமிழ் ஈழப்பிரகடனத்தை முன்வைத்து போட்டியிட்ட தமிழர் விடுதலைக்கூட்டணியினர் பாராளுமன்ற எதிர்கட்சியாக வந்தமை, மற்றும் அதேயாண்டு ஜூலையில் தமிழ்

www.tamilarangam.net

மக்களுக்கெதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறையுடன் தோன்றிய புதிய தமிழ் தேசியவாத அலை இளஞ்சோசலிஷ முன்னணியின் செயற்பாடுகளை முற்றாக ஸ்தம்பிதமடையச் செய்தது.

இ. தி. மு. க மூன்று தசாப்த வரலாற்றுடன் அஸ்தமித்த போதிலும் அது ஓர் வரலாற்றுத் தேவையைப் பூர்த்தி செய்துள்ளது. மலையக மக்களின் அடிப்படை மனித உரிமையான பிரஜாவுரிமைப் பிரச்சினைத் தொடர்பாக மக்கள் போராட்டத்தை இதுவே முன்னெடுத்தது. அதுமட்டுமல்லாது மலையக மககள் மத்தியில் நிலவிய அறியாமை நீங்கி விழிப்புணர்வு ஏற்படுவதற்கும் இ. தி. மு. க வே காரணமாக இருந்துள்ளது. அறுபதுகளில் மலையகத்தில் தோன்றிய மக்கள் கலைஞர்களும் பத்திரிகைகளும் இதற்கான சான்றாக அமைகின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இ. தி. மு. கவும் கலை, இலக்கிய உலகும்

தமிழக திராவிடக்கழகம் தமிழ் மக்கள் மத்தியில் நிலவிய மூடபழக்க வழக்கங்களையும் சாதியத்தையும் களைவதற்கு எவ்வாறு இயல், இசை, நாடகத்துறையைப் பயன்படுத்தியதோ அதேபோல் இ. தி. மு. க வும் இயல், இசை, நாடகத்துறையைப் பயன்படுத்தியது. தமிழக திராவிட இயக்கமும், திராவிட முன்னேற்றக் கழகமும் தமது கருத்துக்களை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்காக இருவகை அணுகு முறையினை பின்பற்றின. எழுத்தறிவற்றோர் பெரும்பான்மையாக இருந்தமையினால் அவர்கள் மத்தியில் தம்கருத்துக்களை பரப்புவதற்காக இயல், இசை, நாடகத்துறையைப் பயன்படுத்தியதுடன் கற்றோர் மத்தியில் தம்கருத்துக்களை புகுத்துவதற்காக எழுத்து துறையை பயன்படுத்தியது. சுயமரியாதை இயக்கத்தினை ஆரம்பித்ததுடன் பெரியார் "குடியரசு" பின்னர் "விடுதலை" போன்ற பத்திரிகைகளை வெளியிட்டார். இப்பத்திரிகைகள் திராவிட இயக்கத்தின் அமைப்பாளனாக செயற்பட்டது மட்டுமல்லாமல் பல, புகழ் பெற்ற இலக்கிய சிருஷ்டி கர்த்தாக்கள் உருவாக களமாக அமைந்தன.

இ. தி. மு. க வும் இதே உபாயத்தையே இலங்கையில் பின்பற்றியுள்ளது. எவ்வாறு தமிழக திராவிட இயக்கம் பொங்கல் திருவிழாவை தமிழர்களின் திருவிழாவாக அங்கீகரித்து அத்தினத்தன்று பட்டிமன்றங்களையும் கலை நிகழ்ச்சிகளையும் நடாத்தி சீர்திருத்தக் கருத்துக்களை பரப்பியதோ அதே போல் இ. தி. மு. க வும் பொங்கல் தினத்தன்று மலையக மற்றும் வட கிழக்குப் பிரதேசத்தில் தமிழ் தேசிய புத்தாண்டு விழாவாக பொங்கல் விழாவினை நடாத்தி வந்துள்ளது. 1950 வரை குடியரசு விடுதலைப் போன்ற தமிழக திராவிட இயக்க பத்திரிகைகளையே தமது இயக்கப் பத்திரிகையாக இ. தி. மு. க பயன்படுத்தி வந்துள்ளது. எனினும். 1950-ல் திரு. ஏ. இளஞ்செழியன் அவர்கள் அறிவுமணி என்ற பத்திரிகையை இ. தி. மு. க சார்பாக வெளிக்கொணர்ந்ததுடன் இ. தி. மு. க சார்பான பத்திரிகைகள் பல வெளிவரத் தொடங்கின. பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் அறுபதுகளிலேயே பெரிதும் வெளிவந்தன. இவ்வாறு வெளிவந்தப் பத்திரிகைகளும் சஞ்சிகைகளும், இ. தி. மு. க வின் சீர்திருத்தக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கருத்துக்களை மட்டுமல்லாது, அக்காலக்கட்டத்தில் தமிழ் மக்கள் முகம் கொடுத்திருந்த பிரச்சினைகளையும் அதற்கான தீர்வுகளையும் தாங்கி வெளிவந்தன. இக்காலக் கட்டத்தில் வெளிவந்த பத்திரிகைகளையும். சஞ்சிகைகளையும் நோக்கும் போது இ. தி. மு. க பத்திரிகைத் துறையிலும் எந்தளவு தாக்கத்தை பாய்ச்சியுள்ளது என்பதனை அடையாளம் காணலாம். முறையே-

| பத்திரிகை சஞ்சிகை | ஆண்டு | ஆசிரியர் |
|---|---|---|
| அறிவுமணி | 1950-51 | ஏ.இளஞ்செழியன் |
| நாம் | 1952 | மு. வே. பெ.சாமி (பதுளை) |
| திராவிடமணி | 1954 | ஏ. இளஞ்செழியன் |
| ஈழமுரசு | 1954 | எப்.ஜீ. ஜெயசிங்கம் (மட்டக்களப்பு) |
| போர்முரசு | 1956 | எப். ஜி ஜெயசிங்கம் |
| இனமுழக்கம் | 1955-56 | அனலைச்செழியன் (யாழ்ப்பாணம்) |
| மாணவமலர் | 1957-58 | க. மனோகரன் |
| முத்தமிழ் முழக்கம் | 1958-59 | ஈழக்குமார், க.ப. சிவம் |
| மலைமுரசு | 1960-61 | க. ப. சிவம் |
| கதிரவன் | 1960 | எப்.ஜி. ஜெயசிங்கம் |
| அண்ணா | 1960 | கதிரவன், கலாநேசன் |
| சங்கம் | 1960 | மா. சே. அருள் |
| திரைக்கலை | 1960 | ஏ. எஸ். மணவைதம்பி |
| உரிமைக்குரல் | 1960 | மு. கா. ராசன், வி.எஸ். முருகன் |
| தேசபக்தன் | 1960 | டி.கலைதாசன், அந்தனிஜீவா |
| மலைமுழக்கம் | 1960 | மு.கந்தையா இல. நாகலிங்கம் கே. ஏ. இராமன் |
| எரிமலை | 1961 | திலகம் அபூபக்கர் (அக்கரைப்பற்று) |
| தி. மு. க | 1962 | மு. அ. வேலழகன் |
| மறுமலர்ச்சி | 1962 | வி.செபஸ்டியான்பிள்ளை (கிளிநொச்சி) |
| முரசு | 1962 | இரா. அதிமணி |
| சமூக முன்னேற்றம் | 1963 | மு. வே. பெ. சாமி |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

| | | |
|---|---|---|
| ஈழமணி | 1963 | ஞானசேகரன் (தமிழ் பித்தன்) |
| தமிழ் முரசு | 1964 | கே. எச். பத்மநாதன், ஈழவாணன் |
| ஈழத்தென்றல் | 1965 | நெ. பி. பழனிவேல் |
| தீ | 1965 | கே.சோமசுந்தரம் இல.நாகலிங்கம் |
| போர்வாள் | 1966 | க. தமிழ்மாறன் |
| போர்வாள் | 1967 | ஏ. இளஞ்செழியன் |
| தாய்நாடு | 1967 | வேலணை வீரசிங்கம் |
| எம். ஜி. ஆர் | 1967 | பெரியசுந்தரலிங்கம் |
| தமிழ் உலகம் | 1968-69 | அ . பொ செல்லையா பி. எஸ். சி. ஆ.நடராசா, பி.எஸ். சீ (யாழ்ப்பாணம்) |
| தூதுவன் | 1969 | டாக்டர் பூ. ஆ விசாகரட்ணம் |
| கலைக்குயில் | 1969 | எம்.எஸ். நாதன் பண்டாரவளை |
| தமிழோசை | 1970 | க. நவஜோதி எம். ஏ. |
| நமது முழக்கம் | 1971 | கு. யா. திராவிடக்கழல் |
| முரசொலி | 1971 | அந்தனிஜீவா |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பேச்சுப்போட்டி நடைபெறும்

வெற்றி அடைவோருக்கு 6 வெள்ளிக் கிண்ணப் பரிசுகள் வழங்கப்படும். பேச்சுப் போட்டியில் தோட்டத்தொழிலாளர்கள் மட்டுமே கலந்து கொள்ள முடியும். முதல் பரிசைப் பெறுவோருக்கு அவர் வசிக்கும் தோட்டம் வரை இலவச கார் சவாரியும் ஒழுங்கு செய்யப்படும் (57)

எனக்குறிப்பிடப்பட்டுள்ளமையிலிருந்து இ. தி. மு. க மலையக பாட்டாளிகளை கலைத்துறையில் ஊக்குவிக்க முயன்றுள்ளமையை அடையாளம் காணலாம்.

கல்லிடைக்குறிச்சி டி. எம். பீர்முகமது கவிஞர் ஈழவாணன், பாட்டாளிக் கவிஞரான குறிஞ்சித் தென்னவன். கவிஞர் மலைத்தம்பி, பலாங்கொடை சந்தானம், ஏ. ரகுமான் , க. ப. சிவம். தமிழோவியன், அந்தனி ஜீவா, தினபதி முன்னாள் துணையாசிரியர். க. தமிழ்மாறன் உட்பட ஐம்பதுகளிலும், அறுபதுகளிலும், தோன்றிய மலையக இலக்கியக் கர்த்தாக்களில் பெரும்பான்மையோர் இ. தி. மு. க வின் உருவாக்கமேயாகும்.

நாடகத்துறையில் நடிகவேள் லடீஸ் வீரமணியை தொடர்ந்து, கலைஞர்கள் என். தாலிப், கலைதாசன், கலைச்செல்வன், கம்பளைதாசன், பீ. ஏ. நெயினார், ஏ. எஸ். ராஜா, உதய சூரியன் முத்தையா, டீன்குமார், எம். பி. பாலன், எஸ். வி. ரஞ்சன் எம் உதயகுமார், பிச்சைத்தம்பி முகைதீன், குறட்செல்வன் குமாரசாமி, எம். எம். ஏ. லத்திர் நடிகைகள் ராஜமனி, ஜெயகௌரி, ஜெயந்தி, முத்துலட்சுமி, சந்திரகலா, இரா. மணிமேகலை, அபுநானா ஜவாகர், பி. ஏ. மோகன். வீ. ஏ. புரட்சிமணி மாதவி கலாமன்ற உசைன் பாருக், ஜவ்பார், வெற்றிவேந்தன், வீரமோகன்(பாருக்), பி. ஏ மாறன்(மீரான்), பி. எம். சேகர், கலையன்பன், அன்பரசன், மீராசந்திரன் (ரஹுத்அலி), திருபாளை நாடக மன்றம் அமரிபு, பஷீர், முத்துமனி, என். எஸ். கே. நாகையா உட்பட பெரும்பான்மையோர் இ. தி. மு. க வின் உருவாக்கமேயாகும். அதுமட்டுமன்று இன்று பாரம்பரிய இடது சாரி அரசியற்கட்சிகளைச் சார்ந்த மலையகத் தொழிற்சங்கத் தலைவர்களில் பெரும்பான்மையானோர் தமது அரசியற் பயணத்தை இ.தி.மு.க பாசறையிலிருந்தே மேற்கொண்டுள்ளார். இவ்வகையில் மலையகத்தின் பொருளாதாரம் தவிர்ந்த அரசியல், சமூக, கலை கலாச்சார துறையில் பாரியத் தாக்கமும் பாய்ச்சலும் உருவாகுவதற்கு இ.தி.மு.க உறுதுணையாக அமைந்துள்ளமையைக் காண முடிகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இளஞ்செழியனின் தனித்துவம்

இ. சோ. மு. வின் செயற்பாடுகள் 1977லுடன் ஸ்தம்பிதமடைந்த போதிலும் (திரு. இளஞ்சேழியன்) பின்னர் இ. சோ. மு. வின் பெயரை புதிய ஜனநாயக முன்னணி என பெயர் மாற்றி இன்றுவரை அரசியலில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. ஆயினும் இ. தி. மு. க வினைப் போல் இ. சோ. மு. யை ஓர் பாரிய அமைபபாக அவரால் உருவாக்கமுடியவில்லை என்பது முக்கிய விடயமாகும். எழுபதுகளின் பின் இடதுசாரிகள் மேற்கொண்ட ஜனநாயக விரோத நடவடிக்கைகளும் அதன் பிரதிவிளைவாகத் தோன்றிய தீவிர தமிழ் தேசியவாதமும் இதற்கான பிரதான காரணமாய் அமைந்தன. எவ்வாறாயினும் திரு. இளஞ்செழியன் குறிப்பாக இந்திய வம்சாவளி மலையக மக்களின் வரலாற்றுத் தேவையொன்றின் பிரதிநிதியாக மூன்று தசாப்தங்களாக பிரதிநிதித்துவம் செய்துள்ளார் என்பது மறைக்க முடியாத உண்மையாகும்.

அல்ஜீரியா சுதந்திர போராட்டத்தின் போது கறுப்பின மக்கள் மத்தியில் நிலவிய தாழ்வுச்சிக்கலை கலைவதில் முக்கிய பங்களித்த பிரான்ஸ் பெனன் பற்றிய நூலினை வெளியிட்ட டேவிட் கவுண் திரு. பெனனின் வரலாற்றுத் தேவையைப் பற்றி குறிப்பிடுகையில் பின்வருமாறு கூறுகின்றார்.

கார்ல் மார்க்ஸ் முதலாளித்துவத்தினால் உருவாக்கப்பட்டார் கரிபால்டி சிசிலிய வறுமையினால் உருவாக்கப்பட்டார். லெனின் தனிமனித ஆட்சியினால் உருவாக்கப்பட்டார். காந்தி பிரித்தானிய ஏகாதிபத்தியத்தினால் உருவாக்கப்பட்டார். பெனன் வெள்ளை மனிதனால் உருவாக்கப்பட்டார். (55) இவ்வகையில் நோக்கும் போது திரு. இளஞ்செழியன் இலங்கை சிங்கள ஆட்சியாளர்களால் உருவாக்கப்பட்டுள்ளார் என்றே கூற வேண்டும். இலங்கை சிங்கள ஆட்சியாளர்கள் 1948ம் ஆண்டு இந்திய வம்சாவளி மலையக மக்களின் குடியுரிமையை பறிக்காதிருந்தால் திரு. ஏ. இளஞ்செழியன் உருவாக்கப்பட்டிருக்க மாட்டார். 1956ம் ஆண்டு தனிச்சிங்களச் சட்டம் இவரது தேவையை மேலும் வலுப்படுத்தியது.

வெள்ளையர்களினால் பிற நாடுகளில் குடியமர்த்தப்பட்ட ஆபிரிக்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கறுப்பின மக்கள் மத்தியிலும் மற்றும் அவர்களது காலனிக்கு உட்பட்ட நாடுகளினது சுதேசிகள் மத்தியிலும் காணப்பட்ட பிரதான பிரச்சினை தாழ்வுச் சிக்கலாகும். இத் தாழ்வுச்சிக்கலே அவர்களது விடுதலைக்கு பிரதான தடையாக அமைந்தது. அமெரிக்க கறுப்பின மக்கள் மத்தியில் தோன்றிய மாட்டின் லூதர் கிங், மேற்கிந்திய நாட்டில் பிறந்து அல்ஜீரியாவில் சேவையாற்றிய பெனன்முதல் நெல்சின் மண்டேலா வரையிலான அனைத்துக் கறுப்பின விடுதலை வீரர்களும் தமது விடுதலைப்போராட்டத்தில் அம் மக்கள் மத்தியில் நிலவிய தாழ்வுச் சிக்கலை களைந்து சுய மரியாதையுடன் வாழப்பழக்குவதனையே முதற் பணியாக மேற்கொண்டனர்.

இதேவேளை அந்நியர் ஆதிக்கத்திற்குட்படுவதற்கு முன்பதாகவே இந்தியாவில் நிலவிய சாதியமைப்பு காரணமாக சுதேச நாட்டிலேயே இரண்டாம்தர பிரஜையாக ஒதுக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் வாழ்ந்த மக்கள் பிரிவினர் சார்பாக டாக்டர் அம்பேத்காரும், ஈ. வெ. ரா. பெரியாரும் பிரித்தானியக் காலத்தில் குரலெழுப்பியதுடன் இம்மக்கள் மத்தியில் சுயமரியாதை உணர்வை வளர்த்தெடுத்தனர். அம்பேத்காரும், ஈ. வெ.ராவும் இருபதுகளிலேயே இச்சுயமரியாதை போராட்டத்தை முன்னெடுத்த போதிலும் ஐம்பதுகளிலேயே ஆபிரிக்க கறுப்பினத் தலைவர்கள் முன்னெடுத்தனர். ஐம்பதுகளிலேயே திரு. இளஞ்செழியனும் பெரியாரின் சுயமரியாதை கொள்கையை மலையகத் தமிழ் மக்கள் மத்தியில் முன்னெடுக்கும் தலைமையினை பொறுப்பேற்றதுடன் நாளடைவில் அதனை நாடுதழுவிய இயக்கமாக பரிணமிக்கச் செய்தார்.

திரு. இளஞ்செழியன் பெரியாரின் சுயமரியாதைக் கொள்கையை இலங்கை தமிழ் மக்கள் மத்தியில் பரப்பும் முயற்சியில் ஈடுபட்ட போதிலும் அதனை இலங்கைக்குரியவாறு முன்னெடுத்துள்ளமையைக் காணமுடிகின்றது. பெரியாரினால் தோற்றுவிக்கப்பட்ட திராவிட இயக்கம் தமிழக மக்கள் குடியேற்றப்பட்ட பெரும்பாலான நாடுகளுக்குப் பரவியதுடன் குறிப்பிட்ட நாடுகளின் அமைப்பாளர்கள் தமிழக தி. க. மற்றும் தி. மு. க தலைமைகளையே தமது தலைமைகளாகக் கருதிச் செயற்பட்டனர். ஆனால் திரு. இளஞ்செழியன் அவ்வாறு செய்யாது பெரியாரின் கொள்கைகளை ஏற்றுக் கொண்டபோதிலும், தமிழகத் தலைமைகளை ஏற்றுக் கொள்ளவில்லை. எவ்வாறு மார்க்ஸ்சியவாதிகள் மார்க்ஸிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சித்தாந்தத்தை ஏற்று தமது நாடுகளில் காணப்படும் சூழலுக்கேற்ப அமுல்படுத்த முனைந்தனரோ அவ்வாறான முயற்சியிலேயே திரு. இளஞ்செழியன் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கதாகும். மலையக மக்கள் யாரைத் தம்மைவிட உயர்வானவர்களாக கருதினரோ அவர்களைத் தமது மேடைக்கழைத்து அவர்களுடன் ஒப்பிட்டு பேசுவதன் மூலம் மலையக மக்கள் மத்தியில் நிலவிய தாழ்வுச்சிக்கலை திரு. இளஞ்செழியன் களைய முனைந்துள்ளார். இவ்வணுகுமுறை இளஞ்செழியனின் தனித்துவ அணுகுமுறையாகும். தி.க மற்றும் தி. மு. க இவ்வணுகுமுறையை பின்பற்றவில்லை. 1961ல் புசல்லாவையில் நடாத்திய பிரச்சாரக் கூட்டமொன்றிற்கு வடபகுதி பேச்சாளர்களான திருவாளர்கள் எம். சிவசிதம்பரம் செனட்டர் மாணிக்கம், எம். திருச்செல்வம் கி. யூ. சி. டாக்டர் எம். வி. நாகநாதன், திரு. அ. அமிர்தலிங்கம் திருமதி. மங்கயர்க்கரசி ஆகியோரை வரவழைத்து ஆற்றிய உரை குறிப்பிடத்தக்கதாகும். திரு. இளஞ்செழியன் தமதுரையில் இங்கு வீற்றிருக்கும் இராணி அப்புக்காத்தர் திருச்செல்வம் அவர்களும் அன்பர் அமிர்தலிங்கமும் கோர்ட்டிலே வழக்குப் பேசும் தலைசிறந்த வழக்கறிஞர்கள். ஆனால் நான் இன்று இவர்களை இங்கு எங்கள் வழக்குப்பேச அழைத்து வரவில்லை. ஏனெனில் அவர்களால் உங்கள் வழக்கை கோர்ட்டில் பேச முடியாது. ஆனால் நான் இங்கு கடந்த இருபது வருஷமாக மக்கள் மன்றம் என்ற கோர்ட்டினிலே உங்கள் வழக்கை பேசிக்கொண்டிருக்கின்றேன். அதனால் நானே தலைசிறந்த வழக்கறிஞன் உங்களுக்கு. இங்கு அமர்ந்திருக்கும் டாக்டர். நாகநாதன் காய்ச்சல் தலைவலிக்கு மருந்து கொடுப்பார். ஆனால் உங்களுக்கு உள்ள நோய் பயங்கரமானது. பிரிட்டிஷ்சாரால் கொண்டு வந்த நாள் முதல் இந்த நோய் உங்களைத் தாக்கி வருகிறது. உங்கள் நோய்க்கான மருந்து இவரது மருந்தகத்திலே இல்லை. அதற்கான மருந்து இ. தி. மு. க மருந்தகத்திலே இருக்கின்றது. அதனால் நானே உங்களது தலைசிறந்த மருத்துவன் (56) இவ்வணுகுமுறை இளஞ்செழியனுக்கே உரித்தானதாகும். அதேவேளை எப்பிரிவினர் மலையக மக்கள் கூலிப்பட்டாளங்கள், பாமரர்கள் எனக்கருதினரோ, அப்பிரிவினர் தமது தலைமையை ஏற்றுகொள்ளும் வகையில் செய்ற்பட்டமை இவரது சிறப்பம்சமாகும். யாழ்ப்பாணத்தையும் மட்டகளப்பையும் சார்ந்த பல பட்டதாரிகளும், பண்டிதர்களும் இவரது தலைமையை ஏற்று இ. தி. மு. க வில் இணைந்தமைக்கு இளஞ்செழியனின் சிறப்பியல்பே பிரதான காரணமாகும். தமிழக திராவிட கழகத்தில் இணைந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செயலாற்றிய இளம் அறிவுஜீவிகள் நாளடைவில் சமூகத்திற் காணப்படும் சாதி ஒடுக்கு முறைக்கு வர்க்க சார்பற்ற அமைப்பு முறையினூடாகவே தீர்வு காணமுடியும் என்ற நிலைப்பாட்டை அடைந்தவுடன் தி. க. வை விட்டகன்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தமை குறிப்பிடத்தக்கதொரு விடயமாகும். பெரியாருக்குப் பின் தி. க. வின் தலைமைப் பொறுப்பை ஏற்பார் எனக்கருதப்பட்ட முன்னணி இளைஞர்களான மா. சிங்காரவேலர், ப. ஜீவானந்தம் போன்றோர் அறிவியல் ரீதியாக பரிணாம வளர்ச்சியடைந்தவுடன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் இணையலாயினார். ஆனால் திரு. இளஞ்செழியன் அவர்கள் அவ்வாறல்லாது இலங்கை தி. மு. க வினையே மார்க்ஸிச அமைப்பாக மாற்ற முனைந்தமை இன்னுமொரு சிறப்பம்சமாகும்.

ஆயினும் மேற்கூறிய சிறப்பம்சங்களைக் கொண்ட இளஞ்செழியன் தம்மை ஓர் மார்க்ஸிய வாதியாகப் பிரகடனப்படுத்திக் கொண்ட பின்னர் தமிழ் மக்கள் மத்தியில் ஒரு இடதுசாரி இயக்கத்தை கட்டியெழுப்ப முனைந்து தோல்வி கண்டமைக்கு புற நிலக்காரணிகள் மட்டுமல்லாது அகநிலைக்காரணிகளும் பிரதான பங்கினை வகித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. தி. க. பாசறையைக் குருக்குலமாகக் கொண்ட திரு. இளஞ்செழியன் இயக்க கட்டமைப்புத் தொடர்பாக பெரியார் கொண்டிருந்த அணுகுமுறையையே கொண்டிருந்தார். தாம் இடும் கட்டளையை நிறைவேற்றுவதற்கான அணியினரையே கொண்டிருந்தார். தாம் வளர்ச்சியடைந்த அளவிற்கு தமது சக அமைப்பாளர்களை வளர்ச்சியடையச் செய்யவில்லை. திரு. இளஞ்செழியனுடன் ஒன்றிணைந்து செயற்பட்ட அமைப்பாளர்களுடன் உரையாடும் போது இவ்வித்தியாசத்தைக் காணலாம். பெரியாரைப்போல் திரு. இளஞ்செழியனும் தமக்கடுத்த ஜெனரல்களை உருவாக்கவில்லை. மாறாக சிப்பாய்க்களையே கொண்டிருந்தார். தம்மைப் பின்பற்றுவோரை உருவாக்கியபோதிலும் தமக்குப்பின் வழிநடத்துபவர்களை உருவாக்கவில்லை. இதுவே திரு. இளஞ்செழியன் ஓர் சித்தாந்தத்திலிருந்து இன்னுமொரு சித்தாந்தத்தை தழுவிய போது தம்மை பின்பற்றுபவர்களை இழப்பதற்கான அகநிலைக்காரணமாக அமையலாயிற்று. தமிழ் தேசியவாதத்தின் கீழ் திரு. இளஞ்செழியனால் பிணைக்கப்பட்டிருந்த உறுப்பினர்கள் திரு. இளஞ்செழியன் மார்க்ஸியத்தை தழுவியதுடன் அவரைக்கைவிடலாயினர். திரு. இளஞ்செழியன் தாம் வளர்ச்சியைடந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதே வேளையில் தமது சக அமைப்பாளர்களையும் (ஜெனரல்கள்) மார்க்ஸிய ரீதியில் வளர்ச்சியடையச் செய்திருப்பாராயின் இவ்வீழ்ச்சியினை ஓரளவு தடுத்திருக்கலாம். ஏனெனில் ஆயிரக்கணக்கான சிப்பாய்களை கொண்டிருந்தாலும் ஓர் இராணுவத்தைக் கட்டியெழுப்புவது கடினம். ஆனால் சில ஜெனரல்களைக் கொண்டிருப்பின் இராணுவத்தைக் கட்டியெழுப்புவது சுலபம். கூற்றிற்கினங்க அவர் ஜெனரல்களை உருவாக்கவில்லை.

மறுபுறம் திரு. இளஞ்செழியனின் சித்தாந்த ரீதியான பரிணாம வளர்ச்சியினை நோக்கும்போது அவர் ஓர் ஆயுதப் புரட்சியிலேயே நம்பிக்கை கொண்டவராக பரிணமித்திருக்க வேண்டும். மலையக மக்களின் அடிப்படை மனித உரிமைப்பிரச்சினைக்காக ஜனநாயக போராட்டங்களை முன்னெடுத்த இ. தி. மு. க உறுப்பினர்கள் காடையர்களினால் தாக்கப்பட்டதுடன் ஆட்சியாளர்களின் நெருக்கடிகளுக்கும் முகம் கொடுத்தனர். இந்நிலையில் ஏனைய இனங்களின் தலைவர்களைப்போல் ஆயுதப்போராட்டத்திலேயே நம்பிக்கை வைத்திருக்கவேண்டும். 1969ல் கெரில்லா யுத்தத்தினைப் பற்றி யாழ்ப்பாணத்தில் உரையாற்றிய போதிலும் அந்நடவடிக்கையை நிராகரித்தார். அத்துடன் ஜே. வி. பி. யுடன் இணைந்து ஆயுதப்புரட்சியை மேற்கொள்வதையும் நிராகரித்தார். இதற்கான பிரதான காரணம் திரு. இளஞ்செழியன் இலங்கை ட்ரொஸ்கி வாதிகளுடன் கொண்ட தொடர்பும் ட்ரொஸ்கிசத்தை ஏற்றுக் கொண்டமையுமேயாகும்.

எவ்வாறாயினும் திரு. இளஞ்செழியன் மலையக மக்களின் வரலாற்றுத்தேவையினை பூர்த்தி செய்வதில் பிரதான பங்காற்றியுள்ளமை அழியா வரலாறாகும். மலையக மக்களின் அடிப்படை மனித உரிமைப்பிரச்சினையான குடியுரிமைப் பிரச்சினை தொடர்பாக முன்னெடுத்த போராட்டங்கள் மற்றும் அம்மக்கள் மத்தியில் நிலவிய அறியாமை, சாதியம், தாழ்வுச் சிக்கல் என்பனவற்றை கலைவதற்காக மேற்கொண்ட நடவடிக்கைகளே மலையக மக்களின் இன்றைய வளர்ச்சிக்கான அடித்தளங்கள் என்றால் அதுமிகையாகாது. தமது வாழ்நாள் முழுவதையும் மக்களின் விடுதலைக்காக அர்ப்பணித்து வரும் திரு. இளஞ்செழியன் மலையக மக்கள் மத்தியில் ஓர் மாற்று இடதுசாரி அமைப்பினைக் கட்டியெழுப்பும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றதுடன், காலத்திற்குக்காலம் தோன்றும் நாட்டின் அரசியல் செல்நெறிகளைக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கருத்திற்கொண்டு, மக்கள் வெகுஜன அமைப்புக்களைக் கட்டியெழுப்புவதிலும் ஈடுபட்டுள்ளார். எண்பதுகளில் இனப்பிரச்சினை உக்கிரமடைந்த வேளை மலையக மக்கள் வடக்கிழக்கு வாழ் தமிழ் மக்களிலிருந்து வேறுபட்ட தனித்துவமான தமிழ் இனம், மற்றும் அவர்களது பிரச்சினைகள் தனித்துவமானது என்பதனை வலியுறுத்துவது அவசியம் எனும் கருத்தினை முன்வைத்து மலையகத்தில் முன்னணி தொழிற்சங்க உறுப்பினர்களை உள்ளடக்கி இந்திய வம்சாவளி ஒடுக்கப்பட்டோர் முன்னணி என்ற அமைப்பினை உருவாக்கி மலையக மக்களின் தனித்துவத்தை பிரகடனப்படுத்தும் முயற்சிக்கு துணை நின்றதுடன், எண்பதுகளின் இறுதியில் மீண்டும் சாதியின் பெயரால் சங்கங்கள் தோன்றுவதனைக் கருத்திற்கொண்டு அதனை எதிர்கொள்ளுமுகமாக, ஒடுக்கப்பட்டோர் மக்கள் பேரவை என்ற வெகுஜன அமைப்பு தோன்றுவதற்கும் உறுதுணையாக இருந்துள்ளார். திரு. இளஞ்செழியனின் ஐம்பதுகள் முதல் இதுநாள் வரையிலான செயற்பாடுகளை நோக்கும்போது எழுபதுகளின் பின் அவரது முயற்சிகள் பெரும்பாலும் வெற்றியடையாத போதிலும் அவர் ஓர் மக்கள் கிளர்ச்சியாளனாக இருந்து வந்துள்ளமையை மறுப்பதற்கில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சான்றாதாரங்கள்


1. பி. இராமமூர்த்தி, திராவிட மாயையா? ஆரிய மாயையா? விடுதலைப்போரும் திராவிட இயக்கமும் ப.137
2. மேலுள்ளதே ப.138
3. Sundaram Lanka Article on Indian Labour in Ceylon, International Lobour Review XXIII No. 3 Geneva 1921, PP 369-387 de Silva K. M. P. 257- ஜீ ஏ ஞானமுத்துவின் Education and the Indian plantation worker in Sri Lanka என்ற நூலில் மேற்கோள் காட்டப்பட்டது. ப. 3
4. G. A. Gnamuthu-Education and the Indian plantation workers in Sri Lanka 4-3
5. Ibid
6. Proceedings of the planter's Association published Annu ally from 1855 Donovan Moldrich-Bitter Berry Bondage the nine teenth century Coffee workers of Sri Lanka என்ற நூலில் மேற்கோள் காட்டப்பட்டது ப.114-15
7. ஈ. வெ. ரா. பெரியாரின் இலங்கை பேருரை
8. மேலுள்ளதே
9. விடுதலை 29-06-1948
10. சுதந்திரன் 12-07-1948
11. மு.கருணாநிதி, நெஞ்சுக்கு நீதி முதல் பாகம் ப.124-25
12. Pieter Keuneman _ One day that shook Ceylon P. 51
13. இலங்கை திராவிடர் முன்னேற்றகழக பொதுச் செயலாளர் இளஞ்செழியனின் அறிக்கை- துண்டுப்பிரசுரம் 22-09-1955
14. மு. கருணாநிதி-நெஞ்சுக்கு நீதி முதல்பாகம் ப.291-92
15. இ. தி. மு. க துண்டு பிரசுரம் 20-12-1957
16. இ. தி. மு. க கொள்கை விளக்கம் 1957
17. துண்டுப் பிரசுரம் 1959
18. D. M. Monnekulame, The Abrogation of 9 Pact Daily News 26-04 -1993
19. Hanzard 14-07 -1962
20. Hansard 18-07 1962




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

21. Ceylon Observer 23-07-1962
22. Hansard 24-07-1962
23. துண்டு பிரசுரம் 1963
24. மாநாடு அழைப்பிதழ் 1963
25. துண்டு பிரசுரம் 1963
26. සවස 13-08-1963
27. සවස 22-08-1963
28. Ceylon daily Mirror 27-08-1963
29. Hanzard 30-08-1963
30. மாநாட்டுத் தீர்மானம் 25-08-1963
31. දිනමිණ 28-08-1963
32. Ibid
33. The Times of Ceylon 01-09-1964
34. ලංකාදීප 19-10-1964
35. தினபதி 30-06- 1968
36. மித்திரன் 31-06-1968
37. Sun 18-09-1968
38. ඇත්ත 15-10-1968
39. The Times of Ceylon 12-03-1969
40. Ceylon daily News 28-03-1969
41. Ceylon Observer 08-06-1969
42. சுதநாடு 19-09-1969
43. Ceylon Daily Mirror 20-09-1969
44. Ceylon Daily News 21-09-1969
45. Ceylon Daily News 08-10-1969
46. Ceylon Daily Mirror 23-09-1969
47. ඇත්ත 29-09-1969
48. Five Classes of JVP- Lesson 2
Indian Expansionism Type print -unpublished
P.3
49. Judgement of the Criminal Justice Commission
(In surgency) Inquiry No. 1 1976,
P.119
50. இளஞ்செழியன் பேச்சு கையெழுத்துப்பிரதி
51. தொழிலாளி 21-11-1970


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

52. Judgement of the Criminal Justice Commission (Insurgency) Inquiry No.1. 1976 p.210
53. செய்தி 20-08-1972
54. தினகரன் 28-12-1972
55. Ibid
56. David Caute -Fanon Fontana Moden Masters P.7
57. இளஞ்செழியன் பேச்சு கையெழுத்துப் பிரதி
58. பொங்கல் விழா துண்டு பிரசுரம் 18-01-1959

SEELAN BOOKS NORWAY SIGNATURE



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உசாத்துணை நூல்கள்


1. அம்பேத்கார் -டாக்டர் .ஸ்ரீனிவாசன்
2. வர்ணாஸ்ரமம் -அண்ணாத்துரை
3. கம்பரசம் -அண்ணாத்துரை
4. ஓர் இலக்கியவாதியின் அரசியல் அனுபவங்கள் -ஜெயகாந்தன்
5. வனவாசம் -கண்ணதாசன்
6. வாழ்க்கைத் துணைநலம் -ஈ.வெ. ரா. பெரியார்
7. திராவிடரியக்க வரலாற்றுக் குறிப்பு - மு.கருணாநிதி
8. கண்ணீர் -தேயிலைச் செழியன்
9. தோட்ட தொழிலாளர் போராட்டம் - பி. ஆர். பெரியசாமி
10. A History of Sri Lanka New Delhi (Oxford university press 1981 - K. M.De Silva
11, A Taste of Bitterness The political economy of tea plantations in Sri Lanka (Free) University press Amsterdam 1986 - Ron Rote
12. Indian Immigration to Ceylon The First phase (c. 1840-1855) CHSS 4(1) Jan 1960 -K. M.De Silva
13. Indian Immigrant plantation Workers in Sri lanka- Colombo 1986. -D.Wesum Peruma
14. Insurgency - 1971 - A. C. Alles
15. Persistent poverty Underdevelopment in plantation economics of the third world (Oxford University Press - 1972) - George Beckford




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## நூலாசிரியரைப்பற்றி..........



பத்திரிகையாளராகவும் ஆய்வாளராகவும் இன்று பலரிடையே அறிமுக மாகியிருக்கும் தோழர் பெ. முத்துலிங்கம், எழுபதுகளில் இடதுசாரி பாரம்பரிய அரசியல், தொழிற்சங்கப் பணிகளில் தம்மை இணைத்துக் கொண்டவர். அதன் தொடர்ச்சியில் தோழமை இயக்கங்களோடு கொண்ட உறவினால் எண்பதுகளில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் பிடிக்குள் சிக்க வேண்டிய நிலையில், இந்தியாவில் சிலகாலம் தலைமறைவு வாழ்க்கையை மேற் கொண்டவராவார்.

பின் இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் பொது மன்னிப்புப் பெற்று இலங்கை திரும்பி, தொண்ணூறுகளில் அரசு சார்பற்ற அபிவிருத்தி நிறுவனத்துறையினூடாக மீண்டும் தன்னை சமூகப் பணியில் பிணைத்து, இன்று அத்துறையில் பல்வேறு புதிய அணுகு முறைகளையும் மாற்றுக் கருத்துக்களையும் முன் வைப்பதனூடாகப் பலரின் கவனங்களையும் ஈர்த்துள்ளார்.

மும்மொழிகளிலும் தேசிய தினசரிகள், சஞ்சிகைகள் ஊடாக தேசிய, சர்வதேச, அரசியல் விவகாரங்களை ஆய்வுக்குட்படுத்தி அவர் வரையும் கட்டுரைகள் வாசகர் மத்தியில் புதிய விழிப்புணர்வை ஏற்படுத்துவனவாக உள்ளன.

தற்போது கண்டி சமூக அபிவிருத்தி நிறுவகத்தின் தலைவராக விளங்கும் பெ. முத்துலிங்கம், மறைந்த சமூகவியல் பேராசிரியர் நியூட்டன் குணசிங்க அவர்களினால் வழி நடாத்தப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. அண்மைக் காலங்களில் தென்கிழக்காசிய நாடுகளில் நடைபெற்ற பல்வேறு கருத்தரங்குகளில் பங்குபற்றியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

எஸ். முரளிதரன்
விரிவுரையாளர்
ஸ்ரீ பாத கல்வியற் கல்லூரி
பத்தனை

சமூக அபிவிருத்தி நிறுவகம்
கண்டி

ISBN 955-9391-00-3

Cover Printed by: Unie Arts (Pvt) Ltd., Colombo

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்